ஜனவரி - மார்ச் : 2009 காலாண்டிதழ் இதழ் - 12

பன்முக சிந்தனைகளுக்கான...

# கூடம்



## ஜனநாயகமும் பொருளாதார அபிவிருத்தியும்

## பால்நிலையும் அபிவிருத்தியும்

## சோசலிசத்திற்கு மாற்று எதுவும் இல்லை


விலை: 100.00

வெளிவந்துவிட்டது.....

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

இதழ் 37-48 விலை 650/-



யாழ்ப்பாணம்

# நாம்
## என்ன செய்யவேண்டும் ?

தமிழில் புதிய சிந்தனைகளின் அறிமுகத்துக்கும் ஆய்வுப் பண்பாட்டு விருத்திக்கும் சாத்தியமான பன்முகக் களங்களை அடையாளப்படுத்தும் நோக்கில் 'கூடம்' வெளிவருகின்றது. இதுவரை பதினொரு இதழ்கள் வெளிவந்துள்ளன. இந்த இதழ்கள் பெரும்பாலும் எமது சிந்தனையிலும் எமது செயற்பாட்டிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

இந்த இதழைப் பயன்படுத்தக் கூடிய முன்னேறிய பிரிவினர் மற்றும் உயிர்ப்புமிகு சிந்தனைச் செயற்பாட்டாளர்கள் பரப்பு மிகக்குறுகியதாகச் சுருங்கி வருகின்றது. இதையும் மீறியிருப்பவர்களும் ஒருவித அறிவுச் சோம்பேறித்தனத்துக்குள் அகப்பட்டுவிட்டனர். இதனால் மாற்றங்களை விளைவிக்கும் அசைவியக்கம், வினைப்பாடுகள் மேலெழுச்சி பெறாமல் உள்ளன. இந்த எதார்த்த நிலைமையைத் தெளிவாக உணர்ந்து கொண்டு தான் 'கூடம்' அறிவுத் தொழிற்பாடுகளில் குறுக்கீடு செய்ய விளைகின்றது. இதனால் பன்முக வாசிப்புகளையும் பன்முகப் புரிதல்களையும் ஊக்குவிக்கின்றது.

மனித சமுதாயம் என்பது இயற்கை விதிகளில் இருந்து முற்றிலும் சுயேச்சையானது. எனவே இது இப்போது இருப்பது போல எப்போதுமே இருக்க வேண்டும் என்னும் அவசியமில்லை. அதை மாற்றுவதற்கான சாத்தியப்பாடு உள்ளது. உலகில் நமக்குள்ள நிலையை ஏற்றுக் கொள்ளவோ மறுக்கவோ நமக்கு சுதந்திரம் உள்ளது. அதை மறுப்பதிலோ மாற்றுவதிலோ தோல்வியடைந்தாலும் கூட அதை எதிர்த்துக் கலகம் செய்ய நமக்கு சுதந்திரம், உரிமை இருக்கிறது. என்றும் மாறாத உலகு தழுவிய எல்லோருக்கும் பொதுவான மனிதசாரம் என்பது ஏதும் இல்லை.

ஒவ்வொரு சூழ்நிலைமையிலும் தேர்வு செய்வதற்கான மாற்றுகள் உள்ளன. தேர்வு செய்வதைத் தவிர நம்மால் செய்யக் கூடியது ஏதும் இல்லை. தேர்வு செய்யாமையைத் தேர்வு செய்வதும் கூட ஒரு தேர்வை மேற்கொள்வது தான். அதாவது சூழ்நிலைக்கு இயைந்து போவதைத் தேர்வு செய்து கொள்வது தான் நமக்குள்ள பொறுப்பு, தேர்வு செய்வதற்கான ஆற்றல் ஆகியன பற்றிய நமது முழுமையான உணர்வு. நமது தேர்வைக் கொண்டு நம்மால் எதைச் செய்ய முடியும் என்பது பற்றிய நமது உணர்வு நமக்கு பதற்றத்தையும் அச்சத்தையும் தருகின்றது.

இதிலிருந்து மீண்டுவரவும் நம்பிக்கை கொண்டு செயற்படவும் நம்மைத் தயார்ப்படுத்தவும் எமக்கு கல்வி வேண்டும். ஆம்! சமூகத்தையும் நம்மையும் தொடர்ந்து விளங்கிக் கொள்ளவும் தொடர்ந்து விளங்கப்படுத்தவும் கல்வி வேண்டும். "இந்தக் கொடூரமான சமூக அமைப்பை எதிர்த்துக் கலகம் செய்கிற தலித்மக்கள் - ஒடுக்கப்பட்ட மக்கள் - முதன்மையாக இரண்டு விடயங்களுக்காகப் பாடுபட வேண்டும். ஒன்று கல்வி. மற்றது, அறிவுப் பரவல்" என்கிறார் டாக்டர் பி. அம்பேத்கர்.

நமக்கு கல்வி ஏன் முக்கியம் என்றால் அநீதியையும் ஒடுக்குமுறையையும் எதிர்ப்பதற்கு முன்பு எந்தப் பொய்களின் மீது அவை கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றதோ அந்தப் பொய்களின் முகத்திரையைக் கிழித்து சரியானபடி அடையாளம் காண வேண்டும். இது கல்வியால் மட்டுமே சாத்தியப்படும் என்கிறார் அம்பேக்கர். ஆக இது கல்வியின் பயன்பாடாக மட்டுமன்றி அறிவு ஜீவிகளின் பணி என்ன என்பது பற்றிய குறிப்பாகவும் இருக்கிறது.

அறிவுஜீவிகள் என்ன செய்ய வேண்டும்? அவர்களது பணிகள் என்ன? யாரை நாம் அறிவு ஜீவிகள் எனக் கூறலாம்? இது போன்ற கேள்விகள் எழுகின்றன. வெறுமனே ஆலோசனைகள் வழங்கும் ஆலோசகரது பணிகள் அல்ல அறிவுஜீவிகள் பணி.

ஆய்வுகளுக்கான உபகரணங்களை வழங்குவது தான் அறிவுஜீவிகளின் பணி. இன்றைய சூழலில் வரலாற்று அறிஞர்களின் அவசிய பணியாகவும் இதுவே இருக்கிறது. இன்றைய சூழலை ஊடுருவிச் சென்று பகுத்தாராயும் பார்வையே இப்போது முக்கியம். பலவீனமான பகுதிகளையும் பலமான புள்ளிகளையும் கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அமைப்பு முறைகளால் சேகரிக்கப்பட்டு அதிகாரமானது பொதித்து வைக்கப்பட்டிருக்கும் நிலைகளையும் கண்டறியும் பார்வையே இன்று அவசியம்

இத்தகைய பார்வைகள் கொண்டு இயங்கும் ஆற்றல் திறன் உள்ளவர்கள் தான் நமக்கு வேண்டும். அறிவார்ந்த கருவிகளை தயாரித்து வழங்கும் அறிவு ஜீவிகள் தான் நமக்கு வேண்டும்.

இந்த நிலவும் சமூகத்தில் ஆட்சி செய்யும் அதிகாரம் ஆதிக்கம் போன்றவற்றைப் புரிந்து கொள்ளவும் மாற்றவும் சாத்தியமான அறிவுக் கருவிகளை வழங்கும் பணியாளர்கள் நமக்கு வேண்டும்.

அதிகாரம் கருத்தேற்பை உற்பத்தி செய்கிறது. மேலும் அது கருத்திசைவை மட்டுமல்ல மௌனத்தையும் உற்பத்தி செய்கிறது. அந்த மௌனத்தை உடைப்பதே எழுத்தாளர்கள், அறிவுஜீவிகளின் பணி என்றார் எட்வர்ட் செய்த். எனவே அறிவுஜீவிகளே பேசுங்கள் அதிகாரத்தை நோக்கிப் பேசுங்கள். அதிகாரத்தை நோக்கி உண்மைகளைப் பேசுங்கள். இதைத்தான் செய்த் தனது மூச்சடங்கும் வரை செய்து கொண்டிருந்தார். பொதுப்புலத்தில் குறுக்கீடு செய்வதற்கு அவர் எழுத்து, இசை மற்றும் அரசியல் விமரிசனங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்தினார்.

நமது சூழலிலும் அதிகாரத்தை நோக்கி உண்மைகளைப் பேசும் அறிவுஜீவிகளின் பணிகள் தொடரப்பட வேண்டும். இவை பல்வேறு தளங்களில் பல்வேறு வடிவங்களில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்ப்புநிலை, ஈடுபாட்டுடன் கூடிய பங்களிப்பு எனப் பல்வேறு நிலைகளிலும் இவை செயல்படக்கூடிய தேவை இன்றுள்ளது.

சூழலை வரையறுப்பது என்பது மட்டுமல்ல குறுக்கீட்டு நடவடிக்கைகளுக்கான சாத்தியங்களைக் கண்டறிவதும் அறிவு ஜீவிகளின் பணியாகிறது. குறிப்பான ஒரு பரப்பில் ஒரு துறையில் மட்டுமே நாம் சிறப்புத்திறமை மிக்கவர் என்கிற பார்வையும் இன்று பொருந்தாது. எமக்கு பன்முக அறிவும் பல்துறை ஆற்றலும் மற்றும் சமூக உணர்வும் மனிதநேயமும் கொண்டவர்கள் தான் தமது பணிகளை ஆற்ற முடியும். இத்தகையவர்கள் தான் இன்று வேண்டும்.

நாம் இவற்றைப் புரிந்து கொண்ட காரணத்தால் தான் 'கூடம்' இதழைச் கொண்டு வருகின்றோம். எமது சிந்தனையிலும் பார்வையிலும் மற்றும் ஆய்வுத் திறனாய்வு நோக்குகளிலும் புதிய தன்மைகளைக் கொண்டுவர விளைகின்றோம். அறிவுஜீவிகளின் பணி பற்றிய உரையாடலை ஏற்படுத்துகின்றோம். இது இன்று நமக்குத் தேவையான செயற்பாடாகின்றது.

இந்த இதழில் அபிவிருத்தி, சனநாயகம், பால்நிலை குறித்த அடிப்படையான பிரச்சினைப்பாடுகளை முன்வைப்பதுடன், ஆசிய மற்றும் மூன்றாம் உலகப் பின்புலத்தில் நமக்கான கருத்தியலை வடிவமைக்கவும் விரும்புகின்றோம். மேலும் "உலகமயமாக்கல்" பின்புலத்தில் நமக்கான தெரிவுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான சிந்தனைகளும் முன்வைக்கப்படுகின்றது.

குறிப்பாக மார்க்சியச் சிந்தனையாளரான சமீர் அமின் நமக்கு அறிமுகமாகின்றார். இவர் சமகால பன்னாட்டு அரசியல் பொருளாதார விவகாரங்களைப் புரிந்து கொள்வதற்கான கருவிகளை முன்வைக்கின்றார். இவை பன்முகச் சிந்தனைக் கிளறல்களுக்கு எம்மைத் தயார்ப்படுத்துகின்றன.

அபிவிருத்தி - சனநாயகம் - பால்நிலை - சுற்றுச்சூழல் போன்ற எண்ணக்கருக்கள் மூலம் மூன்றாம் உலகப் பின்புலத்தில் உள்ள சமூகங்களில் "விடுதலைச் சிந்தனை" எவ்வாறு கட்டமைக்கப்படும் என்பதற்கான 'மாற்றுகள்' முன்வைக்கப்படுகின்றன. மாற்றுச் சிந்தனைக்கான களங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. நமக்கான மாற்று உலகம் வேண்டி எம்மைத் தயார்ப்படுத்த 'கூடம்' விளைகின்றது.

**தெ.மதுசூதனன்**

## உள்ளே...


**ஜனநாயகமும் பொருளாதார அபிவிருத்தியும்**
முனைவர் செ. சந்திரசேகரம் 04

**பால்நிலையும் அபிவிருத்தியும்**
32 அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி

**சமீர் அமின் சோசலிசத்திற்கு மாற்று எதுவும் இல்லை**
தேர்வும் தொகுப்பும் 50



கூடம்

இதழ்: 12 ஜனவரி-மார்ச் 2009 விலை: 100.00

**ஆசிரியர்**
**தெ. மதுசூதனன்**

**ஆசிரியர் குழு:**
க. சண்முகலிங்கம்
சாந்தி சச்சிதானந்தம்
கொ. றோ. கொண்ஸ்ரன்ரைன்


**இதழ் வடிவமைப்பு**
த. மைதிலி

**வெளியீடு மற்றும் தொடர்புகட்கு**
3, Torrington Avenue
Colombo 7
Tel 011 250 6272
E-mail koodam@viluthu.org

# ஜனநாயகமும் பொருளாதார அபிவிருத்தியும்: ஆசியாவில் இலங்கையின் அனுபவம்

**(Democracy and Economic Development: Sri Lanka's Experience in Asia)**

**முனைவர் செ. சந்திரசேகரம்**



*தாராள ஜனநாயக பொறிமுறை ஊடாக நாம் பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்ள முடியும் என்ற வாதம் ஆசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்ட நாடுகளின் அனுபவத்தில் சற்று முரண்படுவதாக காணப்படுகின்றது.*

## 1. அறிமுகம் :-

சமூக விஞ்ஞானத்தில் சமூகவியல், அரசியல் மற்றும் பொருளியல் ஆகிய மூன்று அறிவியலும் ஏனைய சமூக விஞ்ஞானங்களை விட தங்களிடையே உள்ளார்ந்த தொடர்புகளை மிகையாகக் கொண்டுள்ளன.[1-2] சுதந்திரம் பற்றிக் குறிப்பிடுகையில் சமூக விடுதலை, அரசியல் விடுதலை இறுதியாக பொருளாதார விடுதலை என்ற வாதம் சமூகவியலாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. சமூக ரீதியாக விடுதலை அடைந்ததன் பின்னர் அரசியல் சுதந்திரம் பற்றி மனிதன் சிந்தித்தான் என்றும் இறுதியாக இவ்விரண்டு சுதந்திரங்களும் கிடைத்ததன் பின்னர் பொருளாதார சுதந்திரத்தின் ஊடாக வாழ்க்கைத்தர உயர்வையும் அபிவிருத்தியையும் அடைந்து கொள்ள முடியும் என்ற வாதம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகச் காணப்படுகின்றது. மூன்று வகையான சுதந்திரமும் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றே கூறலாம். ஆனால் எந்த சுதந்திரம் முதலில் வழங்கப்பட வேண்டும் என்பதிலேயே பொருளாதார அபிவிருத்தியின் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படுகின்றது. மத்திய அரசாங்கத்தை மக்களின் ஜனநாயக வாக்கு சுதந்திரத்தின் வழி அடிக்கடி மாற்றுகின்ற தாராள ஜனநாயக பொறிமுறை ஊடாக நாம் பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்ள முடியும் என்ற வாதம் ஆசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்ட நாடுகளின் அனுபவத்தில் சற்று முரண்படுவதாக காணப்படுகின்றது.

ஆசியாவில் மேலைத்தேச குறிப்பாக பிரித்தானியாவின் குடியேற்றத்துக்கு உட்பட்டிருந்த இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் தாராள ஜனநாயகத்தை பிரித்தானியாவிடம் கண்மூடித்தனமாக உள்வாங்கியதன் விளைவு அவைகளின் இன்றைய குறைந்த பொருளாதார அபிவிருத்திக்குக் காரணமாகியுள்ளது என வாதிட முடிகின்றது. இக்கருத்து குறைவிருத்தி நிலை என்பது ஒரு வரலாற்றுக் காலனித்துவ பொறிமுறையின் விளைவு என்ற வாதத்தை சற்று வேறுபட்ட பார்வையில் வலுவூட்டுவதாக அமைகின்றது. அபிவிருத்திக்கு ஜனநாயகம் நேர்க்கணியமாக பங்காற்றுகின்றது என்ற வாதம் ஆசியாவின் பொருளாதார வேங்கைகளான சிங்கப்பூர், தென்கொரியா, தைவான் மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளின் அனுபவத்திலும் அண்மையில் சீனாவின் பொருளாதார எழுச்சியிலும் சற்று முரண்பாடு உடையதாகக் காணப்படுகின்றது[3]. இப்பின்னணியில் இலங்கையில் விலை கொடுக்காமல் வழங்கப்பட்ட சுதந்திரத்தின் வழியான ஜனநாயகமயமாக்கல்தான் இலங்கையின் குறைவிருத்தி நிலைக்கு காரணம் என வாதிட முடிகிறது. இலங்கை 1958 இல் பண்டாசெல்வா உடன்படிக்கையின் ஜனநாயக எதிர்ப்புப் பின்னணியில் குறைந்த ஜனநாயகமுடைய ஒரு கட்சி ஆட்சி முறைக்குச் சென்றிருந்தால் தென்னாசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் குட்டி சிங்கப்பூராகி இருக்கும் என எண்ணத் தேன்றுகின்றது.

அபிவிருத்தி என்பது தனித்து பொருளாதாரக் காரணிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்துக்கு அப்பால் வருமானப் மீள்பகிர்வு, வறுமையை ஒழித்தல், ஒழுக்கம், ஜனநாயகமயமாக்கல், ஒப்புரவான வளப்பகிர்வு என பல்வேறுபட்ட விடயங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த போதும், அபிவிருத்தியின் மையம் நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தையும் அதன்பாற்பட்ட தலா வருமானத்தையும் அதிகரித்தல் ஆகும். நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தின் அதிகரிப்பு என்பது தற்காலத்தில் பொருளாதார வளர்ச்சி வீதத்தால் அளவீடு செய்யப்படுகின்றது. எனவே நாட்டின் அபிவிருத்தியானது பல்வேறுபட்ட விடயங்களில் முன்னேற்றத்தை வேண்டி நின்ற போதும் அவற்றுள் பொருளாதார வளர்ச்சி பிரதான பங்கை வகிக்கின்றது. இப்பொருளாதார வளர்ச்சியின் தளத்திலேயே வருமானப் பகிர்வும் சமூக அபிவிருத்தியும் ஊற்றெடுக்கின்றது. பொருளாதார வளர்ச்சி இல்லாத அபிவிருத்தியானது வேரில்லாத மரம் போன்றது. அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான வளங்களை ஒரு நாடு பிறநாடுகளில் இருந்து பெற்றுக் கொண்டாலும், உள்நாட்டில் அவ்வளங்கள் தொடர்ச்சியாக கிடைக்கின்ற போது மட்டுமே அபிவிருத்தியானது தொடர்ந்து நிலைத்து நிற்க முடியும். இந்த வகையில் அபிவிருத்திக்கும் வாழ்க்கைத்தர உயர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சி அவசியமானதாகக் காணப்படுகின்றது.

பொருளாதார சுதந்திரத்தைத் தாமதப்படுத்தி சமூக மற்றும் அரசியல் விடுதலை ஊடாக ஆட்சி மீது நாட்டு மக்கள் எல்லோரும் பங்கு கொள்ள முடியும் என்றும் இப்பங்கு பற்றல் ஜனநாயகம் மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்யும் என்ற கருத்து மேலைத்தேசம் சார்ந்த அபிவிருத்திப் புலமையாளர்களிடையே வேரூன்றி இருக்கின்றது. உண்மையில் ஜனநாயகம் என்பது நடைமுறையில் வர்க்கநலன் பேணும் முதலாளித்துவ அரசுகள் ஏழை மக்களையும் மத்தியதர வர்க்கத்தையும் ஏமாற்றுவதற்கான ஓர் கருவியாகவே காணப்படுகின்றது.

கோட்பாட்டு ரீதியாக ஜனநாயகம் ஊடான பிரதிநிதிகளின் தெரிவுகள் மீது இருக்கின்ற குறைபாடுகளுக்கு அப்பால் வெற்றியீட்டிய அரசாங்கமானது வெற்றிக்கு பங்காற்றிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளதா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. நாட்டின் தலைமையை தெரிவு செய்வதற்கான அரசியல் உரிமையைப் பெற்றுக்கொண்ட மக்கள் ஆட்சியில் தாங்களும் ஒரு பங்காளிகள் என்று பெருமிதம் அடைகின்றார்கள். மக்கள் குறும் காலத்தில் சமூக நல செலவீடுகளில் இருந்து கிடைக்கும் கவர்ச்சிகரமான நன்மைகளுக்காக நீண்டகால நலன்களை அரசியல் தலைவர்களிடம் ஈடுவைத்து அவர்களின் தயவின் மீது எப்-

**அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான வளங்களை ஒரு நாடு பிறநாடுகளில் இருந்து பெற்றுக் கொண்டாலும், உள்நாட்டில் அவ்வளங்கள் தொடர்ச்சியாக கிடைக்கின்ற போது மட்டுமே அபிவிருத்தியானது தொடர்ந்து நிலைத்து நிற்க முடியும்.**

போதும் தங்கியிருக்கும் ஓர் மந்தைக் கூட்டங்களாக மக்கள் மாற்றப்படுகின்றனர்.

இலங்கையில் 1948 இல் இருந்து அதிகாரத்தில் இருந்த முதலாளித்துவ அரசாங்கங்களும் அவற்றின் தலைமைத்துவமும் ஜனநாயக அரசியலில் தங்களின் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு நாட்டின் சமூக நலச் செலவீடுகளையும் இனவாதத்தையும் கருவிகளாகப் பயன்படுத்தி, இனங்களுக்குள்ளும் இனங்களுக்கு இடையேயும் முரண்பாடுகளை உருவாக்கி அமைதியை சீர்குலைத்து நாட்டின் நீண்ட காலப் பொருளாதார அபிவிருத்தியை தங்கள் சுயநல அரசியலுக்காக பலிக்கடா ஆக்கியுள்ளார்கள்.

இக்கட்டுரையானது இலங்கையில் பெரும்பான்மை இனத்தை மையப்படுத்திய ஜனநாயகத்தின் விஸ்தரிப்பானது எவ்வாறு நுகர்வுச் செலவை (சமூக நலச் செலவீடுகளை) அதிகரித்து அவை சமூகமுரண்பாடுகள், யுத்தம் மற்றும் குறை விருத்தி நிலையை அடைய உதவின என்பதை எடுத்து விளக்க முற்படுகின்றது. 1960 களில் இலங்கைப் பொருளாதாரத்தின் பல குறிகாட்டிகள் ஆசியாவில் ஏனைய பொருளாதாரங்களை விடச் சிறப்பாக இருந்துள்ளது. 1950 மற்றும் 1960 களின் ஆரம்பத்தில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும் ஆசியாவின் ஜப்பானை நீக்கி ஏனைய வேகமாக கைத்தொழில் மயமாகிய நாடுகளுக்கும் இடையே அபிவிருத்திக் குறிகாட்டிகளில் பெரிய வேறுபாடு எதனையும் காண முடியாது. சில நாடுகள் (தைவான், தென்கொரியா) பொருளாதார முன்னேற்றத்தில் இலங்கைக்குப் பின்னாலேயே இருந்துள்ளன. ஆனால் இன்று அவ்வாறான பொருளாதாரங்களை விட இலங்கை பல மடங்கு பின்னால் நிற்கின்றது.

**அட்டவணை-1: ஆசியாவில் இலங்கைப் பொருளாதாரத்தின் தலா வருமானம் (*US$*)**

| நாடுகள் | 1962 | 1970 | 1980 | 1990 | 2000 | 2005 |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 150 | 180 | 280 | 470 | 810 | 1170 |
| ஹொங்கொங் | 530 | 940 | 5740 | 12500 | 26980 | 27690 |
| சிங்கப்பூர் | 450 | 950 | 4840 | 11860 | 23030 | 26630 |
| தென்கொரியா | 110 | 270 | 1810 | 6000 | 9800 | 15880 |
| தாய்லாந்து | 120 | 210 | 730 | 1540 | 1990 | 2720 |
| தென் ஆசியா | 76.5 | 116.4 | 264.4 | 379.6 | 444.2 | 692.6 |
| கிழக்கு ஆசியா | 72.01 | 121.8 | 293.6 | 424.7 | 907.1 | 1627.9 |
| இந்தியா | 80 | 110 | 270 | 390 | 450 | 730 |

*Source: World Development Indicator, World Bank's online data base*

**சமூக நலச் செலவீடுகளையும் இனவாதத்தையும் கருவிகளாக பயன்படுத்தி இனங்களுக்குள்ளும் இனங்களுக்கு இடையேயும் முரண்பாடுகளை உருவாக்கி அமைதியை சீர்குலைத்து நாட்டின் நீண்ட கால பொருளாதார அபிவிருத்தியை தங்கள் சுயநல அரசியலுக்காக பலிக்கடா ஆக்கியுள்ளார்கள்.**

1962 இல் இலங்கையின் தலாவருமானம் தென்கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகளின் தலா வருமானத்தை விட உயர்வாக இருந்தது. 2005 இல் இலங்கையின் தலா வருமானம் இந் நாடுகளின் தலா வருமானத்தை விட பல மடங்குகள் குறைவாக இருக்கிறது. உதாரணமாக தென் கொரியாவின் தலா வருமானம் 2005 இல் இலங்கையின் தலா வருமானத்தை விட 12 மடங்குகள் அதிகமாகும். 1962 இல் சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையிலான தலா வருமான இடைவெளி US$ 300 ஆகும். ஆனால் இவ் இடைவெளி 2005 இல் 25450 ஆக ஏறத்தாழ 81 மடங்கு அதிகரித்துள்ளது. இலங்கையில் ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது நீர்வளம், நிலவளம், கடல்வளம், மனிதவளம் என அபிவிருத்திக்கு அவசியமான அனைத்து இயற்கை வளங்களும் சிறப்பாகக் கிடைக்கப்பெற்ற போதும், இலங்கை அபிவிருத்தியில் இந்நாடுகளுடன் ஒப்பிடும் போது தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது. இலங்கைக்கு அன்னிய உதவியிலும் (கடன்கள் + நன்கொடைகள்) தடங்-

கல் இன்றி நிதி வளங்கள் கிடைத்துள்ளன. இவை அனைத்தையும் கொண்டிருந்தும் இலங்கையின் தலா வருமானம் ஏன் அதிகரிக்கவில்லை என்பது ஓர் வினாவாகும்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் இன்னொரு அம்சம் யாதெனில் இலங்கை மெதுவான தலா வருமான அதிகரிப்பையும் ஆண்டுக்கு சராசரி 4.56 வீத (1960 - 2005) பொருளாதார வளர்ச்சி வீதத்தையும் கொண்டிருந்தாலும், சமூக அபிவிருத்தியில் ஜப்பானை அண்மித்து விட்டது என்ற கருத்தாகும். கல்வியறிவு வீதம் எதிர்பார்க்கும் ஆயுட்காலம் மற்றும் சிசுமரண வீதம் போன்றவற்றின் அடிப்படையில் கணிக்கப்படும் பௌதீக வாழ்க்கைப்பண்புச் சுட்டெண் 94 (2004) ஆக 100 ஐ கொண்ட ஜப்பானை அண்மித்து விட்டது என்பது மறுப்பதற்கு இல்லை என்றே கூறலாம். ஆனால் அபிவிருத்திக்கு பயன்படுத்தியிருக்கக் கூடிய வளங்களை புராண கதைகளை அச்சிட்டு இலவசமாக புத்தகத்தையும் இலவசக் கல்வியையும் வழங்குவதன் ஊடாக அதிகரித்த எழுத்தறிவு வீதம் மற்றும் அதிகரிக்கப்பட்ட பட்டதாரிகளின் அளவும் இலங்கையின் உற்பத்திப் பெருக்கத்துக்குப் பயன்படக்கூடிய விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வியைவிட மரபுரீதியாக பேணப்பட்டு வந்த வாழ்க்கைக் கல்வியையே அதிகளவில் வழங்கியுள்ளது. இது தேசிய அபிவிருத்தி மீது கொண்டிருக்கின்ற தாக்கம் என ஆராயுமிடத்து இரண்டு பிரதான விடயங்களைக் குறிப்பிடலாம்.

முதலாவது, இலங்கையின் இலவசக் கல்வியானது நாட்டின் பொருளாதார உற்பத்தி மூலங்களைப் பெருக்கக் கூடிய தொழில்நுட்பம் சார்ந்த கல்வியை வழங்கத் தவறிவிட்டது. அரசியல்வாதிகள் கல்விக்கான மூலதனச் செலவை பெருக்குவதை விட நுகர்வுச் செலவை அதிகரிப்பதன் ஊடாக பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் தொழிற் கூடங்களாக பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் மாற்றப்பட்டன. கல்வியின் அளவு அதிகரித்த போதும் தரம் அதிகரிக்கவில்லை எனலாம். இரண்டாவது, இலவசக் கல்விக்கான வள ஒதுக்கீட்டில் நடுநிலைமைத்தன்மை கடைப்பிடிக்கப்படவில்லை. இது இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் அதிகரிக்க ஓர் காரணமாகியது. இதே போன்றே அரசாங்கத்தின் உணவு மானிய சுகாதார மருத்துவ சமூக நலச் செலவீடுகள் சிசுமரண வீதத்தை குறைத்து ஆயுள்காலத்தை அதிகரித்தது. ஆயுள்கால அதிகரிப்புக் கூட பொருளாதார உற்பத்தி மூலங்களுக்கு வழங்கிய பங்களிப்பை விட மக்கள் நலன்கள் பேணப்பட்டமையால் அரசியல்வாதிகளின் வாக்கு வங்கி பலமடைந்தது. எனவே அரசாங்கம் வழங்கிக் கொண்டிருக்கும் சமூக நலச் செலவீடுகளைத் தொடர்ந்து வழங்குவதற்கு தேவையான கைத்தொழில் மற்றும் விவசாயத்துறை மூலமான வருமான மூலங்களை புறக்கணித்து இச் செலவீனங்களினால் தோன்றிய சமூக அபிவிருத்தியானது நாட்டின் தேசிய வருமான அதிகரிப்புக்கு குறிப்பிடக்கூடிய பங்களிப்பை வழங்கவில்லை என்றே கூறலாம். இன, மத மொழி அடிப்படையில் அறிவூட்டப்பட்ட பெரும்பான்மை புத்திஜீவிகள் கூட ஜனநாயக அரசியலில் இருந்து அரசியல் யாப்பு ரீதியாக சிறுபான்மையினர் ஓரம்கட்டப்பட்டதன் விளைவுதான் இன்றைய பொருளாதார பின்னடைவு என்பதை ஏற்றுக்கொண்டாலும் அதை எழுத்தில் கொண்டுவரத் தயங்குகின்றார்கள்[4].

இந் நோக்கில் இலங்கையில் ஜனநாயகம் சமூகநலச் செலவீடுகள், பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றுக்கு இடையிலான தொடர்பை ஆராய்ந்து ஜனநாயகமயமாக்கல் நாட்டின் அபிவிருத்தி மீது ஏற்படுத்திய தாக்கத்தினை இக்கட்டுரை ஆராய்கின்றது. முதலாவது பகுதி, ஓர் அறிமுகமாகவும் இரண்டாம் பகுதி, கோட்பாட்டுப் பின்னணியையும் மூன்றாவது பகுதி, இவ் எண்ணக்கருக்கள் தொடர்பாக மேலைத்தேசம், ஆசியாவின் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற நாடுகள் மற்றும் இலங்கையின் அனுபவத்தை வெவ்வேறு தலைப்புக்களில் எடுத்துக் கூறுவதுடன் ஐந்தாவது பகுதி முடிவுரையாகவும் அமைகின்றது.

## 2. கோட்பாட்டுப் பின்னணி

ஜனநாயகம், சமூக நலச் சேவைகள் மற்றும் அபிவிருத்தி ஆகிய

**இலங்கை மெதுவான தலா வருமான அதிகரிப்பையும் ஆண்டுக்கு சராசரி 4.56 வீத (1960 - 2005) பொருளாதார வளர்ச்சி வீதத்தையும் கொண்டிருந்தாலும், சமூக அபிவிருத்தியில் ஜப்பானை அண்மித்து விட்டது**

மூன்று எண்ணக்கருக்களும் உள்ளார்ந்த தொடர்புகளைக் கொண்டுள்ளன. ஜனநாயகம் (Democracy) என்பது ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு (Voting Right), அரசியல் பன்முகத்தன்மையும் போட்டித்தன்மையும், (Political Pluralism and Competition) சிவில் உரிமைகள் (Civil Rights), மனித உரிமைகள் (Human Rights), மத்திய மற்றும் மாநில ஆட்சியை அமைப்பதற்கு ஒழுங்கான பொதுத் தேர்தல்கள் (Regular General Elections) போன்ற பிரதான பண்புகளைக் கொண்டுள்ளது.

சமூக நலச் சேவைகள் (Social Welfare Services) இலவசக் கல்வி, இலவச மருத்துவம் சுகாதாரம், இலவச உணவு, இலவச சீர் உடை, நுகர்வுக்கான மானியங்கள் (கோதுமை மற்றும் அரிசி), இலவச நிலம், இலவச வீடு போன்றவற்றை உள்ளடக்கி இருக்கிறது. அபிவிருத்தி (Development) என்பது பொருளாதார அபிவிருத்தி (தலா வருமானம்/பொருளாதார வளர்ச்சி வீதம்) சமூக அபிவிருத்தி (சிசு மரண வீதம், ஆயுள் காலம், எழுத்தறிவு வீதம், ஆண் பெண் சமத்துவம், மனித உரிமைகளை பாதுகாத்தல் ஜனநாயம் மற்றும் தேர்தல்கள்) ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டது.

இம் மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. முதல் இரண்டும் அபிவிருத்தியின் ஒரு பகுதியாகிய சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தும். சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய இரண்டும் அபிவிருத்தியின் இரண்டு இலக்குகள் ஆகும். அபிவிருத்திக்குள் ஜனநாயகம் சமூக நலச் சேவைகள் ஆகிய இரண்டும் இருக்கிறது. அபிவிருத்தியானது பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டது. ஆனால் இந்த இரண்டில் எது முக்கியமானது? எதனை அபிவிருத்தியாளர்கள் முதன்மைப்படுத்த வேண்டும் என்பதிலேயே அபிவிருத்தியின் வெற்றி தங்கியுள்ளது. பொருளாதார அபிவிருத்தி (பொருளாதார வளர்ச்சி) சமூக அபிவிருத்தியை (கல்வி, சுகாதாரம், மருத்துவம், வருமானப் பங்கீடு மற்றும் வறுமையை ஒழித்தல்) ஏற்படுத்துமா? அல்லது சமூக அபிவிருத்தி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துமா? அல்லது இரண்டும் ஒன்றாக முன்னெடுக்கப்பட வேண்டுமா? குதிரைக்குப் பின்னால் வண்டியா? அல்லது குதிரைக்கு முன்னால் வண்டியா? பொருளாதார வளர்ச்சிக்குப் பின்னால் சமூக அபிவிருத்தி செல்ல வேண்டுமா? அல்லது பொருளாதார வளர்ச்சிக்கு முன்னால் சமூக அபிவிருத்தி செல்ல வேண்டுமா? குதிரை வண்டியை இழுக்க வேண்டுமா? அல்லது வண்டி குதிரையை இழுக்க வேண்டுமா? பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு சமூக அபிவிருத்தி அடையப்பட வேண்டுமா? அல்லது சமூக அபிவிருத்தியைக் கொண்டு பொருளாதார வளர்ச்சியை அடையலாமா?

பொருளாதார வளர்ச்சிதான் (GDP or தலா வருமான அதிகரிப்பு) முதலில் அடையப்பட வேண்டும். பொசிந்து செல்லல் கோட்பாட்டின் படி (Trickle Down Theory) உயர் நிலத்தில் தண்ணீர் (GDP) தாராளமாக இருந்தால்தான் அது தாழ் நிலத்துக்கு பொசிந்து செல்லும். வளர்ச்சி இல்லாமலே வருமான பங்கீட்டுக்கோ அல்லது சமூக அபிவிருத்திக்கோ செல்லக் கூடாது. உதாரணமாக சீனா ஒரு சோஸலிச நாடாக இருந்தும், கிழக்குக்கும் மேற்குக்கும் இடையில் பாரிய வருமானச் சமமின்மை இருக்கிறது. மலேசியாவில் சிறுபான்மை சீன இன மக்களின் வருமானம் ஒப்பீட்டு ரீதியில் பெருபான்மை மலே மக்களை விட உயர்வானதாகும். ஒரு இனம் அல்லது பிரதேசம் எந்த நாட்டின் பொருளாதார வரலாற்றிலும் முன்னணி வகித்ததுடன் அவை வருமானம் மற்றும் வாழ்கைத்தரத்திலும் ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது உயர்வாக இருந்துள்ளன. வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அபிவிருத்தியின் ஆரம்ப கட்டத்தில் ஒன்றாக அடைய முடியாது. அவ்வாறு அடைய முற்பட்டால் அந்நாடு இறுதியில் இரண்டையும் இழக்கும். தண்ணீரே இல்லாமல் பொசிந்து செல்லல் பற்றிச் சிந்திக்க முடியாது. பொருளாதார வளர்ச்சி இன்றி அபிவிருத்தி பற்றிச் சிந்திக்க முடியாது. 'நாடுகளின் செல்வம்' என்ற நூலில் (இன்று செல்வத்தின் அளவீடு தலாவருமானம் அல்லது பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகும்) அடம்சிமித் வளர்சிக்குத்தான்

**சமூக அபிவிருத்தி ஆகிய இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டது. ஆனால் இந்த இரண்டில் எது முக்கியமானது?**

முக்கியத்துவம் கொடுக்கின்றார். கெயின்ஸ் அரசாங்கத் தலையீட்டை வற்புறுத்துகின்றாரே தவிர அவர் அத்தலையீட்டை சமூக அபிவிருத்திக்கோ அல்லது வருமான மீள்பங்கீட்டுக்கோ பயன்படுத்த அல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கெயின்ஸ் ஒரு சோசலிசவாதி அல்ல. மாறாக முதலாளித்துவத்தில் இருக்கின்ற குறைபாட்டை எடுத்துக் கூறி முதலாளித்துவத்தை வளப்படுத்தியுள்ளார் (Snowdon and Van, 2005). பருநிலைக் பொருளாதார குறிக்கோள்களிலும் பொருளாதார வளர்ச்சிதான் தலையானது. ஏனையவை பின்னர்தான். அபிவிருத்திக் கோட்பாட்டிலும் பொருளாதார வளர்ச்சிக்குப் பின்னர்தான் மற்றவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.




ஏன் பொருளாதார வளர்ச்சியை விட சமூக அபிவிருத்தியை அல்லது சமூக நலனைச் சார்ந்த வளர்ச்சியை பல்லின கட்சியைக் கொண்ட ஜனநாயக அரசுகள் முதன்மைப்படுத்துகின்றன? சுயநல அரசியலுக்காகவும் (Pork Barrel Politics) வாக்கு வங்கியை தக்க வைப்பதற்காகவும் பொருளாதார வளர்ச்சியை விட சமூக அபிவிருத்தி முதன்மைப்படுத்தப்படுகின்றது. பழமரம் இல்லாமலே கனியை ருசிக்கிறார்கள். கடன் மற்றும் அன்னிய உதவிகள் பெற்று இறக்குமதி மூலம் இவ் அபிவிருத்தி முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. பாரிய விவசாயப் பண்ணைகள், பாரிய கைத்தொழில்சாலைகள், பாரிய பாலங்கள், தரமான விரைவான வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள், புகையிரதப்பாதைகள், துறைமுகங்கள், விமானத்தளங்கள், அணைக்கட்டுக்கள், நீர்த்தேக்கங்கள் போன்றவற்றை அமைத்து சுறுசுறுப்பான நீண்ட காலத்தை நோக்காகக் கொண்ட வளர்ச்சியை அடைவதை விட, இலவசக்கல்வி, உணவுமானியம், காணிப்பகிர்வு, சிற்றுடைமை தொழில்களுக்கான ஊக்குவிப்புகள் மற்றும் நுண்ணியல் நிதி வசதிகள் (Micro Finance) போன்றவற்றின் மூலம் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவது அரசியல் வாதிக்கு இலாபகரமானது. வாக்கு வங்கி பலமடைகிறது. நிதி வழங்குகின்ற நாடுகளுக்கும் நிறுவனங்களுக்கும் இவ்வாறான சிறிய தொழில் முயற்சிகள் அவர்களுடைய நாட்டின் தொழில்களுக்கு போட்டியை உருவாக்கி ஆபத்தைக் கொடுக்காது. உள்நாட்டு ரீதியாக ஆட்சியாளர்கள் ஜனநாயக ரீதியாக இச்சேவைகளை வழங்கி மக்களைப் பாதுகாக்கின்ற பாதுகாவலன் எனக் காட்டுவதன் மூலம் என்றுமே தங்களில் தங்கியிருக்கின்ற உற்பத்தித்திறன் அற்ற ஏழ்மை மக்களை உருவாக்கியுள்ளன.

மறுபுறத்தில் சர்வதேச ரீதியாக வளர்ந்த நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளுக்கு இவ்வாறான சிறிய திட்டங்களுக்கு நிதி வழங்குவதன் ஊடாக தங்களுக்கான வர்த்தக சூழலை உருவாக்கி வர்த்தக நலன்களை பெற்றுக் கொண்டு, ஏழை நாடுகளின் அபிவிருத்தி மீது அக்கறை உள்ளவர்கள் எனக் காட்டுவதன் மூலம் என்றுமே தங்களில் தங்கியிருக்கின்ற கைத்தொழில்மயமற்ற நாடுகளை உருவாக்குகின்றன. உள்நாட்டு மற்றும் சர்வதேச இரு முதலாளித்துவங்களும் தங்களின் நலன்களை ஜனநாயகம் ஊடாக அபிவிருத்தி என்ற மாயையைக் காட்டி அடைகின்றன. எந்த ஒரு நாடு இந்த உண்மை நிலையை புரிந்து சிறந்த தூர நோக்கு உள்ள தலைமைத்துவத்தின் கீழ் அபிவிருத்தியின் ஆரம்ப கட்டத்தில் ஜனநாயகத்தை கட்டுப்படுத்துகின்றனவோ (குறைந்தது 20 வருடங்களுக்காவது மத்திய அரசை மாற்றாத ஆட்சி) அவை இந்த ஜனநாயக நச்சு வட்டத்தை உடைத்துக் கொண்டு அபிவிருத்தியில் மிக வேகமாக முன்னேறுகின்றன.

EG = f(PCA, HCA,……N)

EG - பொருளாதார வளர்ச்சியும், PCA - பௌதீக மூலதனத் திரட்சியையும், HCA - மனித மூலதன திரட்சியும், N - நல்லாட்சி, வரலாறு, இன ஒற்றுமை, மொழியின் தன்-

**ஏன் பொருளாதார வளர்ச்சியை விட சமூக அபிவிருத்தியை அல்லது சமூக நலனைச் சார்ந்த வளர்ச்சியை பல்லின கட்சியைக் கொண்ட ஜனநாயக அரசுகள் முதன்மைப்படுத்துகின்றன?**

மை, அரசியல் உறுதிப்பாடு, ஜனநாயகம், சாதி, மதம், கலாசாரம், மனப்பாங்கு போன்ற பொருளாதாரமற்ற காரணிகளையும் குறிக்கின்றது. தொழில்நுட்பம் PCA மற்றும் HCA க்குள் இணைக்கப் பட்டுள்ளது.

மூலதனம்தான் அபிவிருத்தியின் மையம் ஆகும். வளர்ச்சிக் கோட்பாடுகளான Big Push Theory, Rostow"s Take off period, Domer"s growth model, Solow"s வளர்ச்சி மாதிரி, Romer"s வளர்ச்சி மாதிரி எல்லாமே மூலதனத்தின் முக்கியத்துவத்தை விளக்குகின்றன. மூலதனம் இருந்தால் ஊழியத்தை வளப்படுத்தலாம், தொழில்நுட்பத்தைக் கூட மூலதனம் இருந்தால் பெற்றுக் கொள்ளலாம். சிங்கப்பூரில் Lee Kuan Yew இன் அரசாங்கத்தில் இருந்த நிதி அமைச்சர் மூலதனம் தான் அபிவிருத்தியின் மையம் என்கிறார்[5].

மூலதனவாக்கம் முதலீடு மூலம் கிடைக்கிறது. முதலீடு சேமிப்பால் ஏற்படுகிறது. தனியார் மற்றும் அரச சேமிப்பை எப்படி அதிகரிக்கலாம். தனியார் மற்றும் அரசாங்கமானது உள்நாட்டில் நுகர்வைக் குறைப்பதன் ஊடாக சேமிப்பை அதிகரிக்கலாம். ஜனநாயக ஆட்சி உள்ள வளர்ந்து வரும் நாட்டில் அரசாங்கத்தின் பாரிய செலவு மீண்டெழும் சமூக நலன் சார்ந்த நுகர்வுச் செலவினங்களாக உள்ளன. ஒரு சிறிய கட்டடத்துக்குள்ளே ஒரு பல்கலைக்கழகத்தையே நடாத்துகின்றார்கள். பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறதே தவிர தரமோ அல்லது உள்கட்டுமான வசதிகளோ மாணவர்களின் அதிகரிப்பு வீதத்தை விடக் குறைவாக இருக்கிறது. வளர்ச்சிக்கான அடித்தளம் இல்லாமல் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யாத சமூக அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகின்றது.

இங்கு வளர்ச்சி என்பது பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கின்றது. அவ்வளர்ச்சி இருந்தால்தான் நாம் சமூக அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திக்கலாம். வளர்ச்சிக்கு மூலதனத் திரட்சி அவசியமானதாகும். மூலதனத் திரட்சிக்கு முதலீட்டுச் செலவு அவசியமானதாகும். முதலீட்டுச் செலவுக்கு சேமிப்பு அதிகரிக்க வேண்டும். சேமிப்பு அதிகரிப்பதற்கு தனியார் மற்றும் அரசின் நுகர்வுச் செலவு குறைக்கப்பட வேண்டும். இந்த நுகர்வுச் செலவை தாராள மயப்படுத்தப்பட்ட ஜனநாயக ஆட்சி முறையின் மூலம் குறைக்க முடியாது. ஆசியாவில் ஜனநாயக அரசுகள் உள்ள நாடுகளில் முதலீட்டுச் செலவு குறைவாகவும் ஜனநாயகம் குறைந்த நாடுகளில் முதலீட்டுச் செலவு அதிகமாகவும் இருக்கின்றது.

குறைந்த ஜனநாயக ஆட்சி (மென்மையான சர்வதிகார ஆட்சி- Soft Dictatorship Regime, எதேச்சை அதிகார ஆட்சி - Authoritarian Regime, ஒரு கட்சி ஆட்சி, இராணுவ ஆட்சி) தூரநோக்குக் கொண்ட சிறந்த தலைமையின் கீழ்மூலதனவாக்கம், அமைதி, நல்லாட்சி, வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI), பொருளாதாரக் கொள்கையின் நீடித்ததன்மை போன்றவற்றின் ஊடாக பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமாக பங்களிப்புச் செய்கிறது. மூலதனதிரட்சிக்கு பயன்படுகின்ற சேமிப்பானது பல்லின கட்சி அரசியலில் சமூக நலச் செலவீடுகளுக்கு பயன்படுத்துகின்ற போது மக்கள் வினைத்திறமை இல்லாத ஊழியமாக மாற்றப்படுகின்றார்கள். நாடு மூலதன திரட்சியில் அதி உந்துதல் (Big push) அல்லது நுகர்வுச் செலவைக் குறைத்து மூலதனச் செலவை அதிகரிக்கின்ற விடுபடு நிலையை (Take off) அடையாது. அதிகரித்த சமூக நலச் செலவீடுகள் மக்களை வினைத்திறனற்றவராக்குகின்றது[6].

### 3. நாடுகளின் கடந்தகால அனுபவங்கள் (Past Experiences)

உலகில் பல நாடுகளில் குறைந்த ஜனநாயக ஆட்சி முறை பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வாறு பங்காற்றியுள்ளது என்பதை பின்வரும் தலைப்புக்களில் நோக்கலாம்.

#### 1. ஜனநாயகமும் மூலதனத் திரட்சியும்

பொருளாதாரத்தின் உச்ச நிலையில் இருக்கும் இன்றைய மேலைத்தேச நாடுகள் அவைகளின் ஆரம்ப காலத்தில் தாராள ஜனநாயகம் மற்றும் மனிதனின் உரிமைகள் அனைத்தையும் தியாகம்

**இன்றைய மேலைத்தேச நாடுகள் அவைகளின் ஆரம்பகாலத்தில் தாராள ஜனநாயகம் மற்றும் மனிதனின் உரிமைகள் அனைத்தையும் தியாகம் செய்துதான் இன்றைய பொருளாதார சுபீட்சத்தை அடைந்தன.**

செய்துதான் இன்றைய பொருளாதார சுபீட்சத்தை அடைந்தன[7].

இன்றைய வளர்ந்த நாடுகள் அவைகளின் அபிவிருத்தியின் ஆரம்ப கட்டத்தில் மூலதன திரட்சியை பெற்ற வரலாறு இன்றைய அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்து வேறுபடுகின்றது. குடியேற்ற நாட்டில் சுரண்டப்பட்ட செல்வம் தாய்நாடுகளின் மூலதனவாக்கத்தை அதிகரித்தது. முதலாளித்துவ வர்க்க நலன்சார்ந்த அரசுகள் தங்கள் நாட்டுக்குள்ளேயே தொழிற்சங்கங்களை கட்டுப்படுத்தியுள்ளன. பெண்கள், சிறுவர்கள் கால வரையறை இன்றி தொழிற்சாலைகளில் சுரண்டப்பட்டனர். குடியேற்ற வாசிகள் அடிமை போன்று நடாத்தப்பட்டனர். நவகாலனித்துவம் ஊடாகவும் இன்றும் இச்சுரண்டல் நடைபெறுகின்றது. வளர்ந்த பின்னர் தாராள ஜனநாயகத்துக்கு வந்தனர். சமூக நலச் செலவீடுகளை செய்கின்றன. ஜனநாயகம் பற்றி அதிகம் கருத்து வெளியிடுகின்ற USA இல் இன்று கூட எல்லா கட்சிகளும் ஆட்சிக்கு வர முடியாது[8]. மிக அண்மைக் காலத்தில்தான் குடியேற்ற வாசிகளான கறுப்பு இன சிறுபான்மையினருக்கு அமெரிக்கவில் சம உரிமை கிடைத்தது. உலகத்தில் பல குடியேற்றங்களைக் கொண்டிருந்த பிரித்தானியாவே இன்று பொருளாதாரத்தில் கீழ் நிலைக்கு சென்றமைக்கு காரணம் தாராள ஜனநாயகத்தால் தூண்டப்பட்ட நலச் செலவாக இருக்கும் போது, வளர்ந்து வரும் நாம் எப்படி இதைத் தொடர முடியும். பிரிட்டனின் வீழ்ச்சிக்குக் கூட தொழில்கட்சி அரசாங்கத்தால் தூண்டப்பட்ட சமூக நலச்செலவீடுகள் காரணமாகின[9].

புதிதாக கைத்தொழில்மயமாகிய நாடுகள் (NICs), மற்றும் மலேசியா சீனா போன்றன இன்றைய உலக ஒழுங்கில் பிறநாடுகளில் வளங்களை சுரண்டி மூலதனத் திரட்சியை உருவாக்கி தங்கள் நாடுகளை வளப்படுத்த முடியாது உள்ளது. இதனால் தங்கள் நாட்டு மக்களின் தாராள ஜனநாயக மரபுகளை கட்டுப்படுத்துவதன் ஊடாக நுகர்வைக் குறைத்து மூலதனத் திரட்சியை உருவாக்கி வளர்ச்சியைப் பெற்று அபிவிருத்தியை எய்தினர், எய்திக்கொண்டு இருக்கின்றனர். இந்த அபிவிருத்தி அணுகுமுறையானது இன்று உள்ள ஜனநாயக மரபுக்கு முரணானதாக இருக்கலாம். ஆனால் மூலதனத் திரட்சி ஏற்பட்டு மூலதன இருப்பு அதிகரிக்கும் வரையாவது இதை தொடர வேண்டி இருக்கிறது.

ஆசியாவில் வேகமான பொருளாதார அபிவிருத்தியை அடைந்த நாடுகள் ஜனநாயகத்தைக் கட்டுப்படுத்தி சமூக நலச் செலவீடுகளைக் குறைத்து மக்களை உற்பத்தித் திறன் உள்ள ஊழியர் வர்க்கமாக மாற்றி, மூலதனத் திரட்சியை உருவாக்கி, அமைதியை எய்தி, நல்லாட்சியை உருவாக்கி வேகமான நீண்ட கால வளர்ச்சியை பெற்று சமூக அபிவிருத்தியை அடைந்தார்கள். இவ் அணுகுமுறையின் வெற்றிக்கு அரசியல் தலைமைத்துவத்தின் பங்கும் குறிப்பிடக் கூடிய பங்கை ஆற்றியது. ஆசியாவில் இந்தோனிசியா, பிலிப்பின்ஸ், பாகிஸ்தான் ஏன் இலங்கை 1978 இன் பின்னர் குறைந்த ஜனநாயகத்தைக் கொண்டிருந்தும் உயர்ந்த அபிவிருத்தியைப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




இலங்கை போன்று சிங்கப்பூர் பிரித்தானியக் காலனித்துவத்தில் இருந்து விடுபட்ட போது நாட்டின் தலைவர்களும் மற்றும் கொள்கை வகுப்பாளர்களும் தாராள ஜனநாயகத்தையும் சமூகநல அரசையும் உருவாக்கவில்லை. கேம்பிறிஜ் பல்கலைகழகத்தில் கல்வி கற்ற உயர் ஆளும் வர்க்கத்தினர் பல ஆண்டுகள் உலகிலே குடியேற்றங்களை கொண்டிருந்து தாய் நாட்டின் செல்வத்தை அதிகரித்த பின்னர் ஆட்சிக்கு வந்த தொழில் கட்சி பிரித்தானியாவில் கடைப்பிடித்த

**புதிதாக கைத்தொழில் மயமாகிய நாடுகள் மற்றும் மலேசியா சீனா போன்றன இன்றைய உலக ஒழுங்கில் பிறநாடுகளில் வளங்களை சுரண்டி மூலதன திரட்சியை உருவாக்கி தங்கள் நாடுகளை வளப்படுத்த முடியாது உள்ளது.**

தாராள ஜனநாயகத்தில் கட்டியெழுப்பப்படும் சமூக நல அரசை உருவாக்குவதை தவிர்த்தார்கள். உயர் கல்வியால் கிடைக்கின்ற அனுபவத்தை கல்வி கற்ற நாட்டில் இருந்து கண்மூடித்தனமாக பிரதியீடு செய்து தமது தாய்நாட்டில் கடைப்பிடிக்காமல் அவற்றை புத்திசாலித்தனமாக பின்பற்றி உள்ளனர் (Wise copy VS Blind copy from Wastern). இந்த வகையில் லீ ( Lee Kuan Yew) சிறந்த நடைமுறை வாதியாக மிளிர்வடைந்துள்ளார்[10]. சிங்கப்பூரில் மேலைத் தேசத்தை திருப்திப்படுத்துவதற்காக பல கட்சிகள் இருந்தாலும் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வராதபடி ஒரு கட்சி (PAP) ஆட்சிமுறையை நடைமுறைப்படுத்தினார். நுகர்வுச் செலவு குறைந்தது முதலீட்டுச் செலவு அதிகரித்தது. குறுகிய காலத்தில் நாட்டின் தேசிய வருமானமும் மக்களின் வாழ்க்கைத் தரமும் அதிகரித்தது.

**சிங்கப்பூரில் மொத்த நுகர்வு மற்றும் மூலதனச் செலவு (மொ.உ.உ வீதம்)**




**வரைபடம் 1: சிங்கப்பூரில் மூலதனத்தின் அதிஉந்துதல் (Big push)**

1965 க்கு முன்னர் சிங்கப்பூரில் பல கட்சிகளைக் கொண்ட சமூக நல அரசு ஆட்சியில் இருந்தது. 1965 இல் சிங்கப்பூரின் சுதந்திரத்தை தொடர்ந்து முழு அதிகார ஆட்சியை ஏற்ற லீ தொடர்ந்து 1990 வரை அதிகாரத்தில் இருந்துள்ளார். 1964 இல் நுகர்வுச் செலவு 176 வீதமாகவும் முதலீட்டுச் செலவு 24 வீதமாகவும் காணப்பட்டது (இரண்டுக்கும் இடையிலான வித்தியாசம் 152 வீதம்). 1965 இல் இருந்து 1984 வரை சிங்கப்பூரின் நுகர்வுச் செலவானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக தொடர்ச்சியாக குறைவடைந்து செல்ல, முதலீட்டுச் செலவானது அதிகரித்து சென்றுள்ளதை வரைபடம் 1 காட்டுகின்றது. 1984 இல் நுகர்வுச் செலவு 53 வீதமாக குறைவடைந்து முதலீட்டுச் செலவு 48.6 வீதமாக அதிகரித்துள்ளது. நுகர்வுச் செலவுக்கும் முதலீட்டுக்கும் இடையிலான இடைவெளி 4.4 வீதத்துக்கு குறைக்கப்பட்டுள்ளது. 1965 இல் US$ 540 ஆக இருந்த தலாவருமானம் 1984 இல் US$ 6770 ஆக 12 மடங்குக்கு மேலாக அதிகரித்தது. இவ்வாறாக மூலதன இருப்புக்கான தளம் இடப்பட்ட பின்னர் நுகர்வுச் செலவு அதிகரித்தாலும் தலாவருமானம் குறையமாட்டாது. 1984 க்கும் 2004 க்கும் இடையில் சிங்கப்பூரின் தலாவருமானம் ஏறத்தாழ 4 மடங்கால் அதிகரித்துள்ளது. இம்மாற்றம் மக்களின் வாக்குக்காக செலவு செய்யப்படும் சமூக நலச் செலவால் அன்றி ஒரு மென்மையான சர்வதிகார ஆட்சியால் உருவான மூலதனச் செலவு அதிகரிப்பால் உருவானதாகும்.

*சிங்கப்பூரில் மேலைத் தேசத்தை திருப்திப்படுத்துவதற்காக பல கட்சிகள் இருந்தாலும் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வராதபடி ஒரு கட்சி ஆட்சி முறையை நடைமுறைப் படுத்தினார்.*

**அட்டவணை 2: ஆசியாவில் ஜனநாயகம், நுகர்வுச் செலவு, மூலதனச் செலவு மற்றும் தலாவருமானம்.**

| நாடுகள் | அதி உந்துதலின் ஆரம்பத்தில் நுகர்வுசெலவு-முதலீட்டு செலவு இடைவெளி (GDP இன் வீதம்) | அதி உந்துதலின் முடிவில் நுகர்வு செலவு - முதலீட்டு செலவு இடைவெளி (GDP இன் வீதம்) | தலா வருமான மாற்றம் மடங்குகளில் (வருடங்கள் ) | ஜனநாயகத்தின் அளவு |
|---|---|---|---|---|
| சிங்கப்பூர் (1965-84) | 69.2 | 4.5 | 12.5 (19) | 02 |
| தெ.கொரியா (1972-87) | 61.5 | 30.1 | 9.7 (15) | 0 |
| சீனா (1962-05) | 74.1 | 8.1 | 24.8 (42) | 0 |
| மலேசியா (1970-96) | 59.1 | 14.3 | 9.8 (26) | 5 |
| இந்தியா (1962-05) | 70.1 | 36.3 | 9.13 (42) | 8.5 |
| இலங்கை (1965-05 | 70.3 | 59.1 | 7.31 (40) | 6.6 |

*Source: Computed from World Development Indicator, World Bank's online data base*


யாழ்ப்பாணம்

நுகர்வுச் செலவுக்கும் மூலதனச் செலவுக்கும் இடையிலான இடைவெளி குறுகிய காலத்தில் குறைக்கப்பட்ட போது தலா வருமானமானது வேகமாக அதிகரித்து சென்றுள்ளதை அட்டவணை 2 காட்டுகின்றது. ஜனநாயகம் உயர்வாக உள்ள நாடுகளில் நுகர்வுச் செலவுக்கும் மூலதன செலவுக்கும் இடையிலான இடைவெளி அதிகமாகவும் ஜனநாயகம் குறைவாக உள்ள நாடுகளில் இவ் இடைவெளி குறைவாகவும் காணப்படுகின்றது. சிங்கப்பூரிலும் சீனாவிலும் ஒரு கட்சி ஆட்சி முறையிலும், தென்கொரியாவில் இராணுவ ஆட்சி முறையிலும், மலேசியா (1970 பின்னர்) பகுதியான எதேட்சை அதிகார ஆட்சி முறையிலும் நுகர்வுச் செலவைக் குறைத்து மூலதனச் செலவை அதிகரிக்க முடிந்தது. இந்நாடுகளில் இலங்கைதான் மிக நீண்ட காலத்தில் குறைந்த தலா வருமான அதிகரிப்பைப் பெற்றது. இந்தியா 2001 க்கு பின்னர்தான் இவ் இடைவெளியைக் குறைத்துள்ளது. 2001 இல் இவ் இடைவெளி 52 வீதம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியா 4 ஆண்டுகளில் 16 வீதத்தால் இடைவெளியை குறைத்துள்ளது. இவ் அணுகு முறையால் தலா வருமானம் ஏறத்தாழ 300 டொலரால் அதிகரித்-துள்ளது. 2003 க்கு பின்னர் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் 8 வீதத்துக்கு மேலாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாற்றம் ஒரு தாராள ஜனநாயக காங்கிரஸ் கட்சியின் ஆட்சியிலேயே ஏற்பட்டுள்ளது. இதே கொள்கையை இந்தியா தொடர்ந்து கடைப்பிடிக்குமானால் இந்தியாவின் பொருளாதாரம் மிக வேகமாக வளர்ச்சியடையும். ஆனால் இந்தியாவில் இக் காலத்தில் இருந்த அரசியல் உறுதிப்பாடு தொடர்ந்து இருப்பதற்கான சாத்தியங்கள் குறைவாக இருப்பதால் இவ்வேகமான பொருளாதார அபிவிருத்தி எதிர்காலத்தில் ஆட்சி மாற்றம், பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள், பிராந்திய உறுதியின்மைகள் போன்ற காரணங்களால் குறைவடையலாம்.

*சிங்கப்பூரிலும் சீனாவிலும் ஒரு கட்சி ஆட்சி முறையிலும், தென்கொரியாவில் இராணுவ ஆட்சி முறையிலும், மலேசியா (1970 பின்னர்) பகுதியான எதேட்சை அதிகார ஆட்சி முறையிலும் நுகர்வு செலவைக் குறைத்து மூலதன செலவை அதிகரிக்க முடிந்தது.*

**அட்டவணை 3: ஆசியாவில் ஜனநாயகமும் மூலதனத் திரட்சியும்.**

| நாடுகள் (GDP இன் வீதமாக) | மொத்த மூலதனவாக்கம் சுட்டெண் சராசரி (1961 -2005) | ஜனநாயகச் சராசரி (1961-2005) |
|---|---|---|
| சிங்கப்பூர் | 33.52 | 2.6 |
| சீனா | 32.67 | 0 |
| இந்தியா | 20.29 | 8.5 |
| மலேசியா | 25.29 | 5.68 |
| தெ. கொரியா | 28.86 | 3.77 |
| தாய்லாந்து | 27.9 | 3.91 |
| பிலிப்பின்ஸ் | 22.26 | 4.66 |
| இலங்கை | 21.51 | 6.62 |
| பங்களாதேஸ் | 15.27 | 3.0 |
| நேபாளம் | 17.62 | 1.93 |
| பாகிஸ்தான் | 17.79 | 3.43 |




**வரைபடம் 2: ஜனநாயகமும் மூலதனத்தின் அதி உந்துதலும் (Big push)**

*ஆசியாவில் ஜனநாயகத்திற்கும் மூலதன வாக்கத்திற்கும் இடையிலான இணைவுக் குணகம் 1960-2005 காலப்பகுதியில் - 0.89 ஆகும்.*

ஆசியாவில் ஜனநாயகத்திற்கும் மூலதனவாக்கத்திற்கும் இடையிலான இணைவுக் குணகம் 1960-2005 காலப்பகுதியில் - 0.89 ஆகும். பங்களாதேஸ், நேபாளம் மற்றும் பாகிஸ்தானில் ஜனநாயகம் குறைந்து இருந்தும் மூலதனவாக்கம் அதிகரிக்கவில்லை. இந்நாடுகளில் ஜனநாயகமோ அல்லது குறைந்த ஜனநாயகமோ ஒரே சீரானதாக இருக்கவில்லை. இவை Out layers அகும்.


**இலங்கையில் ஜனநாயகமும் மூலதனவாக்கமும்.**

இலங்கை 1961-1978 இடைப்பட்ட காலத்தில் சராசரி 7.47 ஜனநாயக சுட்டெண்ணைக் கொண்டிந்தது. இது 1978-2005 இல் 6 ஆக வீழ்சியடைந்தது.

யாழ்ப்பாணம்



இந்த இரண்டு காலப்பகுதியிலும் நாட்டின் பொருளாதார மூலதன இருப்பு அதிகரிக்கவில்லை. நுகர்வுச் செலவு வீழ்ச்சியடையவில்லை. 1961-1977 இல் சராசரி 15.9 வீதமாக (மொ.உ.உ) இருந்த மூலதனச் செலவு 1978-2008 இல் 25.2 வீதமாகத்தான் அதிகரித்தது. ஆனால் இந்த மூலதனச் செலவின் பெரும்பகுதி 1983 க்கு பின்னர் பொருளாதார மூலதனச் செலவாக அன்றி இராணுவ மூலதனச் செலவாக இருக்கின்றது. 1978 க்கு பின்னர் மகாவலி அபிவிருத்தி திட்டம் மற்றும் வீடமைப்புக்காக செலவழிக்கப்பட்ட செலவு கூட சிங்கப்பூரின் வீடமைப்பு திட்டம் மற்றும் தைவானில் மேற் கொள்ளப்பட்ட விவசாய நீர்ப்பாசனத் திட்டம் போன்றவற்றுடன் ஒப்பிடும் போது நாட்டின் நீண்ட கால அபிவிருத்தியை கவனத்தில் எடுக்காது குறும்கால வாக்கு வங்கியை நோக்காக கொண்டிருக்கின்றது.




**வரைபடம் 3: இலங்கையில் மூலதனத்தின் அதிஉந்துதல் (Big push)**

நுகர்வு மற்றும் மூலதனச் செலவு ஆகிய இரண்டுக்கும் இடையிலான இடைவெளி 1978 இல் இருந்து ஏறத்தாழ 60 வீதமாக இருக்கிறது. ஆனால் இது சிங்கப்பூரில் 5 (1984), சீனாவில் 8 (2005) ஆகவும் கொரியாவில் 34 (1990) ஆகவும், மலேசியாவில் 16 (1996). NICs நாடுகளில் அதி உந்துதலின் (Big push) உச்சத்தில் இந்த இடைவெளி பூச்சியமாக இருக்க வேண்டும் என கொள்கை வகுப்பாளர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இந்தியாவிலும் இவ் இடைவெளி 50-60 வீதமாக காணப்படுகின்றது. இலங்கையின் பொருளாதார மாதிரி 1978 பின்னர் NICs ஐ ஒத்திருந்த போதும், இது நுகர்வு செலவைக் குறைக்க முடியாமல் இருப்பதற்க்கு பின்வருவன காரணங்கள் ஆகும்.


**i) ஆட்சி முறையில் உள்ள வேறுபாடு**

பல ஆய்வாளர்கள் இலங்கையின் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை பகுதியான எதேட்சை அதிகார ஆட்சி (Partial Authoritarian Regime) என அழைத்தாலும். பெரும்பான்மை மக்களுக்கு பூரணமான ஜனநாயக ஆட்சி ஆகும்.

ii) பொது நுகர்வுச் செலவைக் (நலச் சேவைகளை) குறைக்கின்ற அரசாங்கம் பதவியை இழக்க வேண்டி இருந்தது.

iii) பாதுகாப்புச் செலவின் ஒரு பகுதி (இராணுவ வீரர்களுக்கான சம்பளம்) பொது நுகர்வுச் செலவாகும். இதைக் குறைத்தாலும் இராணுவத்தை வடக்கு கிழக்கில் இருந்து வாபஸ் பெற வேண்டி இருக்கும். இந்நடவடிக்கையும் அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்றும்.

பல ஆய்வாளர்கள் இலங்கையின் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை பகுதியான எதேட்சை அதிகார ஆட்சி என அழைத்தாலும். பெரும்பான்மை மக்களுக்கு பூரணமான ஜனநாயக ஆட்சி ஆகும்.




**வரைபடம் 4: இலங்கையில் பாதுகாப்புச் செலவும் மூலதனவாக்கமும்**

> **இலங்கையில் அதிகரித்து சென்ற சமூக நலச் செலவீடுகள், குடியான் விவசாயத்தின் மீதான செலவீடுகள் (உலர் வலய குடியேற்றத் திட்டங்கள்) மற்றும் பாதுகாப்பு செலவினம் போன்றன இன ஒற்றுமைக்கு பதிலாக இன முரண்பாட்டை உருவாக்கி பாரிய யுத்தத்துக்கு இட்டு சென்றமை**

இலங்கையின் மூலதனச் செலவில் ஒரு பகுதி பாதுகாப்புக்கான மூலதனச் செலவாக இருப்பதால் பாதுகாப்புச் செலவு அதிகரிக்கும் போது மூலதனச் செலவும் அதிகரிக்கின்றது. இருப்பினும் 1983 க்கு பின்னர் மொத்தப் பாதுகாப்புச் செலவினத்தின் அதிகரிப்பானது மொத்த மூலதனச் செலவைக் குறைத்துள்ளது. இலங்கை நுகர்வுச் செலவை 1978க்கு பின்னர் குறைக்க முடியவில்லை. மூலதனச் செலவை சிறியளவில் அதிகரித்துள்ளது. ஆனால் இது அதிகளவில் பொருளாதார உள்கட்டு மானத்துக்கான செலவாக இன்றி பாகாப்புக்கான மூலதனச் செலவாக இருக்கிறது கொள்கை வகுப்பாளர்கள் பாதுகாப்புச் செலவை ஓர் பொருளாதார உள்கட்டுமானச் செலவாகவும், நடை பெறும் போரை பயங்கரவாதத்துக்கு எதிரான போர் எனவும் குறிப்பிடுகிறார்கள். 1983 இல் இருந்து இச் செலவினத்தின் அதிகரிப்பு நாட்டின் அமைதியைக் கொண்டு வருவதன் மூலம் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் என்கின்றனர்.

ஆனால் இன்று வரை செலவு அதிகரித்துச் செல்கின்றது. அமைதியின்மையும் அதிகரிக்கிறது. அபிவிருத்தி மந்த நிலையில் இருக்கிறது. இந்த பொதுச் சமூக செவினங்கள் ஜனநாயக அரசியலில் சமூக அரசியல் ரீதியில் இன முரண்பாட்டை தூண்டியுள்ளன. இலங்கையின் பெரும்பான்மை மக்களைச் சார்ந்த ஜனநாயகத்தின் வழி தூண்டப்பட்ட நுகர்வுச் செலவில் பிரதான பங்கினைக் கொண்டுள்ள சமூக நலச் செலவீடுகள், குடியான் விவசாயத்தின் மீதான செலவீடுகள் மற்றும் பாதுகாப்புச் செலவினம் இலங்கைப் பொருளாதாரத்தின் மீது பிரதானமாக இரண்டு வகையான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

1. இலங்கையில் அதிகரித்துச் சென்ற நுகர்வுச் செலவானது பொருளாதார அபிவிருத்தியில் வெற்றி பெற்ற நாடுகளின் அனுபவம் எடுத்துக் காட்டியது போன்று மூலதனச் செலவை அதிகரித்து சமூக அபிவிருத்திக்கு அடித்தளமாக இருக்கின்ற துரிதமான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்தத் தவறியமை.
2. இலங்கையில் அதிகரித்துச் சென்ற சமூக நலச் செலவீடுகள், குடியான் விவசாயத்தின் மீதான செலவீடுகள் (உலர் வலய குடியேற்றத் திட்டங்கள்) மற்றும் பாதுகாப்பு செலவினம் போன்றன இன ஒற்றுமைக்குப் பதிலாக இன முரண்பாட்டை உருவாக்கி பாரிய யுத்தத்துக்கு இட்டுச் சென்றமை.

## 2. ஜனநாயகமும் சமூக அரசியல் உறுதிப்பாடும் (அமைதி)


நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அமைதி முக்கியமானதாகும். ஆசியாவில் இராணுவச் செலவினத்தை அமைதியின்மைக்கான ஓர் குறிகாட்டியாகக் கொள்வோமானால், ஜனநாயக நாடுகளிலேயே இராணுவச் செலவினம் அதிகமாகக் காணப்படுகின்றது. மாறாக ஜனநாயகச் சுட்டெண் குறைந்த நாடுகளில் இராணுவச் செலவினம் குறைவாகக் காணப்படுகின்றது. ஆசியா-

வில் 1989-1999 காலப்பகுதியில் தாராள ஜனநாயகத்தைக் கடைப்பிடித்த நாடுகளில் இன, மத, மொழி, பிரதேச முரண்பாடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இது பாதுகாப்புக்கான செலவை அதிகரித்துள்ளது. இது அமைதியின்மைக்கான ஓர் குறிகாட்டியாகும்.

**அட்டவணை 3: ஆசியாவில் ஜனநாயகம், அமைதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI)**

| நாடுகள் | ஜனநாயகச் சுட்டெண் சராசரி (1961 - 1999) | இராணுவச் செலவினம் GDP இன் வீதமாக சராசரி (1989-1999) | FDI மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதம்சராசரி (1970-2005) |
|---|---|---|---|
| சிங்கப்பூர் | 2 | 4.7 | 11.7 |
| சீனா | 0 | 2.1 | 23.36 |
| இந்தியா | 8.3 | 2.9 | 0.40 |
| மலேசியா | 5.7 | 2.54 | 4.1 |
| கொரியா | 5.0 | 2.85 | 12.63 |
| தாய்லாந்து | 3.6 | 2.2 | 1.91 |
| பிலிப்பின்ஸ் | 4.4 | 1.3 | 1.3 |
| இலங்கை | 6.64 | 3.4 | 1.01 |
| பங்களாதேசம் | 2.21 | 1.3 | 0.22 |
| நேபாளம் | 2.3 | 0.99 | 0.12 |
| பாகிஸ்தான் | 4.4 | 6.1 | 0.72 |

மூலம்: உலகவங்கியின் புள்ளிவிபர தளம் மற்றும் Polity iii இருந்து கணிக்கப்பட்டது




**வரைபடம் 5: ஆசியாவில் ஜனநாயகமும் அமைதியும்**

*ஆசியாவில் 1989-1999 காலப்பகுதியில் தாராள ஜனநாயகத்தைக் கடைப்பிடித்த நாடுகளில் இன, மத, மொழி, பிரதேச முரண்பாடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.*

ஆசியாவின் (கிழக்கு மற்றும் தென் ஆசியா) 10 நாடுகளை மாதிரியாகக் கொண்டு 1989 - 1999 காலப்பகுதியில் ஜனநாயகத்துக்கும் இராணுவச் செலவுக்கும் இடையில் ஓர் நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகிறது. சிங்கப்பூர் (அபிவிருத்தி அடைந்த நாடு) தேசிய பாதுகாப்புக்காக இராணுவச் செலவை அதிகரிக்கின்றது. சீனா (UNO இல் பாதுகாப்பு சபையில் அங்கத்துவம்) உலக வல்லரசை நோக்கக் கொண்டும் இராணுவச் செலவை அதிகரிக்கிறது. இவை இரண்டையும் நீக்கிய போது ஜனநாயகத்துக்கும் இராணுவச் செலவினத்துக்கும் இடையிலான இணைவுக்குணகம் - 82 சதவீதமாகக் காணப்படுகின்றது.

## இலங்கையில் ஜனநாயகமும் சமூக உறுதிப்பாடும்

இலங்கையில் 1978 க்கு முன்னர் விஸ்தரிக்கப்பட்ட தாராள ஜனநாயகம் ஏறத்தாழ 25 வீத தமிழ் பேசும் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை அவர்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான வளப்பங்கீட்டில் சமத்துவத்தையும் நீதித்தன்மையையும் ஏறப்படுத்தத் தவறிவிட்டது. சமூக முரண்பாடுகள் அதிகரிக்கப்பட்டன. ஜனநாயக ஆட்சியில் சிறுபான்மை மக்கள் பொருளாதார அபிவிருத்தியில் ஓரம் கட்டப்பட்டுள்ளனர். இன்றைய இனமுரண்பாட்டுக்கான அடிப்படை மூலங்கள் 1978 க்கு முன்னர் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி (UNP) மற்றும் இலங்கையின் சுதந்திரக் கட்சி (SLFP) ஆகிய இரு கட்சிகளினாலும் மாறி மாறி விதையிடப்பட்டன. ஜனநாயகம் என்ற போர்வையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டர்களும், ஆயுதம் தாங்கிய அரசியல் வாதிகளின் கைக்கூலிகளும் சிறுபான்மை மக்கள் மீது காட்டு மிராண்டிதனமாக வன்முறைகளைப் பரப்பின.

**இலங்கையில் ஜனநாயகம் என்பது மேலைத்தேச வாதமான அமைதியை கொண்டுவரும் என்பதற்கு பதிலாக சமூக அரசியல் உறுதியின்மையை அதிகரித்து இனமுரண்பாட்டை வளர்த்தது.**


இலங்கையில் ஜனநாயகம் என்பது மேலைத்தேச வாதமான அமைதியைக் கொண்டுவரும் என்பதற்குப் பதிலாக சமூக அரசியல் உறுதியின்மையை அதிகரித்து இனமுரண்பாட்டை வளர்த்தது. உலர்வலயக் குடியேற்றத்திட்டங்கள் பெரும்பான்மை அபிவிருத்திப் புலமையாளர்களால் விவசாய அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் வருமான மீள்பங்கீட்டுக்கான அபிவிருத்தி தந்திரோபாயங்கள் என வியாக்கியானம் செய்யப்பட்டாலும், இக் குடியேற்றத்திட்டங்களின் தந்தை என அழைக்கப்படுகின்ற டீ. எஸ். சேனநாயக்கா இத்திட்டங்களின் நோக்கம் சிங்களமயமாக்கம் என்பதை நேரடியாகவே குறிப்பிட்டு இருக்கின்றார்[11]. எனவே இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் உண்மையான பொருளாதார இலக்குகளை விட குறுங் கால நலனைக் கொண்ட அரசியல் இலக்குகளை நோக்கமாக கொண்டு வகுக்கப்பட்டமையினால் அவை சமூக முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன.

இலங்கையில் 1978 இல் நடைமுறைக்கு வந்த குறைந்த ஜனநாயக ஆட்சியின் மூலமும் அமைதியும் சமூக உறுதிப்பாடும் ஏற்படவில்லை எனலாம். மாறாக இனமுரண்பாடு இனயுத்தமாகப் பரிணமித்தது. குண்டர்கள் ஆயுதம் தாங்கிய அரசியல்வாதிகளின் கைக்கூலிகளுடன் இலங்கையின் ஆயுதப்படைகளும் இணைந்து இனமுரண்பாட்டை இனயுத்தத்துக்கு இட்டுச் சென்றது. பல ஆசிய நாடுகளில் குறைந்த ஜனநாயகம் அமைதியை உருவாக்கியிருக்க, இலங்கையில் அவ்வாறான குறைந்த ஜனநாயகம் அமைதியின்மையை அதிகரித்தமைக்கு பிரதான காரணம் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறைமையையும் ஐந்தில் நான்கு பெரும்பான்மையினையும் கொண்டு UNP அரசாங்கம் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதை விடுத்து, இலங்கையில் அவர்களின் அடையாளங்களை பாதுகாக்காமை ஆகும்.

சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்றன பல்லின சமூகங்களுடன் குறைந்த ஜனநாயக ஆட்சியில் சமூக அரசியல் உறுதிப்பாட்டை அடைய, இலங்கை அவ்வாறான பண்புள்ள ஆட்சியில் ஆயுதப் போராட்டத்துக்குச் சென்று பொருளாதார அபிவிருத்தியில் தோல்வியடைந்து விட்டது. சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் நீண்ட குறைந்த ஜனநாயக ஆட்சியில் சிறுபான்மை மக்களின்

மொழி அடையாளத்தைத் தாங்கி நிற்கும் நூலகங்கள் எரிக்கப்பட்டமைக்கு எதுவித சான்றுகளும் காணமுடியாது. சிறுபான்மையினரின் மொழி உரிமை சிங்கப்பூரில் சிறப்பாக பாதுகாக்கப்பட்டுள்ளது[12].

1989 இல் இலங்கையின் தென்பகுதியில் உருவான அமைதியின்மையானது குறைந்த ஜனநாயக ஆட்சியை பயன்படுத்தி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அவ்வாறான ஒரு இராணுவ அணுகுமுறையைப் பயன்படுத்தி இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதற்கு பல தலைவர்கள் முயற்சித்துள்ளனர். இருப்பினும் அவர்களால் இலங்கையில் அமைதியைக் கொண்டுவர முடியாமைக்கு பிரதான காரணம் இப் பிரச்சினை தனித்து தீவிரவாதமோ அல்லது பயங்கரவாதமோ அன்றி அரசியல் பிரச்சினையுடன் வித்திட்டு வேரூன்றி இருக்கின்றமை ஆகும். பொருளாதாரத்தில் மிகவும் பலவீனப்பட்டிருக்கும் இலங்கை ஆசியாவிலேயே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகளவான இராணுவ செலவினத்தை கொண்டிருக்கிறமை இலங்கையின் அமைதியின்மையின் அளவினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. எனவே இலங்கையில் அமைதியை உருவாக்குவதற்கான கொள்கைத் தெரிவாக சிறுபான்மையினர் தமது பிரதேச அபிவிருத்தியை மத்திய அரசில் தங்கியிருக்காமல் தாங்களாகவே தீர்மானிக்கக்கூடிய கடந்த காலத்தை விட மேலான அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றினை உருவாக்கி அதை நூறு வீதம் அமுல்படுத்தும் போது பெரும்பான்மையினரிடம் இருந்து வரும் தடைகளை உடைப்பதற்கு குறைந்த ஜனநாயக முறையைப் பயன் படுத்துவதாகும். இவ்வாறு பிரிவினைக்கு வித்திடும் என ஐயப்படுகின்ற அரசியல் தீர்வுத்திட்டத்துக்கு எதிராக சிலர் இன மொழி பிரதேச வேறுபாடு இன்றி சிறுபான்மையினர் ஒற்றை ஆட்சிக்குள் ஆளும் கட்சிகளுடன் சேர்ந்து தங்களுடைய பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தலாம் என்ற வாதமும் முன் வைக்கப்படுகின்றது.




**வரைபடம் 6: இலங்கையில் வறுமையின் போக்கு**

அதாவது இலங்கையின் அரசியல் பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆராய்பவர்கள் சிறுபான்மையினர் சார்பாக முன் வைக்கும் ஒரு குற்றச்சாட்டு யாதெனில் சிறுபான்மையினர் ஆளும் பெரும்பான்மை கட்சிகளுடன் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக அரசாங்கத்தில் அங்கம் வகித்து தமது மக்களின் பொருளாதார அபிவிருத்தியை முன் எடுக்கவில்லை என்பதாகும். சிறுபான்மையினர் பிரிவினைவாதக் கோரிக்கைகளை கைவிட்டு அவர்கள் பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டிருந்தால் அவர்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்து இருக்கும் என்பதாகும். ஆனால் இலங்கையின் வரலாற்றில் மலையகத் தமிழ் கட்சிகள் என்றுமே ஆளும் பெரும்பான்மைக் கட்சிகளு-

**1989 இல் இலங்கையின் தென்பகுதியில் உருவான அமைதியின்மையானது குறைந்த ஜனநாயக ஆட்சியை பயன்படுத்தி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.**

டன் அரசாங்கத்தில் அங்கம் வகித்த காலந்தான் அதிகம். அவ்வாறு இருந்தும் அவர்களின் பொருளாதார அபிவிருத்தி தாழ்மட்டத்திலேயே உள்ளது.

இலங்கையில் 2007 இல் வடக்கு - கிழக்கு நீங்கலாக இலங்கை புள்ளிவிபர அதாவது இலங்கையின் அரசியல் பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆராய்பவர்கள் சிறுபான்மையினர் சார்பாக முன் வைக்கும் ஒரு குற்றச்சாட்டு யாதெனில் சிறுபான்மையினர் ஆளும் பெரும்பான்மைக் கட்சிகளுடன் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக அரசாங்கத்தில் அங்கம் வகித்து தமது மக்களின் பொருளாதார அபிவிருத்தியை முன் எடுக்கவில்லை என்பதாகும். சிறுபான்மையினர் பிரிவினைவாதக் கோரிக்கைகளை கைவிட்டு அவர்கள் பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டிருந்தால் அவர்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்து இருக்கும் என்பதாகும்.

ஆனால் இலங்கையின் வரலாற்றில் மலையகத் தமிழ் கட்சிகள் என்றுமே ஆளும் பெரும்பான்மை கட்சிகளுடன் அரசாங்கத்தில் அங்கம் வகித்த காலந்தான் அதிகம். அவ்வாறு இருந்தும் அவர்களின் பொருளாதார அபிவிருத்தி தாழ்மட்டத்திலேயே உள்ளது. இலங்கையில் 2007 இல் வடக்கு - கிழக்கு நீங்கலாக இலங்கை புள்ளிவிபர திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வறுமை தொடர்பான புள்ளி விபரங்களில் இந்திய தமிழ் மக்கள் செறிவாக உள்ள மாவட்டங்களிலேயே வறுமை அதிகமாக உள்ளமையை வரைபடம் 4 காட்டுகின்றது. சிறுபான்மையினரின் பங்குபற்றல் ஜனநாயகம் ஏனைய பொருளாதார முன்னேற்றங்களை விட மிக முக்கியமான அபிவிருத்திக் குறிக்கோளான வறுமையையே ஒழிக்கவில்லை என்பது தெளிவாகின்றது. மாறாக வறுமை அதிகரித்துள்ளது. வறுமையே ஒழிக்கப்படவில்லையாயின் ஏனைய அபிவிருத்தியின் நிலை எவ்வாறு இருக்கும் என்பது தெளிவாகின்றது.

**அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு வெளிநாட்டு மூலதனம் குறிப்பிடக்கூடிய பங்களிப்பை நல்கி வருகிறது.**

### 3. ஜனநாயகமும் வெளிநாட்டு நேரடி முதலீடும்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு வெளிநாட்டு மூலதனம் குறிப்பிடக்கூடிய பங்களிப்பை நல்கி வருகிறது. இது பின்வரும் வழிகளில் கிடைக்கிறது.


1. வெளிநாட்டு நேரடி முதலீடு(FDI)
2. வெளிநாட்டு பட்டியலிடப்பட்ட முதலீடு
3. வெளிநாட்டு நன்கொடைகள்
4. வெளிநாட்டு உதவிகள் (கடன்கள்)

இவ்வெளிநாட்டு மூலதனமானது ஓர் நல்லாட்சியும் அமைதியும் இருக்கின்ற நாடுகளுக்கே கிடைக்கின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளுக்கு ஓர் பாதுகாப்பான ஆயுளை நீண்ட காலத்துக்கு எதிர்பார்க்கின்றனர். முதலீட்டுக்கான பாதுகாப்பு உத்தரவாதம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஜனநாயக ஆட்சியைவிட சர்வாதிகார ஆட்சி அல்லது குறைந்த ஜனநாயகத்தைக் கொண்ட ஆட்சியில் அதிகமாகக் கிடைக்கின்றது. இம் முதலீடுகளில் பலாபலன்களும், வருவாய்களும் நீண்டகாலத்தில் பெறப்படுவதால் இவ்வகையான முதலீடுகளுக்கு நீண்டகாலத்துக்கு அரசியல் உறுதிப்பாடு தங்கள் நாட்டில் இருக்க வேண்டும் என்பதனை எந்த நாடு மெய்ப்பித்துக் காட்டுகின்றதோ அந்த நாடு அதிகளவான மூலதனத்தைக் கவர்கின்றது.

இன்று உலகிலேயே சீனா அதிக வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்வதற்கு ஓர் பிரதான காரணமாக சீன ஆட்சியாளர்கள் தமது நாடு எதிர்காலத்தில் அரசியல் உறுதிப்பாட்டைத் தொடர்ந்து பேணிவரும் என்பதை கடந்த 50 வருட ஆட்சியில் வெளிப்படுத்தி வருகின்றமை ஆகும். ஆசியாவில் ஜனநாயகத்துக்கும் FDI க்கும் இடையிலான இணைவுக் குணகம் - 0.54 ஆகும் (அட்டவணை 4 ஐ பார்க்க). ஜனநாயகத்தை அதிகமாகக் கொண்ட நாடுகள் வெளிநாட்டு முதலீட்டைக் குறைவாகக் கொண்டிருக்கின்றன. மாறாக குறைந்த ஜனநாயகத்தைக் கொண்ட நாடுகள் அதிகளவான வெளிநாட்டு முதலீட்டைப் பெறு-கின்றன.

## இலங்கையில் ஜனநாயகமும் வெளிநாட்டு நேரடி முதலீடும்

இலங்கையில் 1978 க்கு பின்னர் குறைந்த ஜனநாயக ஆட்சியில் அதிகளவாக பெற்ற வெளிநாட்டு மூலதனத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடு ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாக காணப்படுகின்றது. இலங்கையின் GDP குறைவாக இருப்பதால் GDP இன் வீதமாக வெளிநாட்டு நேரடி முதலீடு இந்தியாவின் ஒப்பிடும் போது உயர்வாக இருந்தாலும் மொத்தத்தில் FDI குறைவானதாகும்.




**வரைபடம் 7: ஆசியாவில் இலங்கையின் வெளிநாட்டு முதலீட்டின் நிலை**

வெளிநாட்டு மூலதனத்தில் இலங்கை பெற்ற அந்நிய உதவி ஆசியாவிலேயே மிக உயர்வாக உள்ளது. 1962- 2005 இடையில் ஆண்டுக்கு இலங்கை பெற்றுக் கொண்ட தலா வெளிநாட்டு உதவி சராசரி US$ 30.4 ஆக உள்ளது. இது மலேசியாவில் $ 7.62, தாய்லாந்து $ 8.36, சிங்கப்பூர் $5.5, சீனா 1.48, இந்தியாவில் 2.0 ஆகவும் காணப்படுகின்றது. ஆசியாவில் தலா வெளிநாட்டு உதவியை அதிகமாக பெற்ற நாடாகவும், அதிக வெளிநாட்டு படுகடனை (1981 - 2005 காலப்பகுதியில் GDP இன் வீதமாக சராசரி 61.2) பெற்ற நாடாகவும் இலங்கைதான் இருக்கிறது. ஒரு நாடு வெளிநாட்டு மூலதனத்தில் FDI (அநேகமாக வெளிநாட்டு தனியார்) விட கடன்களிலும் நன்கொடைகளிலும் (அநேகமாக வெளிநாட்டு அரசாங்கம்) அதிகம் சார்ந்து இருப்பது அந்நாடு தனது இறைமையை வெளி நாடுகளில் இழந்து விட்டதை குறித்து நிற்கின்றது. இலங்கையின் அந்நிய மூலதனத்தின் போக்கு இந்நாடு எவ்வளவுக்கு வெளிநாடுகள் மீது தனது இறைமையை இழந்து நிற்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. உள்நாட்டில் புராதன காலம்தொட்டு வடக்கு கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமையை அடக்கி சிங்கள பௌத்த இனவாதத்தை நிலை நிறுத்துவதற்காக இவ் அழகான தீவை நிதி அடிப்படையில் வெளிநாடுகளில் ஈடுவைக்கின்ற நிலையை இவ் வெளிநாட்டு மூலதனத்தின் பரம்பல் குறித்து நிற்கின்றது. இந்து சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடம் இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளுக்கு மத்தியிலும் அதிக வெளிநாட்டு உதவியைப் பெறக் காரணமாக அமைந்துள்ளது. 21 ம் நூற்றாண்டில் மாற்றமடைந்து வரும் உலகப் பொருளாதார அரசியல் சூழல் மேலைத்தேசத்துடன் இந்தியாவையும் இணைத்து இலங்கைக்கு அந்நிய உதவியை அதிகரிக்க வாய்ப்பை அதிகரித்துள்ளது.

*21 ம் நூற்றாண்டில் மாற்றமடைந்து வரும் உலக பொருளாதார அரசியல் சூழல் மேலைத்தேசத்துடன் இந்தியாவையும் இணைத்து இலங்கைக்கு அந்நிய உதவியை அதிகரிக்க வாய்ப்பை அதிகரித்துள்ளது.*

தொகுத்து நோக்குமிடத்து இலங்கை ஆசியாவில் பொரு-

ளாதார வெற்றி பெற்ற நாடுகள் போன்று குறைந்த ஜனநாயகத்தின் வழியான அதிகரித்த வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெறாமல், சிறுபான்மையினரை ஓரம்கட்டிய பெரும்பான்மையினருக்கு வழங்கப்பட்ட ஜனநாயகத்தின் பயனாக அதிக வெளிநாட்டு உதவியைப் பெற்று தனது இறைமையை வெளிநாடுகள் மீது இழந்து நிற்கின்றது. இது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை கடுமையாக பாதிக்கின்றது.

### 4. ஜனநாயகமும் பொருளாதாரக் கொள்கையின் நீடித்ததன்மையும்

கல்வி கற்ற புத்தி ஜீவிகளால் கூட விளங்கிக்கொள்ள முடியாத பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தி அவற்றின் இலக்குகளை அடைவதற்கு ஓர் நீடித்த ஆட்சிமுறைமை அவசியமானதாகும். ஜனநாயக ஆட்சிமுறையில் 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் இடம் பெறுவதால் அரசாங்கம் மாற்றமடைகின்றது. அரசியல் கட்சிகள் ஆட்சியை கைப்பற்றுவதற்காக மக்களைக் குழப்புகின்றனர். இதன் காரணமாக மக்கள் வாக்குரிமை ஊடாக ஆட்சியை மாற்றுகிறார்கள். மாற்றமடைகின்ற அரசாங்கம் தமக்கு வாக்களித்த மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக கொள்கைகளில் மாற்றம் செய்கிறது. எந்தத் துறையிலும் ஓர் சீரான கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வது அரிதாக காணப்படுகின்றது. துறைகளின் தலைவர்கள் உயர் அதிகாரிகள் அனைவரும் தங்கள் கட்சி சார்ந்தவர்களாக மாற்றப்படுகிறார்கள். புதிதாக நியமிக்கப்படுபவர்கள் அடுத்த ஆட்சிமாற்றத்தின் போது மீண்டும் மாற்றப்படுகிறார்கள். தேசிய ரீதியில் கொள்கைகள் மாற்றப்படுவதோடு கொள்கைளை அமுல்படுத்துபவர்களும் மாற்றப்படுவது நாட்டின் தேசிய அபிவிருத்தியைப் பாதிக்கின்றது. நீடித்த ஆட்சியும் அடிப்படையில் மாற்றமடையாத கொள்கைளும் பொருளாதார அபிவிருத்திக்குஅவசியமாகும்.

**இலங்கையில் 1978 க்கு முன்னர் அடிக்கடி மாற்றப்பட்ட ஆட்சியானது பொருளாதாரக் கொள்கையில் நீடித்த தன்மையை கடுமையாக பாதித்தது.**

கிழக்கு ஆசிய நாடுகளில் அனேகமானவை பொருளாதார அபிவிருத்தியில் மிக வேகமாக முன்னேறியமைக்கு இந்நாடுகளில் காணப்பட்ட நீடித்த ஆட்சியும் மாற்றமடையாத கொள்கைகளும் ஓர் காரணமாக அமைந்தன. இவ்வாறான நீடித்த ஆட்சி மத்திய அரசை மாற்றம் அடையச் செய்யாத வரையறுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சி முறையினாலேயே ஏற்பட்டதாகும்.

### இலங்கையில் ஜனநாயகமும் பொருளாதாரக் கொள்கையின் நீடித்ததன்மையும்

இலங்கையில் 1978 க்கு முன்னர் அடிக்கடி மாற்றப்பட்ட ஆட்சியானது பொருளாதாரக் கொள்கையில் நீடித்த தன்மையை கடுமையாக பாதித்தது. UNP அரசாங்கத்தால் 1965இல் நடைமுறைக்கு வந்த தாராள பொருளாதாரக் கொள்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருக்குமானால் இலங்கையின் இனப்பிரச்சினை பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட அபிவிருத்தியினால் குறைந்திருக்கும் என்பது அபயரத்தினாவின் (2004) வாதம் ஆகும். ஆட்சி மாற்றத்துக்கும் இக்கொள்கை மாற்றத்துக்கான பிரதான காரணம் இலங்கை கடைப்பிடித்த தாராள ஜனநாயகம் ஆகும். இருப்பினும் 1978 முதல் 1994 வரை UNP அரசாங்கத்தின் நீண்ட ஆட்சியும் பின்னர் 1994 இல் இருந்து இன்று வரை SLFP யை தலைமையாக கொண்ட அரசின் மாற்றமடையாத பொருளாதாரக் கொள்கையும் இலங்கைப் பொருளாதாரத்தை அபிவிருத்திக்கு இட்டு செல்லவில்லை. மாறாக அபிவிருத்தியில் தோல்வியடைந்துள்ளது. பல ஆசிய நாடுகளில் நீடித்த ஆட்சியும் பொருளாதாரக் கொள்கையின் நீடித்த தன்மையும் பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமாக பங்காற்ற இலங்கை அவ்வாறான ஒரு நீண்ட ஆட்சியை அனுபவித்தும் பொருளாதார அபிவிருத்தியில் தோல்வியடைந்தமைக்கு பிரதான காரணம் இலங்கையின் அரசியல் தலைமைத்துவம் இன, மொழி மற்றும் மத அடிப்படையில் கொள்கைகளை முன்னெடுத்தமையாகும்.

1978 க்கு பின்னர்தான் இலங்கையில் சிறுபான்மை மக்கள் அரசின் பொருளாதார அபிவிருத்தியில் இருந்து அதிகமாக ஓரம்கட்டப்பட்டுள்ளனர் (வறுமை தொடர்பான அரசின் புள்ளி-

விபரங்களில் இருந்து இது தெளிவாக தெரிகின்றது). 1983 இன் பின்னர் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் தீவிரமடைந்த யுத்தம் இப் பொருளாதார அபிவிருத்திப் பின்னடைவுக்கு காரணமாகக் கூறப்பட்டாலும் சிறுபான்மையினர் செறிவாக வாழும் மலையக மாவட்டத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி பின்னடைவுக்கு இன மதக் காரணிகளை விட வேறுகாரணிகளை அடையாளம் காணமுடியாமல் உள்ளது.

## 5. ஜனநாயகமும் நல்லாட்சியும்

நல்லாட்சி (Good Govermance) என்பது இன்று பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமானதாகும். நல்லாட்சியில் ஜனநாயகமாக்கல் ஒரு அம்சமாக இருந்தாலும் தாராளமயப்படுத்தப்பட்ட ஜனநாயக சுதந்திரத்தின் ஊடாக மக்களை நல்வழிப்படுத்துவது கடினமானதாகும். குற்றங்களுக்கு விதிக்கப்படுகின்ற தண்டனைகளும் தண்டனைகளை அமுல்படுத்தும் போது கடைப்பிடிக்கப்படுகின்ற முறைகளும் நல்லாட்சியை ஏற்படுத்துகின்றது. ஜனநாயக சுதந்திரம் உயர்வாக உள்ள வளர்ந்து வரும் நாடுகளில் மக்கள் குற்றம் செய்து விட்டு மனித உரிமைகளை முன்னிலைப்படுத்தி தப்பித்துக் கொள்கின்றனர். சிங்கப்பூர் ஜனநாயக சுதந்திரத்தில் குறைந்த நிலையில் உள்ள ஓர் நாடாகும். ஆனால் நல்லாட்சியில் முன்னணியில் வகிக்கும் நாடாக இருக்கின்றது. நல்ல பணிக்குழுக்கள் ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் இல்லாத ஓர் சமூகத்தை தூர நோக்குக் கொண்ட சிறந்த தலைமைத்துவத்தைக் கொண்ட மெருதுவான சர்வதிகார ஆட்சிமுறை ஒன்றினாலேயே உருவாக்க முடியும்.

இந்தியா ஜனநாயக சுதந்திரத்தை உயர்வாக கொண்ட நாடாகும். ஆனால் இங்கு நல்லாட்சி என்பது குறைவாகவே காணப்படுகின்றது. ஜன்நாயக சுட்டெண் பூச்சியமாக உள்ள சீனாவில் ஓர் இளம் பெண் இரவில் எந்த வேளையிலும் துணையின்றி வீதியில் செல்ல பாதுகாப்புக் காணப்படுகின்றது. ஆனால் இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் ஜனநாயகம் உயர்வாக இருந்தும், இந் நாடுகளின் தலை நகரங்களில் கூட இரவில் மட்டுமல்ல சில வீதிகளில் பகலில் கூட ஓர் இளம்பெண் பாதுகாப்பாகத் துணையின்றி பயணிக்க முடியாது. சட்டங்களும் விதிகளும் எழுத்திலும் அறிக்கைகளிலும் மட்டுமே இருக்கின்றன. இவை நடைமுறையில் தொழிற்படுவதில்லை. இப்பண்பு காரணமாக ஜனநாயக நாடுகளில் நல்லாட்சி தடைப்படுகிறது.

கிழக்கு ஆசியாவில் பொருளாதார வெற்றிக்கு பின்னால் இந்நாடுகளில் காணப்பட்ட நல்லாட்சி பங்களிப்புச் செய்துள்ளது. இந்நல்லாட்சி குறைந்த ஜனநாயக முறையினால் தோன்றியதாகும். மக்களை நல்வழிப்படுத்துவது, நல்ல அரசியல் தலைவர்களை கொண்ட நாட்டையும் நல்லாட்சியையும் உருவாக்குவது ஜனநாயகத்தின் ஊடாக அடையப்பட முடியாது. மூன்றாம் வகுப்பு மக்கள் மூன்றாம் வகுப்பு ஆட்சியாளரை ஜனநாயகத்தின் வழி தெரிவு செய்கிறார்கள். ஒழுக்கமற்ற ஆட்சியாளன் தனது கட்சி ஆதரவாளர்களான ஒழுக்கமற்ற பணிக் குழுக்களை உருவாக்கி நாட்டை சீரழிக்கின்றான். பிளேற்றோ குறிப்பிட்டது போன்று ஆட்சியாளன் ஒழுக்கமுடையவனாகவும் ஓர் தத்துவவியலாளராகவும் இருக்க வேண்டுமே ஒழிய மக்களின் அறிவற்ற விருப்பு வெறுப்புகளுக்கு செவிசாய்ப்பவனாக இருக்கக் கூடாது.

உதாரணமாக இந்தியாவில் தமிழ்நாட்டு அரசியலை நோக்குவோமாயின், இந்தியாவிலேயே கல்வி அறிவு கூடிய இம்மாநில மக்கள் ஓர் முறை தமிழ் நாட்டிலேயே அதிகளவு ஊழல்களையும் மேசடிகளையும் செய்த, நீதிமன்றத்தால் தண்டனை கொடுக்கப்பட்டு பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்ட செல்வி ஜெயலலிதா ஜெயராமை இரண்டாம் முறையும் தமிழ்நாட்டு அரசின் தலைவராக தெரிவு செய்துள்ளனர். மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகத்தின் வழியான ஆட்சி என்ற பெயரில் நாட்டின் நல்லாட்சியும் அபிவிருத்தியும் எவ்வாறு மழுங்கடிக்கப்படுகின்றது என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் இருக்க முடியாது. கலைஞர் கருணாநிதியையும் செல்வி ஜெயலலிதாவையும் அவர்கள் சார்ந்த கட்சிகளை-

**கிழக்கு ஆசியாவில் பொருளாதார வெற்றிக்கு பின்னால் இந்நாடுகளில் காணப்பட்ட நல்லாட்சி பங்களிப்புச் செய்துள்ளது. இந்நல்லாட்சி குறைந்த ஜனநாயக முறையினால் தோன்றியதாகும்.**

யும் விட தமிழ்நாட்டில் வேறு தலைவர்களும் கட்சிகளும் இல்லையா? என எண்ணத் தோன்றுகின்றது. இப்படிப்பட்ட பக்குவப்படாத மக்களைப் பயன்படுத்தி மூன்றாம் வகுப்பு அரசியல்வாதி அரசியலுக்கு வருவதை தடுப்பதற்காக தென்கிழக்கு ஆசிய நாடுகள் அபிவிருத்தியின் ஆரம்ப நிலையில் ஜனநாயகத்தை கட்டுப்படுத்தி ஒரு கட்சி ஆட்சிமுறையில் நல்லாட்சியை உருவாக்கினார்கள்.

நல்லாட்சியை ஜனநாயகத்தின் மூலம் எய்த முடியாது என்பதற்கு இலங்கை இந்தியா போன்ற நாடுகளும், மென்மையான சர்வதிகார ஆட்சி முறை மூலம் அடையலாம் என்பதற்கு சிங்கப்பூரும் சிறந்த எடுத்துக் காட்டாகும். இக் கருத்தையே சீனாவின் யதார்த்த தலைவரும்[13], சிங்கப்பூரின் சிற்பியும் கூறியுள்ளனர்[14].

ஜனநாயக நாடுகளில் அரச நிர்வாகம் மிக வேகம் குறைந்ததாக காணப்படுகின்றது.

**அட்டவணை 4: நல்லாட்சிக்கான குறிகாட்டிகள்**

| நாடுகள் | சொத்தை பதிவு செய்வதற்க்கு எடுக்கும்நாட்கள் (2006) | வியாபாரம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நாட்கள்(2006) | தீர்வை செலுத்தி பொருட்களை வெளியே எடுப்பதற்கான சராசரி நாட்கள் (2006) | ஒழிப்புக்கான சுட்டெண் (2004)(நிலை) |
|---|---|---|---|---|
| சிங்கப்பூர் | 09 | 06 | 1.3 | 9.3(2) |
| சீனா | | 48 | 3.95 | 3.4(11) |
| இந்தியா | 62 | 71(05) | 13.5 | 2.8(13) |
| மலேசியா | 144 | 30 | | 5(7) |
| கொரியா | 11 | 22 | 5.9 | 4.5(8) |
| தாய்லாந்து | 02 | 33 | 1.34 | 3.6(9) |
| பிலிப்பின்ஸ் | 33 | 48 | 5.3 | 2.6(16) |
| இலங்கை | 63 | 50 | 3.1 | 3.4(10) |
| பங்களாதேஸ் | 42.5 | 38 | 8.2 | 1.5(21) |
| நேபாளம் | 5 | 31 | | 2.8(13) |
| பாகிஸ்தான் | 50 | 24 | 8.8 | 2.1(18) |

மூலம்: உலகவங்கியின் புள்ளிவிபர தளம். மற்றும் Transparency International (CPI)

*நல்லாட்சியை ஜனநாயகத்தின் மூலம் எய்த முடியாது என்பதற்கு இலங்கை இந்தியா போன்ற நாடுகளும், மென்மையான சர்வதிகார ஆட்சி முறை மூலம் அடையலாம் என்பதற்கு சிங்கப்பூரும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.*

## இலங்கையில் ஜனநாயகமும் நல்லாட்சியும்

இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையான நல்லாட்சியை 1978 க்கு முன்னரும் பின்னரும் அடையத் தவறிவிட்டது. 1957, 1958, 1961, 1983 ஆண்டுகளில் அப்பாவித் சிறுபான்மையினர் மீது நடாத்தப்பட்ட வன்முறைகளுக்கான நீதி இன்று வரை கிடைக்கவில்லை. நீதித்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டு இனரீதியான நீதியின் பேதப்படுத்தலைக் கொண்டிருக்கின்றது. 2 புள்ளிகளை ஜனநாயகச் சுட்டெண்ணாக கொண்ட சிங்கப்பூரில் ஒரு முறை ஓர் அரச உயர் அதிகாரி ஓர் விருந்து உபசாரத்தில் மது அருந்திவிட்டு லிப்ரில் வாந்தி எடுத்துவிட்டு வீடு வந்து சேர்ந்த போது அவருடைய வீட்டு பக்ஸ்ஸில் அவர் இக்குற்றத்துக்காக (பொதுமக்களுக்கு அசௌகரியமாக


லிப்ரில் நடந்து கொண்டமைக்காக) இரண்டு வாரங்கள் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கான கடிதம் வந்திருந்தது[15].

6.6 புள்ளிகளை ஜனநாயகச் சுட்டெண்ணாக கொண்ட இலங்கையில் குமார்ரூபசிங்க குறிப்பிடுவது போன்று 20 வருடங்களுக்கு முன்பு 1987 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ் அரச கருமமொழி என்ற சட்டம் இன்று வரை நடைமுறைப்படுத்தவில்லை. கொழும்பு மாவட்டத்தில் ஏறத்தாழ 60 சதவீதமான தமிழ்பேசும் மக்கள் வசிக்கிறார்கள். ஆனால் குறைந்தது ஒரு பொலிஸ் நிலையத்தில் கூட தமிழில் முறைப்பாடு செய்ய முடியாது. இலங்கையின் பாதுகாப்புச் செலவில் ஒரு வீதத்தை மொழியமுலாக்கத்துக்கு செலவு செய்தால் சிறுபான்மை மக்களின் மொழிப் பிரச்சினை குறைக்கப்படலாம் என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது[16]. ஆனால் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிரான நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முறையீட்டுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு அசுர வேகத்தில் நடைமுறைப்படுத்தப்படு கின்றது. எப்படி இலங்கை நல்லாட்சி மூலம் குட்டி சிங்கப்பூர் ஆக முடியும்? இலங்கையில் கட்டு நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தமிழ் பெண் அல்ல ஓர் சிங்கள பெண் கற்பழிக்கப்பட்டதான செய்திப் பதிவும் இருக்கின்றது.

இலங்கையின் இரண்டு அரச வங்கிகளான இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் அரசியல் வாதிகளுக்கும் அவர்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் கடன் வழங்கி பல மில்லியன் ரூபாவில் அறவிடாமுடியாத கடன்களால் வங்கி வினைத்திறைமையை இழந்து அரச நிதியில் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. இலங்கை மின்சார சபை மற்றும் புகையிரதத் திணைக்களம் என்பனவும் அரசியல் தலையீடு காரணமாக நட்டத்தில் இயங்குகின்றன. ஊழல், மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற நல்லாட்சியின் ஏனைய குறிகாட்டிகளிலும் இலங்கை கீழ்நிலையிலேயே இருக்கின்றது. இலங்கையில் தாராள ஜனநாயகமோ அல்லது குறைந்த ஜனநாய ஆட்சியோ நல்லாட்சியைக் கொண்டுவராமைக்கு பிரதான காரணம் இலங்கையின் அதிகார பணிக்குழுக்கள் இனவாதத்தில் ஊறி இருக்கின்றமையும் மலிந்த விலையில் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரத்தால் பௌத்த சிங்கள இனவாதத்துக்கு அப்பால் மக்கள் தேசியமயப்படுத்தப்படாமை ஆகும்.

### 6. ஜனநாயகமும் சீர்திருத்தங்களும்

கிழக்கு ஆசியப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் மிக வேகமாக முன்னேறிய நாடுகளின்



வெற்றிக்கு அந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சந்தைச் சீர்திருத்தங்கள் ஓர் காரணமாக அமைந்தன என்பதை எவரும் மறுக்க முடியாது. சீர்திருத்தங்கள் என்பது அரசியல் சீர்திருத்தத்தை முதலில் வேண்டி நிற்கவில்லை. ஜனநாயகமாக்கலோ அல்லது அடிப்படை மனித உரிமைகளைப் பேணும் சட்டங்களில் சீர்திருத்தங்களோ முதலில் இடம் பெறவில்லை. மாறாக அரசியல் சீர்திருத்தங்களைத் தாமதப்படுத்தி அல்லது அவ்வாறான சீர்திருத்தங்களை மேற்கொள்ளாமல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய தூரநோக்குள்ள அரசியல் தலைவர்கள் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு அரசியல் சீர்திருத்தம் அவசியமானது என்ற ஓர் விவாதத்தில் இருந்து நீங்கி ஓர் இறுக்கமான ஜனநாயகக்கட்டுப்பாட்டை பேணிக்கொண்டுதான் பொருளாதாரச் சீர்திருத்தங்களை முன்னெடுக்க முடியும் என்பதில் NICs நாடுகள் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் கொண்டிருந்தனர்.

ஜனநாயகம் தேர்தல் மூலம் மத்திய அரசை மாற்றமடையச் செய்கின்ற ஓர் நாட்டில்

**ஊழல், மோசடி, அதிகாரத் துஷ் பிரயோகம் போன்ற நல்லாட்சியின் ஏனைய குறிகாட்டிகளிலும் இலங்கை கீழ்நிலையிலேயே இருக்கின்றது.**

சந்தைச் சீர்திருத்தங்களைச் செய்ய முடியாது. தாராள ஜனநாயக நாட்டில் சந்தைச் சீர்திருத்தங்களுக்கு எதிராக பல அரசியல் கட்சிகள் பிரச்சாரம் செய்து, மக்களை ஏமாற்றி ஆட்சியை கைப்பற்றும் போது மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களைக் கைவிடவேண்டிய ஓர் சூழ்நிலைக்குள் அரசுகள் தள்ளப்பட்டிருக்கின்றன. எனவே சீர்திருத்தங்களுக்குத் தேவையான தேன்நிலவுக் கருதுகோளுக்கு (Hony Moon Hypothesis) ஜனநாயக பல கட்சி ஆட்சிமுறை தடையாக அமைகிறது. ஜனநாயக நாட்டில் அரசு தேன்நிலவைக் அனுபவிக்க முடியாது. தேன்நிலவுக் காலம் பல தென் ஆசிய நாடுகளில் சில ஆண்டுகளுள் முடிவடைந்து விட்டது. ஆனால் சிங்கப்பூர், மலேசியா, சீனா போன்ற நாடுகளில் பொருளாதார சீர்திருத்தங்களுக்கான தேன்நிலவுக்காலம் மிக நீண்டதாக காணப்பட்டமையும் இந்நாடுகள் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றமடைய ஓர் காரணமாக அமைந்தது. Gradual Reforms, Steps by steps, Crossing River with Feeling Stones under the Water (சீனா) போன்ற அம்சங்களை இந்நாடுகளின் சந்தைச் சீர்திருத்தங்களின்போது அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றன.

*1978 க்கு முன்னர் சீர்திருத்தங்களை முன்னெடுத்து செல்ல முடியாமைக்கு தாராள ஜனநாயகமும் ஒரு காரணமாக இருந்தது என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.*

இந்நாடுகளில் பல அவைகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் நிதியீட்டம் செய்வதற்காக கடனைப் பெறும்போதும் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவில்லை. மாறாக தங்களின் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்திக்குச் சீர்திருத்தங்கள் அவசியப்பட்டதால் இவை தாங்களாகவே அவற்றை முன்னெடுத்துச் சென்றன. சீர்திருத்தங்களில் எந்த நிர்ப்பந்தங்களும் நிபந்தனைகளும் இருக்கவில்லை. மாறாகப் பல தென் ஆசிய நாடுகள் ஜனநாயக ஆட்சியால் நுகர்வுச் செலவு அதிகரித்து வற்றிப்போன திறைசேரியை நிரப்புவதற்காகவும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு சிகிச்சை பெறுவதற்காக உலக நாடுகளையும் நிறுவனங்களையும் அணுகிய போது அவை சீர்திருத்தங்களைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டன.

*1990 இல் இந்தியாவில் சந்தை சார் சீர்திருத்தங்கள் 1978 இல் இலங்கையில் சந்தைச் சீர்திருத்தங்கள்* இவையாவும் ஓர் பொருளாதார சந்தை சீர்திருத்தங்கள் ஆகும். இவை ஓர் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் ஏற்பட்டவையாகும். கிழக்கு ஆசிய நாடுகளிலும் இந்தப் பண்பு சிறிதளவு காணப்பட்ட போதிலும் அவற்றின் பரிமாணம் வேறுபட்டதாகும்.

## இலங்கையில் ஜனநாயகமும் சீர்திருத்தங்களும்

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அரசியல் மற்றும் பொருளாதார சீர் திருத்தங்கள் அவசியமானவையாகும். 1978 க்கு முன்னர் சீர்திருத்தங்களை முன்னெடுத்து செல்ல முடியாமைக்கு தாராள ஜனநாயகமும் ஒரு காரணமாக இருந்தது என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. 1978 க்கு பின்னரான பகுதியான எதேட்சையான அதிகார ஆட்சி முறை சீர்திருத்தங்களை முன்னெடுத்து செல்வதற்கு தேவையான அரசியல் அதிகாரத்தை நீண்ட காலத்துக்கு கொடுத்திருந்தது. இலங்கைக்கு சீர்திருத்தங்களுக்கான தேன்நிலவுக் காலம் ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் 10 வருடங்களுக்கு மேலாக நீடித்துள்ளது. இவ் அதிகார ஆட்சியில் பொருளாதார சீர்திருதங்களில் இலங்கை குறிப்பிடக் கூடிய மாற்றங்களைப் பெற்றது. ஆனால் அச்சீர்திருதங்களில் இருந்து பெற்ற பொருளாதார அபிவிருத்தி என்பது சிறுபான்மையினருக்கு சார்பான அரசியல் சீர்திருத்தங்கள் இல்லாமையால் நழுவிச் சென்றுள்ளது. 1978 இல் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தம் சிறுபான்மையினரின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைவதற்குப் பதிலாக ஏற்கனவே சிறுபான்மையினர் தங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசியல் ரீதியாக கொண்டிருந்த சிறிய அதிகாரத்தையும் இல்லாமல் செய்துள்ளது.

*1987 இல் 13வது அரசியல் யாப்புத்திருத்தச்* சட்டம் மூலமாக சிறுபான்மையினருக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்கு அரசியல் அமைப்-

பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் ஏற்கனவே பொருளாதார அபிவிருத்தியில் இருந்த இன ரீதியான பேதப்படுத்தல்களை தடுத்து நிறுத்துவதற்கான அரசியல் பொறிமுறையை கொண்டிருக்கவில்லை என்பதற்கு அப்பால் சில இனப்பிரச்சினைக்கு முன்னேற்றகரமானவை என ஏற்றுக்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் சட்டமாகியும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது இலங்கையின் தலைமைத்துவம் பொருளாதார அபிவிருத்தி என்பதை விட இனம், மொழி அடிப்படையிலேயே ஊறி உறங்குகின்றது என்பதைப் புலப்படுத்துகின்றது. எனவே இலங்கையின் நல்லாட்சி தாராள ஜனநாய ஆட்சி மற்றும் குறைந்த ஜனநாய ஆட்சி ஆகிய இரண்டிலும் இல்லாமல் சென்றமைக்கு காரணம் ஆட்சியாளர்களின் தேசிய ஒருமைப்பாடு இல்லாத ஓரினத்தை சார்ந்த உளப்பாங்கு ஆகும்.

## 4. தொகுப்புரை

இலங்கை *1948 - 1978* வரையான காலத்தில் தாராள ஜனநாயக முறையிலான ஆட்சியையும், *1978* இன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஜனநாயகத்தைக் கொண்ட (நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை) நீண்ட கால ஆட்சியையும் கொண்டிருந்தது. *83.4* வீத பெரும்பான்மையில் *(1977-1989)* ஆட்சியில் அமர்ந்த ஐக்கிய தேசிய கட்சியின் *(1977-1994)* திறந்த பொருளாதார கொள்கையானது இலங்கையை தென் ஆசியாவில் குட்டி சிங்கப்பூராக மாற்றுவதை நோக்கமாக கொண்டிருந்தது. இலங்கை மேலைத்தேச நாடுகளால் வலியுறுத்தப்படுகின்ற தாராள ஜனநாயக ஆட்சி முறையிலோ அல்லது ஆசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேறிய நாடுகள் கடைப்பிடித்த வரையறுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சி முறை ஆகிய இரண்டிலும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் தோல்வியடைந்து விட்டது. இலங்கையின் இப் பொருளாதார பின்னடைவுக்கு பிரதான காரணமாக இலங்கை குறைந்த ஜனநாயகம், பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி இறுதியாக தாராள ஜனநாயகம் என்ற ஒழுங்கில் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக முதலில் தாராள ஜனநாயகம், சமூக அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி இறுதியாக குறைந்த ஜனநாயகம் என்ற ஒழுங்கில் சிறுபான்மை மக்களை ஜனநாயக மற்றும் அபிவிருத்தி நீரோட்டத்தில் இருந்து ஓரம்கட்டிக் கொண்டு முன்னெடுத்து சென்றமை ஆகும்.

தாராள ஜனநாயகத்தின் வழி இலங்கை பொருளாதார அபிவிருத்தியில் தோல்வி கண்டமைக்கு பிரதான காரணம் இலங்கைக்கு கிடைத்த சுதந்திரமும் அதன் வழி விஸ்தரிக்கப்பட்ட ஜனநாயகத்தின் நன்மைகளும் சிறுபான்மை மக்களை அறவே சென்றடையவில்லை என்பதற்கு அப்பால் இலங்கைக்கு கிடைத்த சுதந்திரமானது சிறுபான்மை மக்களின் சுதந்திர வேட்கையின் எழுச்சியை விளங்கிக்கொண்டு அதற்கு முளையிலேயோ அல்லது கனியிலேயோ பரிகாரம் தேடக் கூடிய தூரநோக்குள்ள அரசியல் தலைமைகளை பெரும்பான்மை மக்கள் மத்தியில் உருவாக்கத் தவறியமையாகும். வேறு ஒரு வார்த்தையில் கூறுவதாயின், சுதந்திரத்துக்காக போராடி பல தியாகங்களைச் செய்து சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தினால்தான் சுதந்திரத்துக்காக போராடும் இன்னொரு சமூகத்தின் கோரிக்கைகளை விளங்கிக்கொண்டு பரிகாரம் செய்ய முடியும்.

இலங்கைக்கு கிடைத்த சுதந்திரம் அவ்வாறான சிறந்த அரசியல் தலைமைகளை இரு சமூகங்களிலும் உருவாக்கத் தவறிவிட்டது. பெரும்பான்மைத் தலைவர்களைப் பொறுத்தவரை இலங்கை பல்லின சமூகங்களுக்குரியது என்றல்லாமல் இலங்கை பௌத்த சிங்களவர்க்குரிய நாடு என்ற அடிப்படையில் கொள்கைகளை வகுத்து முன்னெடுத்து செல்ல, சிறுபான்மை அரசியல் தலைவர்கள் மேடைப் பேச்சுக்களிலும் அறிக்கைகளிலும் வீரப் பேச்சுக்களை பேசிவிட்டு வாக்குகளுக்கு மட்டும் வடகிழக்குக்கு சென்றுவிட்டு கொழும்பில் இருந்தவாறு பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாத கோரிக்கைகளையும் அறிக்கைகளையும் முன்வைத்தனர். சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் என தெரிவுசெய்யப்பட்ட தமிழ் அரசியல் வாதிகள்

**இலங்கைக்கு கிடைத்த சுதந்திரமானது சிறுபான்மை மக்களின் சுதந்திர வேட்கையின் எழுச்சியை விளங்கிக்கொண்டு அதற்கு முளையிலேயோ அல்லது கனியிலேயோ பரிகாரம் தேடக் கூடிய தூரநோக்குள்ள அரசியல் தலைமைகளை பெரும்பான்மை மக்கள் மத்தியில் உருவாக்க தவறியமையாகும்.**

அரசினால் கிடைக்கும் அற்ப சலுகைகளையும் தம்மைச் சுற்றியுள்ள உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வழங்கி-விட்டு அதிகளவான சிறு-பான்மையினரை நடு ஆற்-றில்விட்டு விட்டு கொழும்பில் இருந்து சுக போக வாழ்க்-கையை அனுபவித்தமை ஆகும்.

ஒரு நாட்டின் மக்களும் தலைவர்களும் நாட்டை தேசிய அடிப்படையில் நேசித்து கொள்கைகளை வகுத்து பொருளாதார அபிவிருத்திக்கு இட்டு செல்வதற்கு, அந் நாட்டின் சுதந்திரம் ஒரு மைல் கல்லாக அமைய வேண்டும். அவ்வாறான விலைமதிக்க முடியாத சுதந்திரந்தான் ஊழல் மோசடி இல்லாத எல்லா மக்களையும் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடு இன்றி வழிநடத்துகின்ற மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளுகின்ற நல்ல அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்கும். இந்த நோக்கில், இலங்கையின் சுதந்திரம் பொருளாதார அபிவிருத்திக்கு தளமாக இருப்பதில் எவ்வழி-களிலும் பங்காற்றவில்லை எனலாம். நாம் சுதந்திரம் என்ற ஓர் பதாகையை தாங்கி பல மில்லியன் ரூபா செலவு செய்து பெப்ரவரி 4 ஐ கொண்-டாடினாலும் சிறுபான்மை-யினருக்கு மட்டும் அல்ல, பெரும்பான்மை மக்கள் பலருக்கும் இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. மதம், மொழி, இனம், சாதி, பிரதேசம்' என்ற சமூக பிரச்சினை-களில் இருந்து மீட்சி பெற்று பொருளாதார அபிவிருத்தி நோக்கி செல்லாமல் இருபத்-தோராம் நூற்றாண்டிலும் ஐரோப்பாவில் மத்திய காலத்-தில் இருந்ததைப் போன்று நாமும் அந்த இருண்ட யுகத்தி-லேயே சிக்கித் தவிக்கின்-றோம்.

*சிங்கள தலைவர்கள் மட்டுந்தான் தமிழ் மக்களின் பிரச்சினை-களுக்கும் இலங்கையின் இன்றைய பொருளாதார தேல்விக்கும் காரணம் அல்ல.*

குடியேற்ற நாட்டுவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையினால் இலங்கையில் ஏற்பட்ட ஒரேயொரு விளைவு யாதெனில் முன்பு பிரித்-தானியரின் கைகளில் இருந்த ஆட்சிப் பொறுப்பு இப்போது எந்த வகையிலும் பக்குவப்படாத மேலைத் தேச மயப்படுத்தப்பட்ட இலங்கை உயர் வர்க்கத்தினரை அடைந்திருந்தமையேயாகும். இம்முதலாளித்துவ உயர் வர்க்கம் அரசியலில் தாம் நிலைத்து இருப்பதற்கு ஆரம்பத்தில் சிற்றுடைமை உலர் வலய குடியேற்றத் திட்டம், கல்வி, சுகாதாரம், பின்னர் பாதுகாப்பு சேவை போன்ற சமூக நலச் செலவீடுகளை மேற்-கொண்டு தனது அதிகாரத்தைத் தக்க வைத்திருந்-தமை ஆகும். இது வர்க்க ரீதியாக எதுவித திருப்-பத்தினையும், குறிப்பாக பொருளாதார முகாமை-யைப் பொறுத்தவரை குறித்து நிற்கவில்லை. பொருளாதாரமானது பழைய ஒழுங்கு முறை-யிலேயே தொடர்ந்திருக்கத் தலைப்பட்டது. அடிப்-படை நிலையில் மாறுபாடுகளெதுவும் நிகழாத இச்சுதந்திரத்தின் தன்மையானது இலங்கை சுதந்திரத்தின் பின்னர் பெற்றுக்கொண்ட பொரு-ளாதார அபிவிருத்தியின் தன்மையைப் பாரதூர-மாகப் பாதிக்கக் கூடியதொன்றாயிருந்தது

S.W.R.D பண்டாரநாயக்க இலங்கைக்கு கொடு-த்த சுதந்திரம் பற்றி பின்வருமாறு குறிப்பிடு-கின்றார்.

*"சுதந்திரமானது வரையறுக்கப்பட்ட தத்து-வத்தின்பாற்பட்ட கொள்கைகளுக்கும் திட்டங்-களுக்குமான போராட்டத்தின் பின் வரவில்லை. ஆனால் அது சாதாரண நிகழ்வுகளின் போக்கி-லேயே வந்திருந்தது". சுதந்திரமின்றி நடைமுறைப்-படுத்த முடியாத தத்துவங்கள் கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை ஈடுபடுத்தி அவற்றிற்காக சுதந்திரத்துக்கு போராடுவது என்பது இருக்க-வில்லை"..அது ஒரு இரவுக்குள் கிடைத்தது. ஒரு நாள் நாம் கண் விழித்த போது "நீவீர் இப்போது ஒரு டொமினியன்" என எமக்கு கூறப்பட்டது."* (வி.நித்தியானந்தன், 1989,ப.41)

பல வருடங்கள் போராடி பலவற்றை இழந்து விலை கொடுத்து வாங்கிய பொருள்தான் பொறுமதியானதாக இருக்கும். சிங்கள தலைவர்-கள் மட்டுந்தான் தமிழ் மக்களின் பிரச்சினை-களுக்கும் இலங்கையின் இன்றைய பொருளாதார தேல்விக்கும் காரணம் அல்ல. சுதந்திரம் பெற்ற அதே 1948 இல் நியாயமற்ற கோரிக்கையை வைத்தது யார்? ஏறத்தாழ 25 வீதமான தமிழ் பேசும் மக்களுக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவமாக 50 க்கு 50 கேட்டது நியாயமானதா? மறுபுறத்தில் தமிழ்மக்கள் பெரும்பான்மையினராக இருந்து ஆட்சி அதிகாரத்தையும் வைத்துக் கொண்டிருந்-

தார்கள் என எடுகோள் கொள்வோமாயின் சிங்கள மக்கள் 50 க்கு 50 கோரிக்கையை முன்வைத்திருந்தால் அதற்கு தமிழர்களின் பதில் நடவடிக்கைகள் மற்றும் அரச கொள்கைகள் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை நாம் சற்று சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்[17]. இக் கோரிக்கையை முன்வைத்த தலைவர் எல்லா இன மக்களையும் ஒன்றிணைக்கக் கூடிய தேசத்தை நேசிக்கின்ற அரசியல் தூரநோக்கம் கொண்டவரா[18]? இலங்கையின் சுதந்திரம் சுயநல நோக்கம் கொண்ட மூன்றாம் நிலைத் தலைவர்களையே உருவாக்கியுள்ளது.

இலங்கையின் எதிர்கால பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு உயர்வான ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிக்கும் பெரும்பான்மை மக்களிடம் இருந்து அறவே ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிக்காத சிறுபான்மை மக்களுக்கு ஜனநாயகத்தை மறுபங்கீடு செய்ய வேண்டி உள்ளது. அவ்வாறான ஜனநாயக மறுபங்கீடானது கடந்த காலத்தில் நிகழ்ந்த பொருளாதார பேதப்படுத்தல்களை தடுத்தி நிறுத்தி சிறுபான்மை மக்கள் தங்கள் பிரதேச பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு பெரும்பான்மை மக்களில் தங்கியிருக்காத ஒரு அரசியல் பொறிமுறையாக இருக்க வேண்டும். அவ்வாறான ஒரு அரசியலமைப்பை உருவாக்கி அமுல்படுத்தும் போது கடந்த காலத்தைப் போன்று பெரும்பான்மை மக்களிடம் இருந்து எதிர்ப்புக்கள் உருவாவது ஜனநாயக ஆட்சியில் தவிர்க்க முடியாது.

நாட்டை பொருளாதார அபிவிருத்தி நோக்கி திசை திருப்ப வேண்டுமாயின் அவ்வாறாக எதிர்க்கும் ஜனநாயக குரல்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கி ஆசியாவில் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற நாடுகளைப் போன்று ஒரு கட்சி ஆட்சியோ அல்லது ஒரு கட்சி எப்போதும் தலைமை தாங்குகின்ற ஆட்சியோ இலங்கைக்கு அவசியமாக இருக்கின்றது. இவ்வாறான ஜனநாயகத்தைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு கட்சி ஆட்சி குடும்ப அரசியலாக அன்றி தேசத்தின் அனைத்துப் பிரதேச அறிவுசார் சமூகத்தின் பிரதிநிதிகளை அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புக்களில் அமரச் செய்யும் தனிமனித ஆட்சியாக அன்றி கூட்டு ஆட்சியாக அமைய வேண்டும். அவ்வாறான ஒரு ஆட்சியை இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை மூலம் இரத்தம் சிந்தாமல் மாற்றலாம். துரதிஷ்டவசமாக இலங்கையின் அண்மைக்கால அரசியல் இராணுவ அசைவுகள் அரசியல் பிரச்சினைக்கு இராணுவ அணுகு முறை மூலம் தீர்வு காணலாம் என்பதை குறித்து நிற்கின்றது. இவ் அணுகுமுறையானது அரசாங்கம் கடந்த 60 ஆண்டுகள் கடைப்பிடித்த கொள்கையை இராணுவத்தைப் பயன்படுத்தி அடையப்பெறுவதைக் குறித்து நிற்கின்றது. இலங்கை பொருளாதார அபிவிருத்தியை விட இனம், மொழி, மதம் என இருண்ட யுகத்தில் மூழ்கின்றது.

எனவே இன்றைய இலங்கையின் பகுதியான ஏதேச்சதிகார ஆட்சியானது இன, மத, மொழி பேதம் இன்றி எல்லா மக்களுக்குமான முழுமையான ஏதேட்சை அதிகார ஆட்சியாக மாற்றமடைந்திருந்தால் இலங்கையில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஊடாக அமைதியையும் மற்றும் பொருளாதாரக் கொள்கைத் தந்திரோபாயமான நுகர்வு செலவைக் குறைத்து மூலதனச் செலவை அதிகரிக்கவும் முடிந்திருக்கும். அவ்வாறான ஒரு முழுமையான ஏதேட்சை அதிகார ஆட்சியை உருவாக்கக் கூடிய பகுதியான ஏதேச்சதிகார ஆட்சியை இலங்கை கொண்டு இருந்தாலும் அதிகாரத்தை கைப்பற்றி பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான கொள்கைகளை முன்னெடுத்து செல்வதற்கான இனம், மொழி, மத, பிரதேச வேறுபாடுகளை கடந்த நிலையில் உள்ள ஒரு தலைமைத்தும் உருவாகக் கூடிய அரசியல் சூழல் இலங்கையில் இல்லை என்றே கூறலாம்.

இலங்கையில் ஒரு கட்சி ஆட்சியானது 60 ஆண்டுகளாக தீவிட்டு எரியும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்க்கு மட்டுமன்றி இலங்கையில் கடந்த காலத்தில் இருந்த சமூகநல அரசை அபிவிருத்தி அரசாக மாற்றி பொருளாதார வளர்ச்சியை தளமாக கொண்ட அபிவிருத்தியை அடையவும் அவசியமாகும்.

**இலங்கையின் அண்மைக்கால அரசியல் இராணுவ அசைவுகள் அரசியல் பிரச்சினைக்கு இராணுவ அணுகு முறை மூலம் தீர்வு காணலாம் என்பதை குறித்து நிற்கின்றது.**

## அடிக்குறிப்புகள்

1 Increasing national production, rising level of living, and promoting widespread employment opportunities are all as much function of the local history, expectations, values, incentives, attitudes and beliefs, and institutional and power structure of both the domestic and global society....... Looking back over years, it is now clear that, in their preoccupation with growth and its stages and with the provision of capital and skills, development theorists have paid sufficient attention to institutional and structural problems and to the power of historical, cultural, and religious forces in the development process "by Indonesian intellectual Soedjatmoko, former rector of the united nations university in Tokyo. Carried by Michael P. Todaro (2006), pp.17-8

2 The living standard in a society is direct result of the dynamic interdependent of economic, political and social forces "[Ludovic Comeau.Jr 2003]

3 Even though success of NICs has been achieved by market friendly policies, geographical location, international political back ground of cold war, their common Confucian heritage which gives them a labor force hard working and other cultural values, any one can not reject the argument of sociopolitical stability which these countries had during their rapid economic development era by suppressing democracy until they became as a strong wealth of nation, Santhirasegaram.S(2007)

4 *Through the issue has not been raised in any paper in the publication, it could be hypothesized that many institutional, cultural, political and other peculiarities of the country, not captured in the policy critique of mainstream economic discourse were behind Sri Lanka 's failure to economically keep up with those other countries which, four decade ago, were at either parallel or inferior conditions* ....."W.D Lakshman (1997), p.16

5 "From late 60s, I have visited Hong Kong almost every year, to study and to understand why Hong Kong people work with so much more drive and vigorous than the people in Singapore and to learn something from them....through the Hong Kong watching, I concluded that state welfare and subsidies blunted the individual's drive to succeed...I resolved to reverse course on the welfare policies which my party had inherited or copied from the British labor party's policies. by Lee Kuan yew in Micheal (2000) p.113

6 Thus, it is not surprising that Foucault, the seminal French philosopher, correlated the rise of European capitalism not to the spread of political liberty, but rather to the rise of the controlling, authoritarian aspects of European culture. Taking this notion a step further, one can surmise that the brutish aspects of China's political and social design were essential for the country's remarkable economic growth. Shlapntokh. D.( 2002), p. 246

7 GoldSmith. A, points out that even some established liberal democracies, such as Unites States, are not "fully democratic" as the world learned during the 2000 presidential election, with the exposure of many polling irregularities and defeat of candidate who won the largest number of popular votes nationwide, GoldSmith. A,Business, (2002) p-99.

8 Lee said in an interview "They were going to creating a just society for the British workers- the beginning of a welfare state, cheap council houses, free medicine and dental treatment, free spectacles, generous unemployment benefits. Of course, for students from colonies, like Singapore and Malaysia, it was great attraction as alternative for communism. We did not see until the 1970s that that was beginning of big problems contributing to the inevitable decline of British economy...........movement we go into the office in Singapore in 1959, we reversed the policies. We stopped free medicine ....we knew that free medicine was wasteful .....We leaned quickly that it was not workable, that was one of the causes of Britain's decline" W.G. Huff (1995), p.110

9 "Lee Kuan Yew was undoubtedly genuine in his belief in Fabian socialism in his university days. But there has been little detailed attention paid later development (socialism) eventual abandonment of his socialist idea or his attitude to the welfare state.... Lee never intended to build a a wefare state in Singapore"see Lee Kuan Yew 's Fabian base by Micheal (2000)

10 "A visionary zeal in peasant colonization of the dry zone-as a return to the heartland of the ancient irrigation civilization of the Sinhalese" (பேராசிரியர் ச. சத்தியசீலன், பக்கம் 10)

11 இலங்கையில் 1950 களில் பிற்பகுதியில் தோன்றிய மொழிப்பிரச்சினை போன்று சிங்கப்பூரில் சீனாவை பின்னணியாக கொண்ட சீனக் கடும் போக்காளர்கள் சீனமொழியை அரச கரும மொழியாக அமுல்படுத்த வேண்டும் என வேண்டி நின்றனர். குறிப்பாக Tan Lark Sye என்பவர் இரண்டாம் உலகப் போரில் பிரபல்யமான ஒரு இராணுவ ஜனரல் ஆவார். இவர் சிங்கப்பூரில் சீன மொழியில் கல்வி நிறுவனங்கள் இயங்க வேண்டும் என்றும் சீனமொழிக்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்பட வேண்டும் எனவும் 1961 இல் வாதாடியுள்ளார்.

"Increasing taxes, laying traps. Turing out pools and wasting public funds"...If we do not take steps to preserve our culture now, in 40 or 50 years perhaps we shall no longer call our self Chinese" (Eastern Economic Review, 1980, p.161)

12 *"Principle of political structure of China is that preceding from China's realities instead of coping political system from the west and practicing multi - party election system. When we judge whether the political system, political structure, and policies of a state are right or not, we have to keep three criteria in mind.... The first is whether the political situation of that country is stable or not. Second is whether it can strength national unity and improve people's living standards, the third is weather the productive forces can be developed in a sustainable way. Some countries carried out the political structural reform alone without developing the productive forces and reforming the economic structure ended on great social upheavals...after decisive progress has been made in the reform on the economic system, pushing forward the political structural reforms became more necessary and urgent. Therefore, the political structural reforms should be accelerated in good ti ming, so that it can go with the economic structural reform, thus ensuring long–term stability throughout country. "....* Deng Xiaoping, carried by Lin Zhaomu, pp.469-70

13 *"All people of all countries needed a good government. A country first has economic development then democracy may follow. With a few of exception, democracy has not brought good government to new developing countries. Democracy has not led development because the government did establish the stability and discipline necessary for development"* Lee Kuan Yew, carried by Mya Maung [1996]

14 விரிவுரையில் இருந்து பெறப்பட்டது.

15 Kumar Rupesinghe (2008) The impact of language right violations in Sri Lanka - 1956-2007, Available at http://www.kumarrupesinghe.org/Pages/Full-Article.aspx?ArticleID=157

16 இலங்கையில் யார் முதலில் குடிவந்தவர்கள் என்ற வாதத்தை நீக்கி இரண்டு இனமும் இலங்கையில் புராதன காலம் தொட்டு வாழ்ந்து வந்தனர். இரு இனத்துக்கும் அவர்களின் குடிசார் வீதத்துக்கு ஏற்ப்ப ஆட்சியில் பங்கு கொள்வதற்க்கு உரிமை இருக்கின்றது.

17 இக் கோரிக்கைக்கு முன்னர் இலங்கைத் தழிழ் தலைவர்களை சிங்கள மக்கள் மட்டும் அல்ல அவர்களின் தலைவர்களும் அலங்கரிக்கப்பட்ட குதிரை வண்டியில் ஏற்றி துறைமுகத்தில் இருந்து அவர்களுடைய வாசல்தலத்துக்கு தாங்களாகவே இழுத்து சென்று இருக்கின்றார்கள்.

## உசாத்துணை:


Jon.S.T Quah (2001) Combating Corruption in Singapore, What can be learned? Journal of Contingencies and Crisis Management, Vol. 9, No1

Huff .W.G. (1995) The Developmental State, Government, and Singapore's Economic

Development Since 1960, World Development Vol 23, pp. 1423-38

Kristian Stokke (1997) Autho-ritarianism in the age of market liberalism in Sri Lanka, Anti-pode, 29/4, pp. 437-455

Michael D.Barr (2000) Trade Union in an Elitist Society: the Singapore Story,Australian Journal of Politics and History, Vol 46, pp.480-96

Michael D.Barr (2000) Lee Kuan Yew's Fabian Phase, Australian Journal of Politics and History, Vol. 46, pp.110-25

Peter Wilson (2000) The Dile-mma of a More Advanced Developing Country: Confli-cting Views on the Develop-ment Strategy of Singapore, The Developing Economies, XXXVIII-1 pp.105–34

Shlapntokh. D.( 2002) Post-Mao China: an alternative to 'The end of history'? Communist and Post-Communist Studies 35 , 237–268

Vasoo. S.and Lee.J (2001) Singapore: Social Development, Housing and the Central Provident Fund, International Journal of Social Welfare, Vol.10, pp.276-283

World Bank (2008) online database, available with subscription

# பால்நிலையும் அபிவிருத்தியும்
## மூன்றாம் உலகக் கருத்தியல்

-அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி-

**"சுருக்கம்: அபிவிருத்தி என்ற கருத்துநிலையில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்கள், உலகத்தின் சரிபாதி சனத்தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்கள் சமூகம் அபிவிருத்திச் செய்முறையில் மெல்ல மெல்ல உள்வாங்கப்பட்ட விதம், பால்நிலை சார்ந்து அபிவிருத்தி பற்றிய கருத்துநிலை போன்றவற்றை வரலாற்று நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது."**

### பால்நிலை (Gender)

சமூகம் ஒன்றினால் ஆண் பெண் என்ற இரு பாலாருக்குமெனத் தனித்தனியாக கட்டியமைக்கப்பட்ட கடமைக்கூறுகள், உறவுமுறைகள், ஆளுமைப் பண்புகள், மனப்பாங்குகள், நடத்தைகள், விழுமியங்கள், ஆற்றல்கள், செல்வாக்குகள் என்பன பால்நிலை எனப்படுகின்றது. Social Relations To Gender என்ற சொற்றொடரின் சுருக்க வடிவமே Gender என அழைக்கப்படுகின்றது.

**பால்நிலை என்ற சொல்லானது ஆணையோ பெண்ணையோ தனித்துக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படாது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு-முறையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒன்றாகவும் உள்ளது.**

உயிரியல் வகைப்பாட்டின் அடிப்படையில் ஆண் என்றும் பெண் என்றும் வேறுபடுத்திப் பார்க்கப்படுவது பால் (Sex) எனப்படுகிறது. பால் என்பது பிறப்பினால் தீர்மானிக்கப்பட்டதாக உடற்கூற்றுப் பண்புகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் ஒன்றாக இருக்கும் அதேசமயம் பால்நிலை என்பது கற்றறிந்த ஒன்றாக, காலத்துக்குக் காலம் மாற்றம் பெறும் ஒன்றாக, கலாசாரங்களின் அடிப்படையில் வெவ்வேறுபட்டதாக உள்ள ஒரு அடையாளமாகவுமே பார்க்கப்படுகின்றது. இதுமட்டுமன்றி பால்நிலை என்ற சொல்லானது ஆணையோ பெண்ணையோ தனித்துக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படாது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவுமுறையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒன்றாகவும் உள்ளது. அதிகாரப் பகிர்வு, தீர்மானம் மேற்கொள்ளல், உழைப்புப் பிரிவினை, வீட்டிலும் சமூகத்திலும் உழைப்பு போன்றவற்றில் உலகளாவிய ரீதியில் வெளித்தெரியும் சமச்சீரின்மையை பால்நிலை சார்ந்த சமூக உறவுகள் விளக்க முனைகிறது. சமூக நடைமுறைகள், விழுமியங்களும் எதிர்பார்ப்புகளும், குடும்பமும் சமூக நியமங்களும், அதிகார உறவுகள், பரஸ்பர negotiated புரிந்துணர்வுகள், பொருளாதார வளங்களுக்கான அணுகுகை, பாரம்பரிய நம்பிக்கைகளும் வழக்கங்களும், சட்டங்குகளும் ஒழுங்குமுறைகளும், சமய கட்டளைகள் போன்றவை ஆண் பெண்களுக்கிடையிலான உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளாகக் கருதப்படுகின்றன. (Jayasuriya 1999)

### பால்நிலைத் தேவைகள் (Gender Needs)

1985இல் பால்நிலைத் தேவைகள் பற்றி முதன் முதல் ஆய்வு செய்தவராகக் கருதப்படும் Maxine Molyneux பால்நிலை சார்ந்து பின்வரும் இருவகையான தேவைகள் பற்றி வரையறுக்கின்றார். தேவைகள் என்ற சொல்லுக்குப் பதிலாக ஆர்வங்கள் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார்.

நூலகம்
யாழ்ப்பாணம்

- நடைமுறைப் பால்நிலைத் தேவைகள் **Practical Gender Needs** உடனடித் தேவை ஒன்றைப் பூர்த்தி செய்யும்பொருட்டு சமூகரீதியில் வரையறுக்கப்பட்ட கடமைக்கூறுகளுக்குள் நின்றுகொண்டு பெண்களால் இனங்காணப்படும் தேவைகள். நீர் வசதி, உடல்நலப் பராமரிப்பு, வேலை போன்ற வாழ்க்கை நிலைகளில் ஏற்படும் பற்றாக்குறைகளுடன் தொடர்புபடும் ஒன்றாக இவை இருப்பதுடன் சமூகத்தின் பெண்களின் இரண்டாம்தர நிலையையோ பால்சார்ந்த உழைப்புப் பிரிவினையையோ கேள்விக்குட்படுத்துவதில்லை.
- தந்திரோபாயப் பால்நிலைத் தேவைகள் **Strategic Gender Needs** கீழ்நிலைப்பட்ட சமூக அந்தஸ்தின் வெளிப்பாடாக பெண்களினால் இனங்காணப்படும் தேவைகள். இது பால்சார்ந்த உழைப்புப் பிரிவினைச் சக்திக்கும், பாரம்பரிய ரீதியில் வரையறுக்கப்பட்ட நியமங்கள், கடமைக்கூறுகள் என்பவற்றுக்கும் எதிராக சவால்விடும் போக்குக்கு இட்டுச் செல்கிறது. சட்ட உரிமைகள், குடும்ப வன்முறைகள், சம ஊதியம், தங்கள் உடலைத் தாமே கட்டுப்படுத்தும் உரிமை போன்ற விடயங்களை இது உள்ளடக்கும். [www.gender glossary.htm]



### அபிவிருத்தி (Development) மாறும் கருத்து நிலைகள்

பொருளாதாரத்தின் இயலளவை – மொத்தத் தேசிய உற்பத்தி அல்லது மொத்த உள்ளநாட்டு உற்பத்தியானது குறிப்பிட்ட அளவில் நீண்ட காலத்திற்கு அதிகரித்துச் செல்லும் நிலை – மட்டும் குறிப்பதாக இருந்த ஆரம்ப கால அபிவிருத்திக் குறிகாட்டி, பின்னர் சனத்தொகையின் அபரிமித வளர்ச்சி காரணமாக மேற்குறித்த குறிகாட்டியில் பாதிப்பு ஏற்பட்டபோது உருவான தலாவருமானம் என்ற குறிகாட்டி, வேலைவாய்ப்பிலும் உற்பத்தியிலும் ஏற்படும் கட்டமைப்பு மாற்றங்கள் - அதாவது வேலைவாய்ப்பிலும் உற்பத்தியிலும் விவசாயத்தின் பங்கு குறைவடைந்தும் கைத்தொழில் மற்றும் சேவைத்துறையின் பங்கு அதிகரித்துச் செல்லும் நிலை – என்ற குறிகாட்டி என்று முழுக்க முழுக்க பொருளாதார அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட அளவீடுகளால் அபிவிருத்தியானது அளக்கப்பட்டும் கூட அபிவிருத்தி தொடர்பான நடைமுறை நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இதனால் பொருளாதார அபிவிருத்தி என்பது 1960களில் எழுத்தறிவு வீதம், சுகாதார சேவை, வீட்டு வசதிகள் போன்ற சமூகக் குறிகாட்டிகளையும் தன்னுள் இணைத்துக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரிலேயே தொடர்ந்தும் இயங்கியது. எனினும் மக்களின் வாழ்க்கை நிலையில் எதுவித மாற்றமும் ஏற்படாமை இனங்காணப்பட்டபோது அபிவிருத்தி என்பது சமூக அமைப்பு, பொதுமக்களின் நோக்கு, தேசிய நிறுவனங்கள் ஆகியவற்றில் பிரதான மாற்றங்களை வேண்டி நிற்கும் ஒன்றாகவும், துரித பொருளாதார வளர்ச்சி, வருமான அசமத்துவ நிலைக்குறைப்பு, வறுமை ஒழிப்பு என்பவற்றை உள்ளடக்கியதொன்றாகவும் பரந்து பொருள் கொள்ளப்பட்டது.

**1960களில் எழுத்தறிவு வீதம், சுகாதார சேவை, வீட்டு வசதிகள் போன்ற சமூகக் குறிகாட்டிகளையும் தன்னுள் இணைத்துக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரிலேயே தொடர்ந்தும் இயங்கியது.**

அபிவிருத்தி என்ற கருத்துநிலை வெறுமனே பொருளாதார அபிவிருத்தியை மட்டும் மையப்படுத்தியதொன்றல்ல. அது பரந்துபட்ட ஒரு கருத்து நிலையாக சமூக அரசியல், நிறுவன அழகியல் ஒழுக்க அம்சங்களில் மாற்றத்தை வேண்டுவதொன்றாக உள்ளது என்பதையே "சிறந்த கல்வி, உயர்ந்த போசாக்கு, சுகாதாரம், குறைந்த வறுமை, சுத்தமான சூழ்நிலை, மக்கள் யாவருக்கும் சம சந்தர்ப்பம் கிடைத்தல், அதிகளவு தனிமனித சுதந்திரம், செழிப்பான

கலாசார வாழ்க்கை என்பவற்றை உள்ளடக்கியதொன்றாக பல்பரிமாணத் தன்மை நிறைந்ததொன்றாக 1991 இன் உலக வங்கி அறிக்கையானது எடுத்துக்காட்டுகின்றது. [World Bank Report].

ஜனநாயக அபிவிருத்தி, நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி, வாழ்க்கைத் தர மேம்பாடு, மொத்தத் தேசிய உற்பத்தியில் அதிகரிப்பு ஆகிய பரந்த குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு 21ம் நூற்றாண்டின் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அபிவிருத்திப் பொருளியல் சார்ந்த வருடாந்த உலக வங்கி மாநாட்டில் முன் வைக்கப்பட்டது. [Stiglitz 1998].

## அபிவிருத்திக் கொள்கைகளும் பெண்களும்

*1950கள் தொடக்கம் அபிவிருத்தித் திட்டமிடலானது சர்வதேச கவனத்துக்கு வந்தபோது பெண்களில் பலதரப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்துகின்ற பின்வரும் அணுகுமுறைகள் முயற்சி செய்யப்பட்டன.*

- **நலன் (Welfare)** : இது ஒரு ஆரம்பகால அணுகு முறை மட்டுமன்றி 1950-70 காலப்பகுதியில் மேலாதிக்கம் செய்த அணுகு முறையாகவும் இன்று வரை பரவலான பயன்பாட்டில் உள்ள ஒரு அணுகுமுறையாகவும் உள்ளது. பெண் சமத்துவம் மற்றும் வலுவூட்டல் கட்டமைப்பில் தனித்துவ கவனிப்பைப் பெறும் பதமாக உள்ள இது, பொருள்சார் நலனில் ஆண் பெண்களுக்கிடையிலான பால்நிலை இடைவெளியை குறிக்கிறது. பெண்கள் அபிவிருத்தியின் இறுதி இலக்கு நலன் சார்ந்து பால்நிலை இடைவெளியைக் குறைத்தல்

- **ஒப்புரவு (Equity)** : ஒப்புரவு என்பது நலன்கள், பொறுப்புகள் ஆகியவற்றின் பகிர்வில் நேர்மையையும் நீதியையும் கடைப்பிடித்தல் என்ற பொருளைத் தருவது. அந்த வகையில் பால்நிலை ஒப்புரவு என்பதை ஆண் பெண் தேவைகள், உரிமைகள், நலன்கள், கடமைகள் வாய்ப்புகள் என்பவற்றை சமமாக நடத்துவதில் நேர்மையையும் நீதியையும் கடைப்பிடித்தல் எனப் பொருள்கொள்ளலாம். சட்டத்தின் முன் ஆணும் பெண்ணும் சமம் என சட்டம் இயற்றுதல் சுலபமானது. ஆனால் உண்மையான அக்கறையோ ஆர்வமோ இன்றி சமத்துவம் பெறப்பட முடியாது என்பதனால் பால்நிலைச் சமத்துவத்தின் முக்கிய மூலக்கூறாக இது உள்ளது. அபிவிருத்தியில் பெண்கள் என்ற கருத்துநிலையின் மூல அணுகுமுறையாகக் கருதப்படும் இது 1975-85 கால பெண்கள் தசாப்தத்தில் பயன்படுத்தப்பட்டது. இந்த அணுகுமுறையானது அபிவிருத்திச் செய்முறையில் பெண்களை செயற்படு பங்காளிகளாகப் பார்த்தது.

- **வறுமை எதிர்ப்பு (Anti poverty)** : அபிவிருத்தியில் பெண்கள் என்ற கருத்துநிலையின் இரண்டாவது அணுகுமுறையாக இது கருதப்படுகின்றது. ஏழைப்பெண்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட இந்த அணுகுமுறையானது வறுமைக்குக் காரணம் குறை அபிவிருத்தியே அன்றி பெண்ணின் இரண்டாம்தர நிலை அல்ல எனக் கருதுகின்றது.

- **பயன்விளைவு (Efficiency)** : இன்று மிகவும் பரவலாகப் பயன்பாட்டிலுள்ள அணுகு முறையாக உள்ள இது, அபிவிருத்தியானது பயன்விளைவும் செயல்திறனுமுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதே இந்த அணுகுமுறையின் இலக்காகும். பொருளாதார உறுதிப்பாடு மற்றும் சரிப்படுத்தல் சார்ந்த கொள்கைகள் அபிவிருத்தில் பெண்களின் பங்களிப்பில் தங்கியிருக்கின்றன என்றும் வறுமை திறமையுடன் முகாமை செய்வதற்கான ஆற்றலை அவர்களிடம் உருவாக்குவதை இக்கொள்கைகள் இலக்காகக் கொண்டுள்ளன என்பது தொடர்பான விழிப்புணர்வை இவ்வணுகுமுறை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

- **வலுவூட்டல் (Empowerment)** : 1980களின் நடுப்பகுதி தொடக்கம் மூன்றாம் உலகப் பெண்ணியவாதிகளால் உருவாக்கப்பட்ட அணுகுமுறை இது. தன்னிறைவின் ஊடாக

*1950கள் தொடக்கம் அபிவிருத்தித் திட்டமிடலானது சர்வதேச கவனத்துக்கு வந்தபோது பெண்களில் பலதரப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்துகின்ற பின்வரும் அணுகுமுறைகள் முயற்சி செய்யப்பட்டன.*

பெண்களின் வலுவூட்டலை இது இலக்காகக் கொண்டுள்ளது. ஆணாதிக்க மனப்போக்கு மட்டுமன்றி காலனித்துவ மற்றும் நவ காலனித்துவ ஒடுக்குமுறையிலிருந்து உருவான ஒன்றாக பெண் ஒடுக்குமுறையை கருதுகின்றது. வலுவூட்டல் என்பது அபிவிருத்தியின் முக்கிய கூறாகக் கொள்ளப்படுவது தடைகளைத் தாண்டுவதற்கான செயற்பாட்டைக் குறிப்பது. செய்முறையை மட்டுமன்றி அதனால் கிடைக்கும் பலன்களையும் உள்ளடக்குவது அமைப்பு ரீதியான பால்நிலை அசமத்துவம் உருவாக்கிய இடையூறுகளைத் தாண்டுவதற்கு ஒடுக்கப்பட்டவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்ளும் நடவடிக்கையையும் இது குறிக்கும். பால்சார்ந்த உரிமையளிப்பு என்பது ஆண் பெண் இருவருமே தமது வாழ்வை தாமே கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் நிலை. தமக்குரிய நிகழ்ச்சி நிரலை தாமே உருவாக்குதல், புதிதாகத் திறன்களைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது ஏற்கனவே தம்மிடம் இருக்கும் திறன்களுக்கு அங்கீகாரமுடைத்தாதல், தன்னம்பிக்கையை அதிகரித்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல், தம்மில் தாமே தங்கியிருக்கும் நிலையை வளர்த்தல் போன்றவை இதற்குள் உள்ளடங்கும். தமக்கு ஏற்கனவே மறுக்கப்பட்டிருந்த வாழ்க்கைத் தெரிவுகளைத் தந்திரோபாயரீதியில் மேற்கொள்ளும் பெண்ணின் ஆற்றலை விரிவுபடுத்தும் செயற்பாட்டையும் இது குறிக்கும்.



### அபிவிருத்திக் கொள்கைகளது வரலாறும் பெண்களின் நிலையும்

பொதுசனத் தொடர்பு ஊடகங்களில், கல்விசார் செயற்பாடுகளில் நாளாந்த வாழ்வியலில் அபிவிருத்தி என்ற பதத்தின் உள்ளடக்கம், உட்பொருள் அதன் பயன்பாடு சார்ந்து தெளிவுத்தன்மை ஒன்றை மேற்கொள்ள வேண்டிய தேவையை பால்நிலை சார்ந்த நோக்கு வலியுறுத்துகின்றது. அபிவிருத்தி என்ற பதம் தொடர்பான கருத்துநிலைகளும் அக்கருத்துநிலைகளின் மூலமும் அலசப்பட வேண்டும் என இது வலியுறுத்துகின்றது. உலக அமைப்பு என்பது வாங்குவோர் விற்போர்க்கிடையிலான அல்லது காலனித்துவ ஆட்சியாளருக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலான அல்லது முதலீட்டாளருக்கும் உற்பத்தியாளருக்குமிடையிலான தனித்துவ உறவுமுறைகளினால் மட்டும் கட்டியமைக்கப்பட்டதொன்றல்ல. மாறாக பொருள் சார், அரசியல் மற்றும் கலாசார வாழ்வினது பலதரப்பட்ட மட்டங்களினதும் அவற்றிற்கிடையிலான ஊடாட்டங்களினதும் சிக்கல்வாய்ந்த கட்டமைப்பைக் கொண்டது. இலங்கையில் பிரித்தானிய ஆதிக்கமானது வெறுமனே வியாபார மற்றும் பிரதேச விரிவாக்கம் மட்டுமன்று. அது குடும்ப உற்பத்தி முறைகளில் பிரித்தானிய முதலீடுகளின் விளைவாகவோ அல்லது நில உரிமையாளருக்கும் கிராமக் குடியானவனுக்கும் இடையில் அரச தலையீட்டின் விளைவாகவோ பார்க்கப்பட வேண்டியது.

உலக அமைப்பில் இலங்கையர்களை உள்வாங்கிய தன்மையானது ஆங்கிலம் பேசுகின்ற தேசிய மட்டத்திலான உயர்ந்தோர் குழாம், புதிய சட்ட கட்டமைப்புகள், வகுப்பு, வர்க்கம், பால்நிலைப் பிரிப்பு என்பவற்றில் தாக்கம் செலுத்துகின்ற கல்வி, புதிய வடிவிலான கிராமிய வாழ்வு மற்றும் நகரமயமாக்கத்தின் தோற்றத்துக்கு வழிசமைத்தது. ஐரோப்பிய தொழில் முயற்சியாளர்கள், அரசாங்கங்கள், மதநிறுவனங்கள் அல்லது இராணுவத்தினருடன் காலனி நாடுகளில் உள்ளவர்களது பொருள்சார் மற்றும் அரசியல் ஈடுபாடானது பொருளாதார செயற்பாட்டினது கட்டமைப்புகள் அல்லது குடும்பத்தின் நாளாந்த வாழ்வில் மட்டுமன்றி உலகம் தொடர்பாக மக்களது உணர்வுடனும் விளங்கிக் கொள்ளும் தன்-

**பொதுசனத் தொடர்பு ஊடகங்களில், கல்விசார் செயற்பாடுகளில் நாளாந்த வாழ்வியலில் அபிவிருத்தி என்ற பதத்தின் உள்ளடக்கம், உட்பொருள் அதன் பயன்பாடு சார்ந்து தெளிவுத்தன்மை ஒன்றை மேற்கொள்ள வேண்டிய தேவையை பால்நிலை சார்ந்த நோக்கு வலியுறுத்து கின்றது.**

மையுடனும் சம்பந்தப்பட்டிருந்தது. நிலம், மற்றும் அதிகார உறவுமுறைகளில், வரிகளுக்கான கேள்விகளில், சந்தை அழுத்தங்களில் புதிய பார்வையொன்றுடன் காலனி நாடுகளின் மக்கள் முரண்படத் தொடங்கினர். ஐரோப்பியரல்லாத சமூகங்களிலிருந்து தோன்றிய ஐரோப்பிய உணர்வானது இங்கு குறிப்பிடத்தக்கதொன்று.

நவீன காலத்தில் தோற்றம் பெற்ற அபிவிருத்தி மாதிரியானது இந்த இந்த எதிர்ப்பாளரது அனுபவங்கள், ஐரோப்பிய சமூகங்களுக்குள் உருவான தீவிர மாற்றம், பொருளாதாரம், வரலாறு மற்றும் சமூகவியல் ஆகிய அறிவியல் துறைகளின் தோற்றத்தினூடாக இந்தமாற்றம் பற்றிய முறையான ஆய்வு விளக்கங்களில் ஏற்பட்ட ஆர்வம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

## அபிவிருத்தியும் நாகரிகமும்

அபிவிருத்தி என்ற பதம் 18ம் 19ம் நூற்றாண்டுகளில் நாகரிகம் என்ற கருத்துநிலையைப் பிரதிபலிக்கும் ஒன்றாகவே பார்க்கப்பட்டது. மேற்கத்திய நிறுவனங்களையும் கலாசாரத்தையும், குறிப்பாகக் கிறிஸ்தவத்தையும் பின்பற்றுவதனூடாக நாகரிகம் என்ற பதம் அளவிடப்பட்டதுடன் இது அபிவிருத்தியுடன் சமப்படுத்திப் பார்க்கப்பட்டது. நாகரிகத்தின் அடையாளக்குறியாக விக்ரோறியப் பெண்கள் கருதப்பட்டதன் காரணமாக மேற்கு அல்லாத பெண்கள் பாரதீனப்படுத்தப்பட்டாலும் கூட இக்கருத்துநிலை பால்நிலை சார்ந்த தொன்றாகவே இருந்தது. இது மட்டுமன்றி மேற்கத்தேய தொழினுட்ப அறிவு, குறிப்பாக மானிட பெருமுயற்சியின் உச்சப்புள்ளியே அறிவியல் சிந்தனை. ஆகவே அதுவே நாகரிகத்தின் சாரம் என்ற கருதுகோளினால் பெரிதும் பாதிக்கப்பட்டதொன்றாகவும் இந்த நாகரிகம் என்ற கருத்துநிலை கருதப்பட்டது.

## அபிவிருத்தியும் நவீனமயமாக்கமும்

மேற்கத்தேய சமூகம் மேலும் சமயம் சாராததாகவும் தொழினுட்ப மயமாகவும் மாறியபோது பொருளாதார, அரசியல் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட நவீனத்துவம் மேல் கொண்ட நம்பிக்கை கிறிஸ்தவ நாகரிகத்தின் இடத்தைப் பிடித்துக்கொண்டதனூடாக அபிவிருத்தி என்றால் நவீனமயவாக்கம் என்று பொருள் கொள்ளப்பட்டது. தமது சொந்த சமூகங்களிலேயே துரித மாற்றங்களைக் கொண்டு வந்த 19ம் நூற்றாண்டின் ஐரோப்பிய அனுபவமானது மேற்கு அல்லாத சமூகங்களிலிருந்து அவர்களை தெளிவாக வேறுபடுத்திக் காட்டக்கூடிய புதிய சமூக அரசியல் தொழினுட்ப அபிவிருத்திகளைக் கொண்ட ஒரு புதிய பார்வைக்கான அடிப்படையை அவர்களுக்கு வழங்கியது. சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட வியாபார ரீதியான, இராஜதந்திர ரீதியிலான அல்லது நிதி சார்ந்த நிறுவனங்களையும் புதிய தொழினுட்பங்களையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதார ஊடுருவல், பிரதேச ரீதியான ஆளுகை, அரசியல் மற்றும் இராணுவ தலையீடு என்பன இயல்பாகவே ஐரோப்பிய மேல்நிலையை உறுதிப்படுத்த உதவின. சீனாவின் Manchu ஆட்சியாளரைத் தக்க வைத்த பிரித்தானியா மற்றும் பிரெஞ்சு இராணுவங்கள், ஆர்ஜெந்தீனாவின் பிரித்தானிய ரயில்வே கட்டுமானம், தெற்கு ஆபிரிக்காவின் சுரங்கக் கைத்தொழில் நிறுவனங்கள் போன்றவை ஐரோப்பிய மேல்நிலைக்கான வெளிப்படையான அடையாளங்களாக இருந்தன.

மேற்கின் பொருளாதார அபிவிருத்தி/நவீனத்துவத்தின் பண்பில் நம்பிக்கை கொண்ட மேற்கின் கலாசாரமும் நிறுவனமும் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவினது தொழினுட்ப அறிவை அனைத்துச் சமூகங்களும் எந்தளவுக்கு பெற்றிருக்கின்றன என்பதன் அடிப்படையில் அபிவிருத்தியை மதிப்பிடக்கூடிய வகையிலான ஒரு பொருளாதார அபிவிருத்தியின் அறிவியலை உருவாக்கின. மேற்கு நாட்டுச் சமூகங்களாயினும் சரி அல்லது மேற்கு அல்லாத சமூகங்களாயினும் சரி அங்குள்ள சமூக அறிவியலாளர், கொள்கை வகுப்பாளர்களின் கண்களுக்கு மனித இனத்தின் சரிபாதித் தொகையினர் புலனாகாத வகையிலேயே அபிவிருத்தி தொடர்பான 20ம் நூற்றாண்டு கலந்துரையாடல்கள் அமைந்திருந்தன. வேலை தொடர்பான பொருளாதார அறிஞர்களின் கலந்து-

*மேற்கு நாட்டுச் சமூகங்களாயினும் சரி அல்லது மேற்கு அல்லாத சமூகங்களாயினும் சரி அங்குள்ள சமூக அறிவியலாளர், கொள்கை வகுப்பாளர்களின் கண்களுக்கு மனித இனத்தின் சரிபாதித் தொகையினர் புலனாகாத வகையிலேயே அபிவிருத்தி தொடர்பான 20ம் நூற்றாண்டு கலந்துரையாடல்கள் அமைந்திருந்தன.*

ரையாடல்கள், சமூக கொள்கை உருவாக்கம் தொடர்பான நிபுணர்களின் கலந்துரையாடல்கள், குடும்பம் தொடர்பான சமூகவியல் விவாதங்கள் என்பன ஒன்றில் அதிகாரங்கள், வளங்கள், வகிபாகங்கள் என்பவற்றின் குறிப்பிட்ட பிரிவுகள் இயற்கையாகவே வழங்கப்பட்டதொன்று என்று ஏற்றுக்கொண்டன அல்லது இந்தப் பிரிவுகள் முக்கியமற்றவை என்ற அடிப்படையில் பெண்களையும் குடும்பங்களையும் கருதின. பால் சார்ந்த உழைப்புப் பிரிப்பு, குடும்பத்தில் அல்லது அரசியல் அமைப்புகளில் ஆண் அதிகாரத்துவமும் அதற்கான சலுகைகளும், சட்ட, இராஜதந்திர, நல அமைப்புகளில் பெண்களுக்கான பாரபட்சம் என்பன அரசாங்கத்தினதும் கல்விசார் நிறுவனங்களதும் நடைமுறைப் பணிகளிலோ அல்லது பகுப்பாய்வுப் பணிகளிலோ தெளிவாகத் தெரியாத வகையிலேயே அமைந்திருந்தன.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகின் காலனித்துவ அரசுகள் நிலைகொண்டிருந்த அபிவிருத்தியடையாத நாடுகளுடன் தமது அபிவிருத்தியடைந்த நவீன பொருளாதாரங்களை மேற்கத்தேய புலமையாளர்கள் ஒப்பிட்டுப்பார்க்கும் பண்பு அதிகரித்தது. இன்று மூன்றாம் உலகம் என அழைக்கப்படும் அன்றைய காலனித்துவ உலகமானது அபிவிருத்தியடையாத உலகமாக இனங்காணப்படத் தொடங்கியது. படிப்படியாக அபிவிருத்திப் பொருளாதாரத்தினது அறிவியல் மெல்ல பரிணாம வளர்ச்சியடைந்ததுடன் பொருளாதாரம் சார்ந்த விதிகள் அபிவிருத்திப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்ற கருத்தும் உருவாகத் தொடங்கியது. தெற்கு உட்பட உலகமானது சமூகங்களாகப் பார்க்கப்படாது பொருளாதாரங்களின் தொகுதியாகப் பார்க்கப்பட்டபோது அபிவிருத்திப் பொருளாதாரமானது பொருளாதார வளர்ச்சியின் அறிவியல் என்ற முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொண்டது.

அபிவிருத்தி சார்ந்த கருத்துநிலைகளும் நடைமுறைகளும் வெளியாரது விளக்கங்களையும் மதிப்பீடுகளையும் அதாவது அபிவிருத்தியை அனுபவித்துக்கொண்டிருக்கும் மக்களதும் சமூகங்களதும் விளக்கங்களை வலிந்து திணித்தல், பெண்களின் வகிபாகத்தையும் வாழ்வையும் தவறாக விளங்கிக்கொள்ளல், ஒதுக்குதல் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக கட்டியமைக்கப்பட்டதொன்றாகவே உள்ளது என்ற York பல்கலைக்கழகத்தின் பெண்கள் கல்வி சார்ந்த விரிவுரையாளராக இருக்கும் De Groot என்பவரது கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. [Afsher 1991].

## அபிவிருத்தியில் பெண்கள் (Women in Development)

அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்புகள் புறக்கணிக்கப்படுவதன் காரணமாகப் பெரும்பாலான அபிவிருத்தி முயற்சிகள் தோல்வியடைகின்றன என்ற உணர்வின் வெளிப்பாடாக உருவான கருத்துநிலை, பெண்களின் கீழ்நிலையை இல்லாதொழிப்பதற்கான சரியான தீர்வு பெண்களுக்கு மட்டுமேயான செயற்திட்டங்களே என்ற சிந்தனையின் வெளிப்பாடாக இது உருவானது. பெண்களுக்கெனத் தனித்துவமாக அல்லது அபிவிருத்திச் செயற்திட்டங்களில் ஒரு பகுதியாக வடிவமைக்கப்படும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை இது பரிந்துரைக்கிறது. திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான பயிற்சி, கடன் வழங்குதல், சிறு அளவிலான வருமான உருவாக்க நடவடிக்கைகள், மனைப் பொருளியல் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வளங்களை அணுகுவதற்கான வாய்ப்பை வழங்கினால் அவர்களின் நிலையில் முன்னேற்றம் ஏற்படுவதுடன் ஆண்களுடன் முழுமையான பொருளாதார பங்களிப்பாளராக மாறுவர் என இந்த அணுகுமுறை கருதுகின்றது.

அபிவிருத்தித் தசாப்தங்களின் 1940-60 வரையான முதல் இரு தசாப்த காலங்களில் அபிவிருத்திக் கோட்பாடுகளும் நடைமுறையும் மூன்றாம் உலகப் பெண்களில் மிகக் குறைந்த கவனத்தையே செலுத்தியது. அபிவிருத்தி என்பது தொழினுட்பப் பிரச்சினையாகக் கருதப்பட்டதன் காரணமாக வடக்குத் தேசங்களின் ஆண் நிபுணத்துவமும்

**அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்புகள் புறக்கணிக்கப்படுவதன் காரணமாகப் பெரும்பாலான அபிவிருத்தி முயற்சிகள் தோல்வியடைகின்றன என்ற உணர்வின் வெளிப்பாடாக உருவான கருத்துநிலை.**



தெற்குத் தேசங்களின் ஆண் ஒத்துழைப்புமே தேவைப்பட்டது. பெண்கள் மாற்றத்துக்கான முகவர்களாவன்றி அபிவிருத்தி சார்ந்த கொள்கைகள், செயற்திட்டங்களில் வெறுமனே தாய்மாராகவும் மனைவியராகவுமே பார்க்கப்பட்டனர்.

மூன்றாம் உலகப் பெண்களைப் பின்தங்கியவர்களாகவும் நாகரிக முதிர்ச்சியற்றவர்களாகவும் கருதிய காலனித்துவத்தின் நீண்டகால வரலாற்றைக் கருத்தில் கொண்டு அபிவிருத்தி சார்ந்த திட்டவியலாளர்கள் பெண்களைப் பின்தங்கியவர்களாகவும், சதுப்புநிலத்துக்குள் புதைந்து கிடக்கும் ஏனைய பொருளாகவும் நவீனத்துவத்திற்கு எதிரானவர்களாகவும் பிரதிநிதித்துவப்படுத்தும் செயற்பாட்டை மேலும் தொடர்ந்தனர். இது அபிவிருத்தி சார்ந்த நிபுணர்கள் தமது திட்டங்கள் கொள்கைகளில் பெண்களை விலக்குவதை உத்தியோகபூர்வமாக்கியது. இதன் காரணமாக தெற்கு நாடுகளின் பொருளாதார வாழ்வின் மைய வகிபாகம் கொண்டிருந்தும் கூட ஆரம்ப கால அபிவிருத்தித் திட்டங்கள் பெண்களின் உள்ளீட்டைப் புறக்கணித்ததுடன் அதற்குரிய பெறுமதியும் கருத்தில் கொள்ளப்படவில்லை..

**மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் வாழ்வுக்கு பெண்கள் மேலும் முழுமையான பங்களைப்பைச் செய்வதற்கு வசதி செய்யும் முகமாக 1975ம் ஆண்டை பெண்கள் ஆண்டாகவும் ஐ.நா பிரகடனப்படுத்தியது.**

அபிவிருத்திக் கோட்பாட்டாளர்களும் திட்டவியலாளர்களும் ஆண்களை அபிவிருத்தியின் முகவர்களாகவும், பிரதான பாத்திரங்களாகவும் குடும்பங்களின் தலைவர்களாகவும் பார்த்த அதேசமயம் பெண்களோ கட்புலனாகாத ஒரு பொருளாகவே இருந்து வந்துள்ளனர். 1948இல் மனித உரிமைகளுக்கான அனைத்துலகப் பிரகடனமானது உலக நாடுகளினால் வைக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் சமமான உரிமைக்குரியவர்கள் என்ற பிரேரணையை மீள உறுதிப்படுத்தியது. ஆனால் உறுதிப்படுத்தப்பட்டது போன்று இன்று உலகின் பெரும்பாலான நாடுகளில் பெண்களுக்கான சமத்துவம் ஆண்களைவிடக் கணிசமானளவு மிகக் குறைவு என்பது தெளிவாகத் தெரிகிறது. இருப்பினும் பல தரப்பட்ட நாடுகளில் பெண்களுக்கிடையில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் ஒரு நாட்டினுள்ளே ஆண்கள் பெண்களுக்கிடையில் நிலவும் ஏற்-றத்தாழ்வுகளை விடவும் அதிகம் என்பதை புள்ளி-விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வரலாற்று ரீதியாக பூகோள பொருளாதார ஈடுபாட்டில் 1960கள் காலப்பகுதியானது காலனித்துவப் பிரிப்பு, மற்றும் சுரண்டல் என்பவற்றிலிருந்து பொருளாதார அபிவிருத்தி மற்றும் வறுமையைக் களைதல் ஆகியவற்றை வலியுறுத்துகின்ற நீடித்த அபிவிருத்தி நோக்கிய மாறுகட்டமாகவே பார்க்கப்படுகின்றது.

1967 நவம்பர் 7ம் திகதி ஐ.நா பொதுச்சபையால் நிறைவேற்றப்பட்ட பெண்களுக்கெதிரான பாரபட்சத்தை நீக்கும் பிரகடனமானது ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கும் சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைத்ததுடன் இதனை அமுல் செய்வதற்கான உத்தரவாதத்தையும் கோரி நின்றது. ஆயினும் சுமார் பத்து வருடங்கள் கழிந்த பின்னரே 1975ல் பெண்களுக்கெதிரான பாரபட்சம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீது முழுக் கவனமும் செலுத்தப்பட்டது. மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் வாழ்வுக்கு பெண்கள் மேலும் முழுமையான பங்களைப்பைச் செய்வதற்கு வசதி செய்யும் முகமாக 1975ம் ஆண்டை பெண்கள் ஆண்டாகவும் ஐ.நா பிரகடனப்படுத்தியது.

இனம், மதம், நிறம், மொழி, கலாச்சாரம், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றால் பலதரப்பட்ட போதும் பெண் என்ற அடையாளத்தால் ஒன்றுபட்டு நிற்கும் பெண்ணினம் ஒடுக்கு முறைகளுக்கெதிராகவும், சமநீதி, சமஉரிமை, சமத்துவம் போன்றவற்றிற்காகவும் ஒன்று திரண்டு அகிலம் எங்கணும் குரல்

கொடுக்கும் ஒரு நாளாகவும், உலகின் சரிபாதிக்கு மேற்பட்ட மக்கள் தொகையைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களும், உலக உழைப்புச் சக்தியில் மூன்றில் இரண்டு பங்கைத் தமதாகக் கொண்டிருந்த போதும் உலக வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை மட்டுமே பெறுபவர்களுமான பெண்கள் தமது உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழுந்து போராடவென தீர்மானிக்கப்பட்ட ஒரு நாளாகவும், குறைந்த கூலியில் கொள்ளை இலாபம் அடிக்கும் நோக்குடன் பெண்ணின் உழைப்பைச் சுரண்டிய முதலாளித்துவத்திற்கெதிராக முதன் முதல் அணிதிரண்டு பெண்கள் போர்க்கொடி தூக்கிய ஒரு நாளாகவும் இது கருதப்பட்டது. சர்வதேசப் பெண்கள் ஆண்டின் நோக்கங்கள் பின்வருமாறு அமைந்தன:

1. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் சமத்துவத்தை மேம்படுத்தல்
2. இரண்டாவது ஐ.நா அபிவிருத்தித் தசாப்தத்தில் தேசிய, பிராந்திய, சர்வதேச மட்டங்களிலான சமூக பொருளாதார, கலாசார அபிவிருத்திகளில் பெண்களின் பொறுப்பினையும் முக்கிய பங்கினையும் வலியுறுத்துவதன் மூலம் மொத்த அபிவிருத்தி முயற்சிகளில் பெண்களின் பூரண ஒருமைப்பாட்டினை உறுதி செய்தல்
3. அரசுகளிடையே ஒத்துழைப்பையும் நேச உறவுகளையும் விருத்தி செய்வதற்கும் உலக சமாதானத்தினைப் பலப்படுத்துவதற்கும் பெண்களின் அதிகரித்துவரும் பங்களிப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தல்.

பெண்களின் நிலைமைகளையும் அவர்களின் பங்களிப்புகளையும் ஆராய்ந்தலும் தடைகளை இனங்கண்டு அபிவிருத்திக்கான நிலையான திட்டங்களை வகுத்தலையும் அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு ஒவ்வொரு நாட்டிலும் அரசுப் பிரதிநிதிகளை உள்ளடக்கி தேசிய குழுக்கள் நிறுவப்பட்டன. சர்வதேச பெண்கள் ஆண்டின் முக்கிய நிகழ்வாக மெக்ஸிக்கோவில் சர்வதேசப் பெண்கள் மகாநாடு நடைபெற்றதுடன் உலக அமுலாக்கல் திட்டமொன்றும், 34 தீர்மானங்களும் இதில் நிறைவேற்றப்பட்டன.

பெண்களின் நிலையை மாற்றும் அதே நோக்குடன் 1976-85 காலப்பகுதியை பெண்கள் தசாப்தமாகவும் ஐ.நா பொதுச் சபை பிரகடனப்படுத்தியது. பெண்கள் தசாப்தத்தின் நடுப்பகுதி முடிவடைந்துவிட்டபோதிலும் பெண்களின் நிலைமைகள் விருத்தியடைவதற்குப் பதில் மேலும் சீரழிந்து வரும் நிலையே உள்ளது என்று 1980 யூலையில் கொபன்கேயனில் நடைபெற்ற இது குறித்த உலக மாநாடு ஒன்றில் பேசிய ஐ.நாவின் செயலாளர் நாயகத்தின் உரை-யானது பெண்களும் அபிவிருத்தியும் தொடர்பான கருத்து நிலையில் மீள்பரிசீலனை ஒன்றை வேண்டி நின்றது. ஆனால் "தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. கூட்டங்கள் கூடப்பட்டுள்ளன. ஆனால் நிலைமையில் மாற்றமில்லை என்பதே இன்று வரையிலுமுள்ள யதார்த்தமாகி நிற்கின்றன.

**பிரச்சினைகள்**

- வகுப்பு, இனம், வரலாறு, கலாசாரம், சார்ந்து பல தரப்பட்ட குழுக்களாக பெண்கள் உள்ளனர் என்பதைப் புறந்தள்ளி இது அவர்களை தனியான, ஒரினத்தன்மையுள்ள ஒன்றாக வகைப்படுத்துகின்றது.
- பெண்களின் கீழ்நிலைக்கான அல்லது பெண் ஒடுக்குமுறைக்கான அடிப்படையான காரணங்களை இது பரிசீலிக்கத் தவறிவிட்டது.
- இந்த வறுமை எதிர்ப்பு அணுகுமுறை பெண்களை மேலும் ஓரம் கட்டுவதுடன் ஆண்களுக்கு இணையானவர்களாகவும் நடத்துகிறது.

**பெண்களும் அபிவிருத்தியும் (Women and development)**

அபிவிருத்தியில் பெண்கள் என்ற கருத்துநிலையை விட இது பெண்களின் நிலை தொடர்பான மாறுபட்ட பார்வையைக் கொண்டுள்ளது. இது அபிவிருத்தியில் பெண்கள் கருத்துநிலையின் உள்ளடக்கமாக கருதப்பட்ட "இன்னொருவருக்குரிய உணவில் பெரும் பகுதி உனக்கு" என்பதிலிருந்தும் மாறுபட்டு புதிதாகத் தயாரிக்கப்பட்டு சமமாக விநியோகிக்கப்படும்

*பெண்களின் நிலையை மாற்றும் அதே நோக்குடன் 1976-85 காலப்பகுதியை பெண்கள் தசாப்தமாகவும் ஐ.நா பொதுச் சபை பிரகடனப்படுத்தியது.*

"முழு உணவு" என்ற கருத்து நிலையை இது பிரதிபலிக்கிறது.

பெண்களும் அபிவிருத்தியும் என்ற கருத்துநிலை சார்ந்து வெளிவந்த இலக்கியங்கள் பின்வரும் மூன்று அடிப்படைக் கருப்பொருள்களை மையப்படுத்துகின்றன.

1. இயற்கையான மற்றும் நிலையான பால்நிலை சார்ந்த உழைப்புப் பிரிப்பு என்று இல்லை என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆணுக்கும் பெண்ணுக்குமான வகிபாகங்கள் கலாசாரத்துக்குக் கலாசாரம் பலதரப்பட்டவையாக இருந்தபோதும் பால் சார்ந்து தெளிவான உழைப்புப் பிரிப்பு ஒன்றை அனைத்துச் சமூகங்களும் உருவாக்கி வைத்திருக்கின்றன என்பது தொடர்பான உணர்வு

2. உற்பத்தியில் பால்நிலை வகிபாகங்களை புரிந்து கொள்ளும் பொருட்டு வீட்டில் பால்நிலை வகிபாகங்களை விளங்கிக் கொள்வதற்கான அவசியத்தை ஆய்வுகள் வெளிப்படுத்தியிருத்தல். அபிவிருத்தியில் பெண்களின் வகிபாகத்தின் இயங்கியலை நாம் பாராட்ட வேண்டுமாயின் வீட்டில் தனியார் துறையில் பெண்களின் மீளுற்பத்தி வேலைகளையும் பொதுத்துறையில் உற்பத்தி வேலைகளையும் ஒருங்கிணைத்தலானது கருத்தில் கொள்ளப்படுத்தல் அவசியம்.

3. பொருளாதார அபிவிருத்தியானது ஆண்களிலும் பெண்களிலும் வெவ்வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக பெண்கள் சார்ந்த விளைவானது ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர எதிர்க்கணியமாகவே உள்ளது.

**மூன்றாம் உலகப் பெண்கள் தொடர்பான ஆய்வானது சர்வதேச அபிவிருத்தியின் பெரும்பாலான ஊகங்களை சவாலுக்கு உள்ளாக்கியதுடன் அபிவிருத்திச் செய்முறையில் பால்நிலையின் பரிமாணத்தை இணைத்து புதிய அறிமுறை சார்ந்த அணுகுமுறையை வேண்டி நின்றது.**

1970களுக்கு முன்னர் அபிவிருத்திச் செய்முறையானது ஆண்களையும் பெண்களையும் ஒரே மாதிரிப் பாதிக்கிறது என எண்ணப்பட்டது. உற்பத்தித் திறனானது பணப் பொருளாதாரத்துடன் சமப்படுத்திப் பார்க்கப்பட்டதுடன் பெண்களின் பெரும்பாலான வேலைகள் கருத்தில் எடுக்கப்படவில்லை. பொருளாதார அபிவிருத்தியானது பிரயத்தன முயற்சிகளினூடாக வறுமையை தன்னிச்சையாகக் களையவில்லை என்பது தெளிவாகியபோது விநியோகப் பிரச்சினைகள், சனத்தொகையில் பலதரப்பட்ட பிரிவுகளுக்கும் நன்மைகளை சமமாகப் பிரிக்க முடியாமை என்பன அபிவிருத்திக் கோட்பாட்டின் மையப் பொருளாக மாறியது. மூன்றாம் உலகப் பெண்கள் தொடர்பான ஆய்வானது சர்வதேச அபிவிருத்தியின் பெரும்பாலான ஊகங்களை சவாலுக்கு உள்ளாக்கியதுடன் அபிவிருத்திச் செய்முறையில் பால்நிலையின் பரிமாணத்தை இணைத்து புதிய அறிமுறை சார்ந்த அணுகுமுறையை வேண்டி நின்றது. [Momson, 1991]

1970 களின் ஆரம்பத்தில் அபிவிருத்திச் செய்முறையில் பிரதான மாற்றங்கள் எதையும் செய்யாமலேயே அபிவிருத்தில் ஏற்கெனவே நிலைகொண்டிருக்கும் முறைகளுக்குள் பெண்களை உள்ளடக்கலாம் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒருங்கிணைப்பு மாதிரியே பெரும்பாலான பெண்ணிய விமர்சகர்களின் இலக்காக இருந்தது. இதுவே அபிவிருத்தியில் பெண்கள் என்ற கருத்துநிலையின் தோற்றமாகும்.

1970ல் பரபரப்பை ஏற்படுத்திய Esther Boserup என்ற பெண்மணியால் எழுதப்பட்ட "பொருளாதார அபிவிருத்தியில் பெண்களின் வகிபாகம்" என்ற ஆங்கில நூலே அபிவிருத்தியின் தன்மை தொடர்பான பல வினாக்களை முதன்முதலில் எழுப்பிய ஒரு நூலாகக் கருதப்படுகின்றது. [Boserup 1970] வீட்டு வருமானத்தில் பெண்களின் பங்களிப்பானது தொடர்ச்சியான முறையில் குறைத்து மதிப்பிடப்படும் ஒன்றாகவும் புறக்கணிக்கப்படும் ஒன்றாகவும் உள்ளது என்பதை ஆதாரக் கருத்தாக இந்நூல் வெளிக்காட்டியது மட்டுமன்றி பரந்துபட்ட சமூகமொன்றின் பொருளாதாரத்துக்கு பெண்களின் வீட்டு வகிபாகம் என்பதன் முக்கியத்துவத்தை இந்நூல் கவனத்தில் கொண்டு வந்தது. பெண்களின் உண்மையான பங்களிப்பானது ஆய்வாளர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் தாம் பயிரிடும் காய்கறிகளை சந்தையில் விற்பதன் மூலம்

தமது நடவடிக்கைகளை வர்த்தகமயப்படுத்த-வேண்டும் என்பதையும் இவரது நூல் வலியுறுத்தியது. [Esther Boserup 1970]

*1976-85* காலப்பகுதியில் பெண்களுக்கான தேசிய சகாப்தத்துக்கான (National Decade for Women1976-85) கொள்கைத்திட்டங்களை உருவாக்க இவரது நூலிலிருந்து பெறப்பட்ட ஆய்வுப் பெறுபேறானது உதவியது. பொருளாதார அபிவிருத்தியில் பெண்களது சம அளவிலான ஒருங்கிணைப்பே இந்தத் தசாப்தத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. நிதி வழங்கும் நிறுவனங்கள் பெண்களின் பொருளாதார வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கென தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட செயற்திட்டங்களை நோக்கி தமது பணத்தை திருப்புவதற்கு புதிதாகத் தோற்றம் பெற்ற 'அபிவிருத்தியில் பெண்கள்' என்ற கருத்துநிலை உதவியது. *1994*இல் அபிவிருத்தியில் பெண்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான பொருளாதார சமூக ஆணைக்குழுவினால் (Escap) இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடத்தப்பட்ட இரண்டாவது அமைச்சரவை மகாநாடு குறிப்பிடத்தக்கது.

**நோக்கங்கள்**

சர்வதேச கட்டமைப்புகள் சமப்படுத்தப்பட்டால் மட்டுமே பெண்களின் நிலை மேம்பாடடையும் என இது கருதுகின்றது. பெண்கள் ஏற்கனவே அபி-விருத்திச் செய்முறையில் சுரண்டப்படக்கூடிய-வகையில் உள்வாங்கப்பட்டுவிட்டனர் என்றும் பெண்களின் சிறப்புச் செயற்பாடுகள் சார்ந்து பிழையான எண்ணப்பாங்குகளை திட்டவியலாளர்கள் கொண்டிருப்பதனால் பெண்களின் உண்மையான தேவைகளை இது புறக்கணிக்கின்றது அல்லது அலட்சியப்படுத்துகின்றது. பெண்களது உழைப்பை மேலும் சுரண்டுகின்றது என இந்த அணுகுமுறை கருதுகின்றது. இந்த அணுகுமுறைக்குச் சார்பானவர்கள் பெரும்பாலும் தெற்கிலிருந்து பலரும் வடக்கிலிருந்து சிலருமாக அபிவிருத்தியில் பெண்கள் என்ற கருத்துநிலையின் வரையறைகளை உணர்ந்த செயற்பாட்டாளர்களும் கோட்பாட்டாளர்களும் ஆவர். தந்தைவழிச் சமூக அமைப்பும் பூகோள அசமத்துவமின்மையும் கருத்தில் கொள்ளப்படாதவரை அபிவிருத்தியினால் பெறப்படும் நன்மைகளில் சம அளவை பெண்கள் ஒருபோதுமே பெறமுடியாது என விவாதிக்கின்றது.

பெண்களின் நோக்குகளையும் வளர்ந்து வரும் நாடுகளின் நோக்குகளையும் முக்கிய அபிவிருத்தி அணுகுமுறை உள்ளடக்கவில்லை என இது விவாதிக்கிறது.

அபிவிருத்திச் செய்முறையில் பால்நிலைச் சமத்துவத்தை மேம்படுத்துவது போன்றே வறுமையை இல்லாதொழித்தல், காலனித்துவத்தின் தாக்கங்களை முன்னிலைப்படுத்தல் போன்றவையும் முக்கியமானது எனவும் இந்த அணுகுமுறை கருதுகின்றது. இந்த அணுகு முறையின் படி பெண்கள் புறக்கணிக்கப்படாத வளமாகக் கருதப்படும் அதேசமயம் அதிக சுமையைத் தாங்கும் வளமாகவும் பெறுமதி குறைந்த வளமாகவும் கருதப்படுகின்றனர். அபிவிருத்திச் செய்முறையில் பெண்களின் கணிசமான பங்களிப்பை மீள் மதிப்பீடு செய்தலும் அபிவிருத்தியினால் ஏற்படும் நன்மைகளையும் சுமைகளையும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் மீள்பகிர்வு செய்தலுமே இங்கு முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது.

**பால்நிலையும் அபிவிருத்தியும் (Gender and Development)**

அபிவிருத்தியில் பெண்களும் உள்ளடக்கப்படவேண்டும் என்ற யதார்த்தம் தந்த வெளிப்பாடு 1970களில் 'அபிவிருத்தியில் பெண்கள்' (WID) என்ற கருத்துநிலையாக ஆரம்பித்து 'பெண்களும் அபிவிருத்தியும்' (WAD) என்ற கருத்துநிலைக்கு மாறி இன்று 'பால்நிலையும் அபிவிருத்தியும்' (GAD) என்ற கருத்துநிலையில் முனைப்படுத்திருக்கிறது.

அபிவிருத்தி முயற்சிகளில் பெண்கள் எவ்வாறு புறக்கணிக்கப்படுகின்றனர் என்பதை தெளிவாக வெளிக்காட்டும் ஒன்றாகவே பால்நிலையும் அபிவிருத்தியும் என்ற கருத்துநிலை பார்க்கப்படுகின்றது. பெண்களின் ஆளுமை அபிவிருத்தி, திறன்

**தந்தைவழிச் சமூக அமைப்பும் பூகோள அசமத்துவமின்மையும் கருத்தில் கொள்ளப்படாதவரை அபிவிருத்தியினால் பெறப்படும் நன்மைகளில் சம அளவை பெண்கள் ஒருபோதுமே பெறமுடியாது என விவாதிக்கின்றது.**

வெளிப்பாடு, விடுதலை, எழுச்சி என்ற சகல இலட்சியங்களின் பூர்த்தியும், அவர்கள் வாழவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் சமூக அமைப்பில் ஏற்பட வேண்டிய பிரதான மாறுதல்களிலேயே தங்கியுள்ளது. பெண் சமூகத்தின் வாழ்க்கையைப் பாதிக்கும் வறுமை, வேலையின்மை என்பவற்றுடன் சேர்த்து கலாசார அணுகுமுறைகளும் பாலியல் கருதுகோள்களும் பெண்ணிய நோக்கில் அபிவிருத்தி தொடர்பான புதிய வரைவிலக்கணம் ஒன்றின் அவசியத்தை வேண்டி நிற்கிறது.

அபிவிருத்தியில் பெண்கள் மற்றும் பெண்களும் அபிவிருத்தியும் ஆகிய இரு கருத்து நிலைகளுக்கு மாற்றீடாக சோசலிச பெண்ணியவாதிகளின் புலமைத்துவமும், மூன்றாம் உலகப் பெண்ணியவாதிகளின் எழுத்துக்களும் இணைந்து 1980களில் தோற்றம் பெற்ற ஒரு கருத்து நிலையாக பால்நிலையும் அபிவிருத்தியும் என்ற கருத்து நிலை உள்ளது. இது பால்நிலை மற்றும் பால்நிலை உறவுகளை மையமாகக் கொண்டது.

பெண்களின் சமூக அந்தஸ்து சார்ந்த தரமான, நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய மாற்றங்களை மையமாகக் கொண்ட "அபிவிருத்தியில் பெண்கள்" மற்றும் "பெண்களும் அபிவிருத்தியும்" சார்ந்த செயற்திட்டங்களில் ஏற்பட்ட தோல்வியின் வெளிப்பாடாக விருத்தி செய்யப்பட்ட ஒரு கருத்துநிலையாகவும் இதனைக் கொள்ள முடியும். மூன்றாம் உலகப் பெண்ணியவாதிகளின் செல்வாக்குப் பெற்ற இந்த அணுகுமுறையானது பெண்களின் இரண்டாந்தர நிலை தொடர்பான அடிப்படை விளக்கங்களை அரசியல் பொருளாதார சக்திகளின் நிலையிலும் பால்நிலைக் கருத்தியல் அடிப்படையிலும் ஆராய்வதுடன் வறுமை, பூகோள சமத்துவமின்மை இரண்டையும் வலியுறுத்துகின்றது.

**பெண்களை தனித்துவ, ஓரின பொருளாக பார்க்காது இனம், மதம், மொழி, வர்க்கம், நாடு சார்ந்து பலவகைப்பட்டவர்களாக இது நோக்குகின்றது.**

## நோக்கங்கள்

- அபிவிருத்தியில் பெண்களை வெறுமனே சேர்த்-தல் என்பதை முதன்மைப்படுத்துகின்ற "அபிவிருத்தியில் பெண்கள்" என்ற கருத்து நிலையை பரிந்துரைக்காத அதேசமயம் பால்நிலைப் பார்வையினூடாக அபிவிருத்திக் கருத்துநிலைகள் சார்ந்த நடைமுறைகளில் மீள்சிந்தனை ஒன்றை வலியுறுத்துகின்றது.
- பெரும்பாலான சமூகங்களில் பெண்களுக்கு இரண்டாந்தர வகிபாகம் வழங்கப்பட்டிருப்பதற்கான காரணத்தைக் கண்டறிய இக்கருத்துநிலை முயற்சிக்கிறது. தனியார் துறையில் தகப்பனதும் கணவனதும் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் பெண்களே பெரும்பாலும் இரண்டாந்தர நிலைக்கு உட்படுகின்றனர் என இந்தக் கருத்துநிலை கருதுகின்றது.
- செயற்திட்ட வளங்களிலும் அது தொடர்பான செய்முறைகளிலும் ஆண்களும் பெண்களும் தனித்தனி எவ்வாறு பங்குகொள்கின்றனர், நன்மையடைகின்றனர், கட்டுப்படுத்துகின்றனர் என்பதைத் தீர்மானிக்கும் சமூக, பொருளாதார அரசியல் கலாசார சக்திகளில் கவனம் செலுத்துகின்றது.
- இந்த அணுகுமுறையானது குழு என்ற ரீதியில் பெண்களை நோக்குவதிலிருந்து வேறுபட்டு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் சமூக ரீதியில் தீர்மானிக்கப்பட்ட உறவுகளை மையப்படுத்துகின்றது.
- பால்நிலை இடைவெளி, பால்நிலைப் பாரபட்சம், பெண் ஒடுக்குமுறை ஆகிய மூன்று அம்சங்களை ஆராய்கிறது.
- அபிவிருத்திச் செய்முறையில் பெண்கள் ஏற்கனவே ஒன்றிணைக்கப்பட்டுள்ள அதேசமயம் சம்பளமற்ற குடும்ப உழைப்பை அவர்கள் வழங்குவதால் அபிவிருத்திச் செய்முறையின் மையப் பொருளாகவும் அவர்களை இது பார்க்கிறது.
- பெண்களை தனித்துவ, ஓரின பொருளாக பார்க்காது இனம், மதம், மொழி, வர்க்கம், நாடு சார்ந்து பலவகைப்பட்டவர்களாக இது நோக்குகின்றது.
- பெண்ணின் மீளுருவாக்க வகிபாகத்தையும், முதலீடு மற்றும் வீட்டுத்துறைகளில் பெண்-

ணின் சம்பள மற்றும் சம்பளமற்ற இரட்டை நாள் பணிகளை மதிப்பீடு செய்கிறது.

- திட்டவியலாளரினால் ஒதுக்கப்படுவதன் காரணமாகவோ அல்லது வஞ்சிக்கப்படுவதன் காரணமாகவோ பெண் அசமத்துவம் நிலை கொள்ளவில்லை என்றும் மாறாக அதிகார கட்டமைப்புகளில் பங்கேற்காமையின் வெளிப்பாடே அது என்றும் இக்கருத்துநிலை விவாதிக்கிறது.
- பெண்களுக்கு கூடுதலான சுயாதீனத்தை வழங்கக்கூடியவகையில் அதிகார உறவுகளில் ஒரு நிலைமாற்றத்தை அடைவதே இந்தக் கருத்துநிலையின் இறுதி இலக்காக உள்ளது. இக்கருத்துநிலையினூடாக வடிவமைக்கப்படும் ஆரம்ப முயற்சிகள் அனைத்தும் பெண்களுக்கான வலுவூட்டலை இலக்காகக் கொண்டுள்ளன.



அனைத்தையும் உயர்த்துகின்ற செய்முறைதான் அபிவிருத்தி என்ற கருத்துநிலையிலிருந்து மாறி வெற்றியளிக்கக்கூடிய அபிவிருத்தித் தந்திரோபாயங்கள் அனைத்தும் பால்நிலை என்ற கருத்துநிலையை கட்டாயம் உள்ளடக்க வேண்டும் என்பது தெளிவாகிவிட்டது. 1995 இல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமானது அடிப்படை மனித இயலாற்றல்களில் பால்நிலை வேறுபாட்டை வெளிப்படுத்தும் வகையில் மனித அபிவிருத்திச் சுட்டியுடன் பால்நிலை அபிவிருத்திச் சுட்டியையும் இணைத்து வெளியிட்டது.

### கருத்துநிலைகளுக்கிடையிலான உறவுநிலை

மேற்குறித்த மூன்று கருத்துநிலை சார்ந்த செயற்திட்டங்களும் பின்வரும் அடிப்படைத் தேவைகளை மையப்படுத்துகின்றன.

- பாரம்பரிய மனப்போக்குகளில் ஒரு மாற்றம்
- கல்வித்துறையில் கூடுதலான அணுகுகை
- மிகச் சிறந்த அடிப்படைச் சுகாதார வசதிகள்,
- நேரத்தை மீதப்படுத்துவதற்கான தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்தல்,
- கடன் பெறும் வாய்ப்புகளை ஏற்படுத்துதல்,
- சட்டரீதியான சமத்துவம்,
- மேம்படுத்தப்பட்ட நில உரிமைகள் அதாவது மிகக்கூடுதலான பொருளாதார சுதந்திரம்

‘அபிவிருத்தியில் பெண்கள்’ மற்றும் பெண்களும் அபிவிருத்தியும் ஆகிய இரு கருத்து நிலைகளும் மேற்குறிப்பிட்ட அபிவிருத்திக்கான அடிப்படைத் தேவைகளை கணிசமாக மையப்படுத்தியிருப்பதன் காரணமாக ‘பால்நிலையும் அபிவிருத்தியும்’ என்ற கருத்துநிலையை மையப்படுத்திய பெரும்பாலான செயற்திட்டங்கள் அனைத்தும் அபிவிருத்திக்கான அடிப்படைத் தேவைகள் அணுகுமுறைக்கு முன்னைய இரு கருத்து நிலைகளையுமே ஆதாரமாகக் கொள்ளவேண்டியிருக்கிறது.

### பால்நிலையும் புலம் சார்ந்த அபிவிருத்திகளும்

சமத்துவம், அபிவிருத்தி, சமாதானம் ஆகியவற்றுக்கான செயற்பாடு என்ற தலைப்பில் 1995ம் ஆண்டு செப்ரம்பர் 4-15வரை பீஜிங்கில் நடைபெற்ற நான்காவது உலகப் பெண்கள் மகாநாடு உலகிற்கு வெளிப்படுத்திய முக்கிய செய்தி கொள்கை உருவாக்கலிலும் செயற்பாட்டிலும் தெளிவான செயற்திறன்மிக்க பால்நிலைப்பட்ட நோக்கு என்பதாகும். 189 அரச பிரதிநிதிகள், 2100 அரசசார்பற்ற நிறுவனங்களிலிருந்து கலந்து கொண்ட 5000 பிரதிநிதிகள், 5000 ஊடகப் பிரதிநிதிகள் மற்றும் 30000 தனி நபர்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் அனைத்து திட்டங்கள் கொள்கைகளிலும் பால்நிலை நோக்குப் பிரதிபலிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய பீஜிங் பிரகடனமானது தனது” தந்திரோபாய

**1995 இல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமானது அடிப்படை மனித இயலாற்றல்களில் பால்நிலை வேறுபாட்டை வெளிப்படுத்தும் வகையில் மனித அபிவிருத்திச் சுட்டியுடன் பால்நிலை அபிவிருத்திச் சுட்டியையும் இணைத்து வெளியிட்டது.**

இலக்குகளும் செயற்பாடுகளும்" என்ற பிரிவில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய துறைகளாக பின்வரும் 12 துறைகளை உள்ளடக்கியதுடன் அதற்கான தந்திரோபாய இலக்குகளையும் அட்டவணைப்படுத்தியது.

1. பெண்களும் வறுமையும்
2. பெண்களுக்கான கல்வியும் பயிற்சியும்,
3. பெண்களும் உடல்நலமும்
4. பெண்களுக்கெதிரான வன்முறை
5. பெண்களும் ஆயுத முரண்பாடும்
6. பெண்களும் பொருளாதாரமும்
7. அதிகாரம் மற்றும் தீர்மானம் எடுத்தலில் பெண்கள்
8. பெண்களின் முன்னேற்றத்துக்கான நிறுவனப் பொறிநுட்பங்கள்
9. பெண்களும் மனித உரிமைகளும்
10. பெண்களும் ஊடகங்களும்
11. பெண்களும் சூழலும்
12. பெண் பிள்ளை

அத்துடன் ஆண் பெண் சமத்துவம் மற்றும் முன்னேற்றத்துக்கான தடைகளாக இனம், வயது, மொழி, இனத்துவம், கலாசாரம், மதம், வலுக்குறைந்த நிலை போன்றவற்றையும் இனங்கண்டது. (Jayasuriya 1999). இந்த பிரகடனம் உள்ளடக்கிய தந்திரோபாய இலக்குகள் உட்பட பால்நிலையும் அபிவிருத்தியும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள் அனைத்தையும் பின்வரும் ஒவ்வொரு துறைகளின் கீழும் வகைப்படுத்திப் பார்த்தல் பயனுள்ளதாக அமையும்.

**அத்துடன் ஆண் பெண் சமத்துவம் மற்றும் முன்னேற்றத்துக்கான தடைகளாக இனம், வயது, மொழி, இனத்துவம், கலாசாரம், மதம், வலுக்குறைந்த நிலை போன்றவற்றையும் இனங்கண்டது.**

### தத்துவார்த்த அணுகுமுறை

தத்துவார்த்த அணுகு முறையில் பால்நிலை மற்றும் அபிவிருத்தி தொடர்பான கருத்துநிலைகள் தனித்தனியாகவும் ஒன்றாக இணைத்தும் ஆய்வுக்குள்ளாகின்றன. பால் நிலை சார்ந்து பால்நிலை தொடர்பான கருத்துநிலை, பால் மற்றும் பால் நிலைக்கிடையிலான வேறுபாடுகள், பால்நிலை சார்ந்த சொல்லாட்சிகள், பால்நிலைக் கல்வியின் பிரதான கருத்துநிலைகள் போன்ற அம்சங்களும் அபிவிருத்தி சார்ந்து அபிவிருத்திச் சிந்தனையில் பால்நிலையின் பரிமாணம், பால்நிலை சார்ந்த கோட்பாடுகளில் மூன்றாம் உலக நாடுகளை விசேட நோக்காகக் கொண்ட திறனாய்வுகள், அபிவிருத்தியில் பால்நிலையின் தோற்றம், அபிவிருத்தியில் பெண்கள், பெண்களும் அபிவிருத்தியும், பால்நிலையும் அபிவிருத்தியும் போன்ற சில கோட்பாடு சார் அணுகுமுறைகள் தொடர்பான மீளாய்வுகள், பொருளாதார தந்திரோபாயங்கள் மற்றும் திட்டங்கள் மூலம் பெண்களை வலுவூட்டுவதற்கான செயற்பாடுகள் போன்ற அம்சங்களும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

### சமூக அணுகுமுறை

சமூகத்தின் ஆதார நிறுவனம் எனக் கருதப்படும் குடும்பம், இடைநிலை நிறுவனமாகச் செயற்படும் கல்விக்கூடங்கள், இரண்டாம் நிலை நிறுவனங்களான பொருளாதார, மத, மற்றும் ஊடக நிறுனங்கள், மூன்றாம் நிலை நிறுவனமான அரசாங்கம் என்பவற்றில் பால்நிலைக் கட்டமைப்பு தொடர்பாக இந்த அணுகுமுறை அதிகம் கவனம் செலுத்துகின்றது. இந்த அமைப்புகளில் பால்நிலை சார்ந்த கருத்துநிலை, பிரதான கோட்பாடு சார்ந்த உருவாக்கங்கள், அபிவிருத்தி சார்ந்து மாற்றமுறும் கருத்துநிலை, அபிவிருத்தி மாதிரியிலிருந்து சமூக நீதிக்கான மாதிரி நோக்கி மாற்றம் என்பன இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

- **குடும்பம்:** சமூக வாழ்க்கையின் ஆணிவேர் எனக் கருதப்படும் குடும்பம் என்ற அமைப்பு பால் ஊக்கம், மகவூக்கம் ஆகிய இரு சமூக ஊக்கங்களே அடிப்படைகளாகக் கொண்டது. காட்டுமிராண்டிக் காலத்தின் பண்பாகக் கருதப்படும் ஆதிப் பொதுவுடமைச் சமூக அமைப்புத் தொடங்கி இன்றைய நவீன யுகம் வரை நிலைகொண்டிருக்கும் இந்த அமைப்பு சமூகத்தின் அமைப்பிலும் அதன் பண்பாட்டுக் கூறுகளிலும் கணிசமான தாக்கத்தை விளைவிக்கும் ஆற்றல் பெற்றது. சமூக அணுகுமுறையில் குடும்பமும் குடும்ப உறவு-

களும் முதல்நிலையில் வைத்து எண்ணப்படுகின்றன. குறிப்பாக கல்வி, சமூகமயமாக்கம், குழந்தை பராமரிப்பு என்பவற்றில் பிரதான பங்காற்றுகின்ற குடும்பம் என்கிற ஆதார அமைப்பில் பால்நிலை வகிபாகங்கள் இன, மத, பிரதேச ரீதியில் ஆராய்வுக்குள்ளாக்கப்படுதல் பால் நிலைக் கல்வியின் பிரதான அம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

- **கல்வி:** கல்வியில் சம அணுகுகை, எழுத்தறிவின்மையை பெண்கள் மட்டத்தில் இல்லாதொழித்தல், தொழில்சார் பயிற்சிகள், அறிவியல் தொழினுட்பக் கல்வி போன்றவற்றில் பெண்களுக்கான அணுகுகையை மேம்படுத்தல், பாரபட்சம் அற்ற கல்வி மற்றும் பயிற்சிகளை அபிவிருத்தி செய்தல், கல்விசார் சீர்திருத்தங்களை கண்காணிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் போதுமான வளங்களை ஒதுக்கீடு செய்தல், பெண்களுக்கென வாழ்நாள் முழுவதற்குமான கல்வியை மேம்படுத்தல் பயிற்சியிலும் பாரபட்சத்தை ஒழித்தல் போன்ற அம்சங்கள் இங்கு ஆராய்வுக்குட்படுத்தப்படல் அவசியமானது.

- ***சுகாதாரம்:*** வாழ்நாள் முழுவதும் பொருத்தமான தரமான சுகாதார வசதிக்கான அணுகுகையை அதிகரித்தல், பெண்களின் உடல் நலத்தை மேம்படுத்துவதற்கான வருமுன் காத்தல் செயற்திட்டங்களைப் பலப்படுத்தல், பால்சார்ந்து கடத்தப்படக்கூடிய நோய்கள் மற்றும் மீளுருவாக்க செயற்பாடுகளில் பால்நிலைசார்ந்த ஆரம்ப முயற்சிகளை மேற்கொள்ளல், பெண்களின் உடல்நலம் சம்பந்தமாக ஆய்வுகளை மேற்கொள்ளுதல், தகவலைப் பரவலாக்குதல், பெண்களின் உடல் நலத்தை கண்காணிப்பதற்கான வளங்களை அதிகரித்தல் இங்கு கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

- ***ஒடுக்குமுறை :*** "ஒரு தனிமனிதனை அல்லது குழுவை, அதுவுமன்றி ஒரு இனத்தை, ஏன் ஒரு நாட்டையே நேர்மையற்ற முறையிலும் கொடூரமான முறையிலும் நடத்துவது மட்டுமன்றி ஒருவர் அனுபவிக்கும் சுதந்திரம், அவருக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புகள், நன்மைகள் என்பவற்றை இன்னொருவர் பெறுவதிலிருந்து தடுக்கும் எந்தவொரு செயற்பாடும் ஒடுக்குமுறை" (Oppression) எனப்படுகிறது. ஆட்சியாளருக்கும் ஆட்சிக்கும் நன்மை தரும் நீதியற்ற அமைப்பொன்றைப் பேணும் பொருட்டு அரசியல் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் பயன்படுத்தல். இத்தகைய ஒடுக்குமுறை வீட்டில், கிராமத்தில், சமூகத்தில் அரச மட்டத்தில் நிலை கொள்ளலாம். வரலாற்றில் தோற்றம் பெற்ற முதலாவது ஒடுக்குமுறை பெண்பாலை ஆண்பால் ஒடுக்குவது தான் என்ற பி.ஏங்கல்ஸ் அவர்களின் கருத்தைக் கவனத்தில் கொண்டால் பால்சார்ந்த ஒடுக்குமுறை என்பது இயல்பாகவே பெண்பாலை ஆண்பால் ஒடுக்குதல் எனப் பொருள்படும். புராதன கூட்டுச் சமூகத்தின் பொதுச்சொத்துடைமை முறையிலிருந்து தனிச் சொத்துடமை முறைக்கு மாறிய காலத்துடன் இணைந்ததாக இந்த ஒடுக்குமுறை உள்ளது. தனிப்பட்ட குடும்பம் குல அமைப்பைப் பயமுறுத்தும் சக்தியாக எழுந்த போது இது ஆரம்பிக்கிறது.

- ***வன்முறை*** **(Violence) :** ஒடுக்கு முறையின் மிக மோசமான வடிவமாகிய வன்முறை சார்ந்தும் வன்முறை வடிவங்கள் சார்ந்தும் ஆய்வுகளை உருவாக்கவேண்டிய தேவையை இது கோரிநிற்கிறது. பெண்களை ஆண்கள் ஒடுக்குதல் என்பது வரலாற்றில் முதல் தோன்றிய ஒடுக்குமுறை வடிவமாக நிலை கொண்டிருப்பதன் காரணமாக இங்கு பால் சார்ந்த வன்முறை என்பது பொதுவாக பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறை வடிவத்தையே குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தவகையில் ஐ.நா பொதுச்சபையில் ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட "பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் களைதல்" என்பது தொடர்-

**வரலாற்றில் தோற்றம் பெற்ற முதலாவது ஒடுக்குமுறை பெண்பாலை ஆண்பால் ஒடுக்குவது தான்**

பான மாதிரிப்பிரகடனத்தில் "தனிப்பட்ட வாழ்விலோ அல்லது பொது வாழ்விலோ பெண்களின் சுதந்திரத்திற்கு ஏற்படுத்தப்படும் தடை அல்லது பாரபட்சநிலை உட்பட பெண்களைப் பாதிக்கும் உடல், உள பால்சார்ந்த இம்சைகள், கொடுமைகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை விளைவிக்கும் பால் சார்ந்த செயற்பாடுகள் அனைத்தும் பால் சார்ந்த வன்முறை எனப்படுகின்றது. பொதுவாக வன்முறை வடிவங்கள் மூன்றுவகையாகப் பாகுபடுத்தப்படுகின்றன.

1. **நடத்தைசார் வன்முறை (Behavioral Violence)** இது மூன்று வடிவங்களில் நிலைகொண்டிருக்கிறது.

   a. பெண்களைத் தாக்குதல், பெண் குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம், சீதனத்துடன் தொடர்புடைய வன்முறைகள், திருமணத்தின் பின்னான கட்டாய பாலியல் வல்லுறவு, பெண்களுக்கு ஊறுவிளைவிக்கும் மரபுரீதியான சடங்குகள், பாலியல் வல்வுறவு, பாலியல் சுரண்டல்கள் என்பவை உட்பட குடும்ப ரீதியாக இடம்பெறக்கூடிய உடல் உள பால் சார்ந்த வன்முறைகள்.

   b. வேலைத்தலங்கள், கல்விசார் நிறுவனங்கள், என்பவற்றில் இடம்பெறக்கூடிய பாலியல் வல்லுறவு, பாலியல் இம்சைகள், பாலியல் சித்தரவதைகள், அச்சுறுத்தல்கள் உட்பட சமூகரீதியாக இடம் பெறக்கூடிய உடல், உள, பால்சார்ந்த வன்முறைகள்.

   c. ஒரு நாட்டினால் இழைக்கப்படுகின்ற, அல்லது கண்டும் காணாது இருந்து விடுகின்ற, அல்லது மன்னிக்கப்படுகின்ற உடல், உள பால் சார்ந்த வன்முறைகள்.

2. **அமைப்புசார் வன்முறை (Structural Violence)** வறுமை, பசி, பட்டினி, நோய், எழுத்தறிவின்மை, வேலையின்மை, சொத்துடமை மறுப்பு போன்ற அடிப்படை மனித உரிமைகளை மறுக்கின்ற அம்சங்கள் அனைத்தும் அமைப்புசார் வன்முறை எனப் பெயரிடப்படுகின்றது.

3. **நிறுவனரீதியான வன்முறை (Institutional Violence)** தென்னாபிரிக்க நிற ஒதுக்கல் கொள்கை, பெருந்தொகையான சனத்தொகையை ஓரிடத்திலிருந்து அகற்றுதல், மனிதத்தன்மையற்ற செயற்பாடுகளான தடுப்புக் காவல், படுகொலைகள் என்பவற்றால் நேரடியாகப் பாதிக்கப்படல் போன்றவை நிறுவனமயப்பட்ட வன்முறை எனப்படுகின்றது.

### பொருளாதார அணுகுமுறை

அபிவிருத்தி என்ற பரந்த கருத்துநிலைக்குள் தலா வருமானத்தில் அதிகரிப்பு, வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு, வருமான சமத்துவம் போன்ற பொருளாதார குறிகாட்டிகளில் பால்நிலைப் பார்வை ஒன்றை வேண்டுவதாக பால்நிலையும் பொருளாதார அபிவிருத்தியும் என்ற கருத்து நிலையைக் குறிப்பிடலாம்.

1995இல் நடைபெற்ற பீஜிங் மகாநாட்டில் பொருளாதாரம் சார்ந்து பின்வரும் ஆறு தந்திரோபாய இலக்குகள் முன்வைக்கப்பட்டன

1. வேலைவாய்ப்புக்கான அணுகுகை, பொருத்தமான வேலைச் சூழல், பொருளாதார வளங்களில் கட்டுப்பாடு உள்ளடங்கலாக பெண்களின் பொருளாதார உரிமைகளையும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல்
2. வளங்கள், வேலைவாய்ப்பு, சந்தை, வர்த்தகம் ஆகியவற்றில் பெண்களுக்கு சம அணுகுகையை ஏற்படுத்துதல்
3. வர்த்தக சேவைகள், பயிற்சி, சந்தை, தகவல், தொழினுட்ப அணுகுகையை வருமானம் குறைந்த பெண்களுக்கும் வழங்குதல்
4. பெண்களின் பொருளாதார இயலளவையும் வர்த்தக வலையமைப்புகளையும் பலப்படுத்தல்
5. வேலைவாய்ப்பு சார்ந்த பாரபட்சங்கள் அனைத்தையும் நீக்குதல்
6. ஆண்கள் பெண்களுக்கான வேலைகளிலும் குடும்ப பொறுப்புகளிலும் இணக்கப்பாட்டைக் கொண்டுவருதல்.

**வளங்கள், வேலைவாய்ப்பு, சந்தை, வர்த்தகம் ஆகியவற்றில் பெண்களுக்கு சம அணுகுகையை ஏற்படுத்துதல்**

பால்நிலையும் பொருளாதார அபிவிருத்தியும் என்ற துறை சார்ந்து வறுமை என்ற அம்சம் ஏனைய அம்சங்களைவிடவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. வறுமையில் பெண்ணின் தேவைகளையும் முயற்சிகளையும் வெளிக்கொணரக்கூடிய பருநிலைக் கொள்கைகளையும் அபிவிருத்தித் தந்திரோபாயங்களையும் மீளாய்வு செய்தல், மதிப்பிடுதல், பொருளாதார வளங்களில் பெண்களுக்கான சம உரிமைகளையும் சம அணுகுகையை உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களையும் நிர்வாக நடைமுறைகளையும் மீளாய்வு செய்தல், சேமிப்பு மற்றும் கடன் பெறும் பொறிமுறைகளை வழங்குதல், "வறுமையின் பெண்மயமாக்கல்" என்ற கருத்துநிலையை வெளிக்கொணரும் வகையில் பால்நிலை சார்ந்த முறையியலை விருத்தி செய்தலும் ஆய்வுகளை மேற்கொள்ளலும் ஆகியவை இதற்குள் உள்ளடங்கும். இது மட்டுமன்றி சூழல் சார்ந்து பால்நிலைப்பட்ட அணுகுமுறையும் இங்கு மிக முக்கியத்துவம் பெறும் ஒன்றாக உள்ளது.



### அரசியல் அணுகுமுறை

பால்நிலையும் மனித உரிமைகளும், வாக்குரிமை, அரசியல் பிரதிநிதித்துவம், தீர்மானம் எடுத்தல், வளப் பகிர்வு போன்ற அம்சங்கள் சார்ந்து பால்நிலையில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், அரசாங்கங்களினால் திட்டமிட்ட வகையில் கட்டவிழ்த்துவிடும் நிறுவன வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், ஆயுத முரண்பாடுகளில் பால்நிலைப்பட்ட தாக்கங்கள் போன்றவை இதற்குள் உள்ளடங்கும்.

### பண்பாட்டு அணுகுமுறை

மானிடவியலுக்கு அடித்தளம் ஒன்றைக் கொடுக்கும் ஒன்றாக, மானிடவியலின் பரந்துபட்ட ஆய்வுப்பரப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் ஒன்றாகப் பண்பாடு என்ற கருத்துநிலை கருதப்படுகின்றது. மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் வரையறைப்படுத்த முடியாத எண்ணற்ற சொற்களுள் பண்பாடு என்ற சொல்லும் ஒன்று. பண்பாடு என்பது பற்றி நூற்றுக்கணக்கான வரைவிலக்கணங்கள் அறிஞர்கள் பலரால் உருவாக்கப்பட்ட போதும் அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஒரு உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியே பண்பாடு என்ற மானிடவியல் அறிஞர் எட்வேர்ட் பேனாட் ரெயிலர் (Edward Bernard Tailer) என்பவரின் மிகப் புகழ் பெற்றதும் பெருவழக்கிலுள்ளதுமான வரைவிலக்கணத்தைக் கணக்கில் கொண்டால் இலக்கியம், கவிதை, நடனம், இசை, கோயில்கள், சடங்குகள், வேத மந்திரங்கள், தொழில்கள் போன்ற சில கூறுகள் மட்டும் பண்பாடு எனக் கருதப்பட முடியாது. இது கண்ணுக்குப் புலனாகாத மிகச் சிக்கல் வாய்ந்த கூறுகளின் மொத்த வடிவமைப்பாகும். இயந்திரங்கள், வீட்டுப் பொருட்கள், அழகுப் பொருட்கள், தொழிற் கருவிகள், கட்டடங்கள், சாலைகள், போக்குவரத்துச் சாதனங்கள் அனைத்தும் உள்ளடங்கிய பொருள்சார் கூறுகள், உலகத்தைப் பற்றியும் உலகிலுள்ள ஒவ்வொரு பொருட்களைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் என்னென்னவற்றை அறிந்து கொண்டுள்ளனர் போன்ற அறிதிறனோடு தொடர்புடைய கூறுகள் மட்டுமன்றி மக்களின் நம்பிக்கைகள், வழக்காறுகள், கருத்துகள் ஆகியவை உள்ளடங்கிய அறிதல்சார் கூறுகள், விழுமியங்கள், நெறிமுறைகள், விதிகள், குடி வழக்குகள், வழக்கடிபாடுகள், மனப்பான்-

**மானிடவியலுக்கு அடித்தளம் ஒன்றைக் கொடுக்கும் ஒன்றாக, மானிடவியலின் பரந்துபட்ட ஆய்வுப்பரப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் ஒன்றாகப் பண்பாடு என்ற கருத்துநிலை கருதப்படுகின்றது.**

மைகள், அளிப்புகள், வழக்கங்கள், பழக்கங்கள் முதலான நெறியியல் கூறுகள் என பண்பாட்டுக் கூறுகள் மூன்று வகைப்படுகிறது. (பக்தவத்சல பாரதி 1999)

மனிதனது குழு வாழ்க்கையினின்றும் எழுவது பண்பாடு. எனவே சமூகம் என்பது பண்பாடு இன்றி நிலை கொள்ள முடியாதது. "எந்தவொரு மக்கள் குழுவிலும் உள்ள மக்களினதும் வாழ்க்கை முறை, பழகும் விதம், ஏனைய மக்கள் குழுவுடன் பழகும் தன்மை, அவர்களின் மொழி, எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு அம் மொழியைப் பயன்படுத்தும் விதம், பொருட்கள் கருவிகளை உருவாக்கும் முறை, அவற்றைப் பயன்படுத்தும் முறை, அவர்களின் சிந்தனைகள் அனைத்துமே பண்பாடு என்பதற்குள் உள்ளடங்கும்" என்கிறார் போல் சியர்ஸ் என்ற அறிஞர்.

பண்பாடு உயிர்வாழ்வதற்கு பின்வரும் மூன்று அம்சங்களுக்கிடையில் இசைவுத் தன்மை அவசியமாகும்

1. **உபகரணங்கள்:** கற்கோடரி முதற் கொண்டு இன்றைய கணினி வரை மனிதனால் உருவாக்கப்பட்ட பௌதிக உபகரணங்கள். பண்பாட்டின் முதிர்ச்சியானது இவ் உபகரணங்களின் பரந்த பயன்பாட்டினால் அளக்கப்படுகிறது. கருவிகள் வளர்வதற்கமைய அதனைப் பயன்படுத்துவதற்கான அறிவும் வளர வேண்டும்.
2. **அறிவு:** கண்டு பிடிக்கப்படும் ஒவ்வொரு கருவியும் எவ்வாறு, எந்தளவிற்கு, என்ன நோக்கத்துக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாக சமூக உறுப்பினர்களிடையே உருவாக்கப்படும் கோட்பாடுகள் நம்பிக்கைகள், அனுபவங்கள், கட்டுக்கதைகள், புனை கதைகள், கற்பனை உருவாக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்த அறிவு என்னும் புலமைத்துவம். இந்த புலமைத்துவத்திலிருந்து பெறப்படுகின்ற தத்துவம் ஒரு மனிதனை இன்னொரு மனிதனுடன் தொடர்புபடுத்துவதுடன் உலகம் எங்கணும் தொடர்புபடுத்துகின்றது
3. **நிறுவனங்கள்:** இவற்றை செயலுருப்படுத்துகின்ற, பண்பாட்டுக்கு யதார்த்தத்தைத் தருகின்ற சமூக நிறுவனங்கள். உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு சமூக உறுப்பினர்களால் ஒன்று திரட்டப்பட்ட அறிவு என்னும் இந்த புலமைத்துவமே மக்களின் நடைமுறைகள் பழக்க வழக்கங்களாக உருவாகி நிறுவனங்களினூடாக செயலுருப் பெற்று சமூக நடத்தையாக உருவாகிறது. எந்தவொரு சமயத்திலும் இந்த புலமைத்துவமானது பௌதிக உபகரணங்களில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும். சமூக நிறுவனங்களின் எல்லைப் பரப்பையும் வரையறுக்கும்.



**கற்கோடரி முதற் கொண்டு இன்றைய கணினி வரை மனிதனால் உருவாக்கப்பட்ட பௌதிக உபகரணங்கள். பண்பாட்டின் முதிர்ச்சியானது இவ் உபகரணங்களின் பரந்த பயன்பாட்டினால் அளக்கப் படுகிறது.**

மேற்கூறிய மூன்று அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று இசைந்து போவதன் மூலமே பண்பாடு என்பது உயிர் வாழ முடியும். எனவே பொருளாதார அபிவிருத்தியைவிடவும் பால்நிலையில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக மாறியிருக்கும் கலாசார அபிவிருத்தியில் மதம், சட்டம், நம்பிக்கைகள், விழுமியங்கள், தொடர்பு ஊடகங்கள் போன்ற பொருட்துறைகளில் பால்நிலை சார்ந்த கருத்தியல்கள் ஆராய்வுக்கும் மீள் பரிசீலனைக்குரியதாக்கப்படல் அவசியமானது.

பால்நிலையும் மதமும் என்ற கருத்துநிலை சார்ந்து ஆய்வுமுறைப்பட்ட அணுகுமுறைகள், ஆணாதிக்க சமூகமும் பெண்ணியமும், தெரிந்தெடுக்கப்பட்ட சில மதங்களில் பெண்களின் நிலை போன்ற அம்சங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

ஆக 'பால்நிலையும் அபிவிருத்தியும்' குறித்து இன்னும் எம்மிடையே பன்முகப்பட்ட ஆய்வுகள் விரிவு பெற வேண்டும். மூன்றாம் உலகக் கருத்தியலை வடிவமைக்கும் புதிய பார்வைகள் நோக்கி நாம் முன்னோக்கி நகர வேண்டும். பால்நிலை சார்ந்து அபிவிருத்திச் சிந்தனை மாற்றுச்சிந்தனையாக எம்மிடையே மேலெழுச்சி பெற வேண்டும்.

## References:


1. Afsher, Haleh [1991]. Women development and survival in the third world. chapter 6 - Conceptions and misconceptions: the historical and cultural context of discussion on woman and development./ Joanna de Groot.- London: Longman, 107-135p.

2. Momson, Janet henshall. [1991]. Women and development in third world. Routledge introduction to development series. London:Routledge, p3.

3. Jasuriya Shanti and Jayasuriya, D.C [1999]. Women and Development-the road from Beijng.-New Delhi:Har-Anand.p86.

4. Parpart, Jane L[1990]. Deconstructing the development "expert" – gender, development and the Vulnerable roups. Cited in the book Feminism/Post modernism/development/edited by Marrianne Maechand and Jane L.Parpart.

5. பக்தவத்சல பாரதி [1999]. பண்பாட்டு மானிடவியல்.சென்னை: மெய்யப்பன் பதிப்பகம்.-பக்157-158.

6. Worl Bank [1991 Annual worl bank conference on development economics. ed by Boris Pleskovic and Joseph E.Stiglitz. key note address by Joseph E. Stiglitz.- Wachington:world bank.p17-31.

7. Boserup, Esther. [1991]. Women's role in economic development. London.

8. Molyneux, M., 1985, 'Mobilisation without emancipation? Women's interests, the state and revolution in Nicaragua', Feminist Studies, Vol.11, No.2


9. Reeves, Hazel and Baden, Sally [2000] Gender and Development: Concepts and Definitions:Prepared for the Department for International Development (DFID)for its gender mainstreaming intranet resource. Website: Brighten: Institute of development studies. http://www.ids.ac.uk/bridge

10. *Vainio-Mattila, A. Navigating Gender: A framework and a tool for participatory development. Helsinki: Finland Ministry for Foreign Affairs, 1999. http://global.finland.fi/julkaisut/taustat/nav_gender/glossary.htm*

11. http://united nations instraw.htm

# சோசலிசத்திற்கு மாற்று எதுவும் இல்லை

**சமீர் அமின்**




மூன்றாம் உலகச் சிந்தனையாளர்களுள் முக்கியமானவர் சமீர் அமின். இவர் மார்க்சியர். 'உலகமயமாதல்', 'சந்தைப் பொருளாதாரம்' குறித்து புதிய பார்வைகளை விமரினங்களை முன்வைக்கின்றார். சமகாலத்தில் நிலவும் உலகப் பொருளாதார நெருக்கடி குறித்து மிகத் தீவிரமான மாற்றுக் கருத்துக் கொண்டவர். மூன்றாம் உலக நாடுகளுக்குப் பொருத்தமான நிலைப்பாடுகள் பார்வைகள் வேண்டும் என்கிறார். இவரது சிந்தனைகள் ஆய்வுகள் தமிழில் அதிகமாக அறிமுகம் செய்யப்பட வேண்டும். இந்த நோக்கில் தான் சமீர் அமினின் பேட்டி வெளிவருகிறது. இதைவிட சமீர் அமின் தொடர்பிலான மேலதிக சிந்தனைகளும் அறிமுகமாகின்றன.

இவற்றைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது "சமீர் அமின்" அவர்களது புலமைத்துவம் கருத்துநிலை அரசியல் தெளிவாகும் அல்லது அவை பற்றிய தேடலை மேலும் வளர்க்க உதவும்.

நிதி நெருக்கடியானது தொடர்ந்து உலகம் முழுவதும் வேகமாகப் பரவி வருகிறது; அந்த வகையில் வங்கிகளையும், பங்குச் சந்தைகளையும், பொருள் தயாரிப்பு ஆலைகளையும் முடமாக்கியும் இதன் விளைவாக லட்சோப லட்சக்கணக்கானவர்களை வேலையிலிருந்து வெளியேற்றியும் வருகிறது. இது குறித்து 20 நாடுகள் குழுவின் 2 நாள் உச்சிமாநாடு வாஷிங்டனில் நடந்து முடிந்தது; இதற்கு 2 நாட்களுக்குப் பிறகு பொருளாதார நிபுணர் சமீர் அமின், பொருளாதார உலகமயமாக்கலுக்கு முன்பு உள்ள கரடு முரடான பாதை, முதலாளித்துவத்திலிருந்து பாதை மாற்றத்திற்கான அவசர அவசியம், ஒரு இரண்டாம் பாண்டுங் மாநாட்டிற்கான முன் முயற்சியின் வடிவத்தில் புதிய சர்வதேசியத்துக்கான சாத்தியப்பாடு ஆகியவை குறித்து தனது தீர்க்கமான பார்வையையும் தனது ஆய்வையும் 'ஃபிரன்ட்லைன்' சார்பாக அவரைப் பேட்டி கண்ட ஸ்மித்து கோத்தாரி, பென்னி குருவில்லா ஆகியோரிடம் தெரிவித்தார். இந்தப் பேட்டி ஜனவரி 2, 2009ம் தேசிய பிரன்ட் லைனில் வெளியானது.

தமிழ் வாசகர்களுக்காக இந்தப் போட்டி தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு **'உங்கள் நூலகம்'** சனவரி 2009 இதழில் வெளியிட்டது. இதனை மீண்டும் 'கூடம்' மீள்பிரசுரம் செய்கிறது.
தமிழில் :சு. பெரியசாமி

**கேள்வி:** ஊடகங்களிலும் சரி கொள்கைகளை உருவாக்கும் வட்டாரங்களிலும் சரி ஒரு வலுவான கருத்து நிலவுகிறது; அது என்னவெனில், தற்போது நிலவும் நிதி நெருக்கடியானது, முறைகேடாக பொருளாதாரக் கட்டுபாடுகள் நீக்கம், அமெரிக்கப் பங்குச் சந்தையில் (Wall Street) ஒரு சிலரின் பேராசை ஆகியவற்றின் விளைவால் ஏற்பட்டதாகும் என்பதுதான். ஆனால், நாம் இந்த நெருக்கடி குறித்த இந்த மேலெழுந்த வாரியான வரையறைக்கும் அப்பால் சென்று நாம் ஆய்வு செய்ய வேண்டியதும் இதனை வரலாற்று ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் புரிந்து கொள்வதும் அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம். உங்களுடைய ஆய்வு என்ன?



**பதில்:** நிதி வீழ்ச்சி என்பது மாபெரும் பிரச்சினை ஒன்றின் ஒரு சிறு அடையாளம்தான். இதற்கு அடியில் இருப்பது என்னவெனில் உண்மையான உற்பத்திப் பொருளாதாரத்தில் உள்ள மூலதனக் குவியலில் ஏற்பட்டுள்ள ஒரு ஆழமான நெருக்கடியாகும்; மேலும் முதலாளித்துவம் தனக்குள்ளே கொண்டிருக்கும் அமைப்பு ரீதியான நெருக்கடியும் கூட மிக ஆழமாக உள்ளது. முதலில் நிதி நெருக்கடி எனப்படும் மேல் தோற்றத்தை பார்ப்போம். இந்த நெருக்கடியானது, கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதொரு சூழ்நிலைமையில் இன்று சுதந்திரமாகச் செயல்படும் வங்கி முறையினது தவறுகளின் அல்லது பொறுப்பற்ற தன்மைகளின் விளைவால் ஏற்பட்டதல்ல. இந்தத் தவறான ஆய்வானது, கட்டுப்பாடுகள் உரிய இடத்தில் நிலைநிறுத்தப்பட்டுவிட்டால் இந்த நெருக்கடி சரி செய்யப்படும் என்றதொரு கருத்தைக் கொடுக்கிறது. இது, வாஷிங்டனில் நடைபெற்ற 20 நாடுகள் குழுவின் உச்சி மாநாட்டிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிரொலிதான். இதில் ஆச்சரியம் எதுவும் இருக்க முடியாது; ஏனென்றால் 20 நாடுகள் குழுவின் அடிப்படையில்லாத, பலவீனமான பிரகடனமானது, 8 நாடுகளின் குழுவுடன் அதாவது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட 8 பணக்கார நாடுகளுடன் சேர்ந்து சர்வதேச நிதியத்தால் (International Monitory Fund - IMF) முன்னதாகவே தயாரிக்கப்பட்டதாகும்.

நான் இந்த நெருக்கடி குறித்து மற்றுமொரு கண்ணோட்டத்தை முன்வைக்க விரும்புகின்றேன்; இதன் பொருட்டு, இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியானது நவீன தாராள உலகமயமாக்கலின் விளைவாகும் என்ற கருத்தை நாம் கைவிட வேண்டும். ஏனெனில் இந்தக் கருத்து குறுகியதாகும்; இது வெறும் வருணனையாகத்தான் உள்ளது; ஆய்வு செய்யக்கூடியதாக இல்லை.

இன்றைய (பொருளாதார) முறையின் யதார்த்த நிலைமை என்னவெனில் அதீதமான மூலதனக்குவிப்பும் மிகக்குறைந்த எண்ணிக்கையில் பெரும் தொழில் நிறுவனங்கள் இருப்பதும் தான்; உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 5000 எண்ணிக்கையில் தான் இந்நிறுவனங்கள் உள்ளன; அவை உலக அளவிலும் பிராந்திய அளவிலும் தேசிய அளவிலும் அதிகாரத்தை கட்டுப்படுத்துகின்றன. அவற்றின் முடிவுகள்தான் உலகின் போக்கை நிர்ணயிக்கின்றன. 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மூலதனக் குவியல் மட்டத்தைக் காட்டிலும், அதிகமான மற்றும் வலுவான குவிப்பு மட்டத்தில் இன்று நாமிருக்கிறோம். இந்த அதீதமான மூலதனக் குவிப்பானது மூலதன முறைக்கான நிர்வாக நியதியில் ஒரு இயல்பான மாற்றத்திற்கு (Shift) இட்டுச்சென்றது; அதாவது, நடைமுறையில் உள்ள உழைப்புச் சுரண்டலுடன் கூடிய உபரி மதிப்பை உற்பத்தி செய்வதற்கு பொருள் உற்பத்திக்கான பொருளாதாரத்தில் முதலீடு செய்வதற்குப் பதிலாக அதற்கான கவனமெல்லாம், அந்த உபரி மதிப்பான லாபத்தை

**நிதி வீழ்ச்சி என்பது மாபெரும் பிரச்சினை ஒன்றின் ஒரு சிறு அடையாளம்தான். இதற்கு அடியில் இருப்பது என்னவெனில் உண்மையான உற்பத்திப் பொருளாதாரத்தில் உள்ள மூலதனக் குவியலில் ஏற்பட்டுள்ள ஒரு ஆழமான நெருக்கடியாகும்;**




பெரும் நிறுவனங்களுக்கிடையே மறுவிநியோகம் செய்வதற்கான போராட்டத்தின் மீது குவிந்திருக்கிறது. அவைகளுக்கிடையே லாப மறுபங்கீடு, நிதி முதலீடுகள் மூலம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு பெரும் நிறுவனமும் தனக்குச் சாதகமாக லாபங்களை மறுவிநியோகம் செய்யும் பொருட்டு தன்னுடைய நிதி முதலீட்டின் செயல் எல்லையை (Sphere) விஸ்தரிப்பதற்கு முயற்சிக்கிறது. இந்த லாபங்கள் என்பவை மற்றொரு வகையான இயல்பைக் கொண்டதாகும். அதாவது அவை, அந்தப் பெரு நிறுவனங்களின் ஏகபோக குத்தகையாகும். இது, 'நிதி மயமாக்கல்' என்று அழைக்கப்படுகிறது.

நிதி மயமாக்கல் மூலம் கூடுதலான லாபங்களை அடைவதற்காக பெரும் நிறுவனங்கள் மேற்கொள்ளும் பெரும் முயற்சியில் கட்டுப்பாடுகளை நீக்குவது என்பது அவற்றின் அத்தியாவசியமானதாகும். கடந்த நவம்பர் 15-ல் 20 நாடுகளின் குழு வெளியிட்ட அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள புதிய விதிகளில் நாம் பார்ப்பது போல் கட்டுப்பாடுகள் நீக்கம் அடிப்படையிலே கேள்விக்குள்ளாக்கப்படுவதில்லை.

**இன்றைய உலக பண மற்றும் நிதிமுறையை சரிப்படுத்துவதற்கு ஏழை நாடுகளின் பண மற்றும் நிதிமுறைகளை உலக முறையுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டியது தேவையாகிறது.**

பெரும் நிறுவனங்கள் மற்றும் அவைகளின் மேற்கத்திய அரசாங்கங்களின் முயற்சியானது, ஏற்கெனவே இருந்த நிதி முதலீட்டு முறையை மீண்டும் கொண்டு வருவதற்கானதாகும். இது குறுகிய காலத்தில் சாத்தியம்தான். இது குறித்த ஒரு விஷயத்தைப் பார்ப்போம்; பிரதான நிதி நிறுவனங்கள் நிலை குலைவதை, ஆயிரக்கணக்கான கோடி டாலர்களைப் பயன்படுத்தி சமாளிப்பதன் மூலம் தவிர்க்கலாம்; இதன் மூலம் பணம் மற்றும் நிதி செயல்பாட்டு முறையை குறைந்த பட்ச நம்பிக்கைக்கு உரியதாக்கலாம். இது ஒரு வகை முறை. மேலும் நிதி செயல்முறையை மீண்டும் நிலை நாட்டுவதற்கான இரண்டாவது நிலைமை என்னவெனில் நிதி நெருக்கடியில் பாதிக்கப்பட்டவர்களின் கண்டன எதிப்புக்கள் சமாளிக்கப்படக்கூடியதாக இருக்கும் என்பதுதான். அவர்கள் பணவீக்கம், வேலை இல்லாத் திண்டாட்டம், ஓய்வு கால ஊதியக் குறைப்பு ஆகியவற்றின் மூலம், பொதுமக்கள் தங்களுடைய பணத்தை ஒப்படைக்கிறார்கள்; இந்நிலைமையை எதிர்த்த அவர்களுடைய கண்டன எதிர்ப்புகள் சமாளிக்கப்படக் கூடியதாகவும் தனித்தனியே பிளவுபடுத்தப்படக் கூடியதாகவும் இருக்கும்; இந்த எதிர்ப்புகள் நிதி முறையை பாதித்து விடாது. மூன்றாவது நிலைமை என்னவெனில், உலகின் ஏழை மற்றும் வளரும் நாடுகள் உலகநிதி முறையை மீண்டும் நிலைநாட்டுவதென்ற முடிவை ஏற்றுக்கொள்ளவும் அம் முடிவுக்கு கட்டுப்படவும் செய்கின்றன என்பதுதான். அதாவது, நடப்புப்பண மற்றும் நிதிமுறைகளின் உலகமயமாக்கலைச் செயல்படுத்துவதன் தேவையை ஏற்றுக் கொண்டும் அதன் ஒரு பகுதியாக இருந்தும் செயல்படுகின்றன.

இன்றைய உலக பண மற்றும் நிதிமுறையை சரிப்படுத்துவதற்கு ஏழை நாடுகளின் பண மற்றும் நிதிமுறைகளை உலக முறையுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டியது தேவையாகிறது. இதை நிறைவேற்றியாக வேண்டும் என்பதுதான் 20 நாடுகள் குழுக்கூட்டத்தின் இலக்காகும். அதாவது, உலக பண மற்றும் நிதி முறையை ஏற்கெனவே இருந்த நிலைமைக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான இந்தச் செயல் திட்டத்திற்குள் பிரதான பொருளாதார சக்திகளாக உருவாகிவரும் சீனா, இந்தியா, தென்னாபிரிக்கா பிரேஸில் மற்றும் இவை போன்ற நாடுகளை கொண்டு வருவதே 20 நாடுகள் குழுக்கூட்டத்தின் இலக்காகும். இந்த நாடுகளை கொண்டிராத எந்த நெருக்கடி மீட்பு நடவடிக்கையும் நீண்ட காலத்திற்கு நீடிக்காது. அப்படியே உலக பண மற்றும் நிதிமுறை மீட்கப்பட்டாலும் கூட, அது, நீண்டகாலத்திற்கு நீடிக்கப்போவதில்லை என்று நான் தெளிவாகக்

... நூலகம்
யாழ்ப்பாணம்



கூறுவேன். ஒரு சில மாதங்களுக்குள்ளாகவோ ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவோ - இதற்கு-மேல் தாங்காது - நாம் மற்றுமொரு ஆழமான நெருக்கடியை சந்திக்கப் போகிறோம்.

இந்நிலைமையில் இடதுசாரிகளாகிய நாம் அதிக-மான ஆராய்ச்சியும் அதிகமான விவாதமும் நடத்த வேண்டிய பிரச்சினை என்னவென்றால், தற்போது ஏற்பட்டுள்ள நிலைகுலைவுக்கு காரணம் (தற்போது பிரதான கருத்தாக உள்ள) கட்டுப்பாடுகள் (Regulation) குறித்து செய்யப்பட்ட தவறுகளின் விளைவு அல்ல என்பதுவும் மாறாக பெரும் நிறுவனங்கள் அவைகளுக்கிடையே லாபங்களை மறுபங்கீடு செய்து கொள்வதற்காக அவை மேற்கொள்ளும் கடும் முயற்சியின் மையமான நிலைபாட்டினுடைய இயல்பான நியதியே என்பதும்தான். ஆகவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண தேவைப்படுவது என்னவெனில், தீவிரமான மாற்றம்தான்; அந்த மாற்றம் நீண்ட கால நோக்கம் கொண்டதாகும்; இது சமூக மயமாக்கல் இலக்குடன் பெரும் நிறுவனங்கள் தேச உடமையாக்கப்படும்போது மட்டுமே நடைமுறைக்கு வரும். ஆனால் இந்த இலக்கு உண்மையிலேயே தற்போதைய நடைமுறைத் திட்டத்தில் இல்லை. ஆகையினால்தான் நாம் முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் கடுமையான, தொடர்ச்சியான நெருக்கடியில் நாம் தொடர்ந்து இருந்து வருகிறோம். இந்த நெருக்கடி நிதிச் சந்தைகளினால் மட்டுமே ஏற்பட்டதல்ல. இந்த நெருக்கடிதான் கடைசியானது என்றிருக்க வேண்டியதில்லை. முதலாளித்துவமானது அவ்வப்போது இத்தகைய நெருக்கடியை வெளிப்படுத்தும்; ஆனால் மேல் பூச்சான மாற்றங்களை தீர்வாகக் கருதினால், இந்த உலகம் நெருக்கடியிலிருந்து நெருக்கடிக்கு உள்ளாகுவது தொடரும்.

**கேள்வி:** இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி, உலகில் உள்ள ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கு (Global South) புதிய சாத்தியப்பாடுகளை அளிக்கிறது என்றதொரு பொதுவான கருத்து உள்ளது. பிரதமர் மன்மோகன்சிங், ஒரு முக்கியமான நிலைமாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்றும், எழுந்துவரும் பொருளாதார சக்திகளான பிரேசில், சீனா, இந்தியா போன்ற நாடுகள், நிலவியல் சார்ந்த அரசியல் (Geo-Politics) என்ற உயர்ந்த மேடையில் இப்போது சமமான அந்தஸ்து கொண்டுள்ளன என்றும் அழுத்தமாக கூறியுள்ளார். மேலும் இந்த உலகளவிலான நெருக்கடியை முன்னதாகவே எதிர்பார்த்ததாக பெருமைப்பட்டுக்கொள்ளும் மன்மோகன்சிங், அப்படி எதிர்பார்த்தமையால் இந்தியாவில் முன்னதாகவே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறுகிறார். இந்தப் பின்னணியில், உலக வங்கி, சர்வதேச நிதியம் ஆகியவை, உலக அளவிலான வளர்ச்சியடையும் நாடுகளின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டுமென்ற குரல்கள் சப்தமாக எழும்பியுள்ளன. அமெரிக்காவின் ஜனாதிபதியாகவிருக்கும் பாரக் ஒபாமா இது பற்றி கவனம் செலுத்தி வித்தியாசமாக செயல்படுவாரா?

**பதில்:** உங்களுடைய கடைசிக் கேள்விக்கு முதலில் பதில் அளிக்கிறேன். நிச்சயமாக, ஜான் மிக்கேய்னை விட பாரக் ஒபாமா மேம்பட்டவர்தான். மேலும் அமெரிக்க சமுதாயத்தின் பரிணாமக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் அந்நாட்டில் ஜனாதிபதியாக ஒரு ஆப்ரிக்க அமெரிக்கன் தேர்ந்தெடுக்கப்படுவதும் ஏதோ கொஞ்சம் சாதகமான அம்சம் தான். ஆனால் உலகின் ஏனைய பகுதிகளுக்கு நேர் எதிராக உள்ள அமெரிக்காவின் கொள்கை மற்றும் அரசியல் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், (இருவருக்குமிடையே) கொஞ்சம் கூட வித்தியாசமில்லை. (இருவரும்) பேசும் முறை மாறக்கூடும். ஆனால் அவர்களின் இலக்கு ஒன்றுதான். ஒன்றை நினைவு கூருங்கள். ஒபாமா உள்நாட்டுச் சமுதாய அரசாங்கத்தில் பல மாற்றங்களைச் செய்யப் போவதாக வாக்குறுதி அளித்தார்; ஆனால், நிலவியல் சார்ந்த அரசியல் ரீதியான தொலை நோக்குத் திட்டம் சம்பந்தமாக அவர் எதுவும் கூறவில்லை. எனவே, இராக் மற்றும் ஆப்கானிஸ்தான் சம்பந்தமாகவோ அல்லது சீனா மற்றும் ரஷ்யாவுடனான விவகாரம் சம்பந்தமாகவோ எந்த நிலை மாற்றத்தையும் நான் எதிர்பார்க்கவில்லை.

**நாம் முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் கடுமையான, தொடர்ச்சியான நெருக்கடியில் நாம் தொடர்ந்து இருந்து வருகிறோம். இந்த நெருக்கடி நிதிச் சந்தைகளினால் மட்டுமே ஏற்பட்டதல்ல. இந்த நெருக்கடிதான் கடைசியானது என்றிருக்க வேண்டியதில்லை.**

இப்போது நாம் மிகவும் முக்கியமானதும் அதே சமயத்தில் சிக்கலானதுமான முந்திய பிரச்சினைகளுக்கு கூட்டறிக்கையின் விவரங்களுக்குள் இப்போது போக வேண்டிய அவசியம் இல்லை. நெருக்கடிக்குள்ளாகியுள்ள பணம் மற்றும் நிதி செயல்பாட்டு முறையை சரிப்படுத்தும் நோக்கம் கொண்ட கொள்கைகள் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டன; ஆனால், இந்தக் கொள்கைகள் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா (மும்மூர்த்தி குழு) ஆகியவற்றின் அரசாங்கங்களால் தீர்மானிக்கப்பட்டவையல்ல. இந்நாடுகளின் பெரும் தொழில் நிறுவனங்களால் தீர்மானிக்கப்பட்டவையாகும். இந்த முடிவுகளை இந்த நாடுகளின் அரசாங்கங்கள் ஏற்றுக்கொண்டன. அவ்வளவுதான். (நிதி நெருக்கடிப் பிரச்சினையில்) தலையிடுமாறும் தங்களைத் "தேசியமாக்கு" மாறும் அந்த அரசாங்கங்களை கேட்டுக் கொண்டதும் பெரும் நிதி நிறுவனங்கள்தான். இந்த மீட்புத்திட்டமானது அவைகளால் தான் முன்வரைவு செய்யப்பட்டது; அவை, நெருக்கடியை போக்குவதற்காக (அரசு) பணத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன.

சர்வதேச நிதியத்தை சீர்திருத்து வதற்கான பேச்சானது முக்கியமான வளரும் பொருளாதார நாடுகளை உலக நிதிமுறையுடன் ஒருங்கிணைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதே சமயத்தில் சர்வதேச நிதியத்தை சீர்திருத்தம் செய்வதற்கான குரல்கள் ஒரு மாறுபட்ட சூழ்நிலைமையில் சர்வதேச நிதியம் செயல்பட உதவுவதற்கான நடவடிக்கைகளாக இருந்தன. கடந்த 10 ஆண்டுகளில் பல ஏழை நாடுகள் சர்வதேச நிதியத்தின் திட்டங்களிலிருந்து வெளியேறிவிட்டன; ஏனென்றால், அந்நாடுகள் தங்களுடைய ஏற்றுமதி உபரி மூலமாகத் தங்களுடைய கடன்களை அடைத்து விட்டன. ஆகவே, சர்வதேச நிதியம் பொருத்த மற்றதாகிவிட்டன. ஆகையினால் சர்வதேச நிதியத்தை சீர்திருத்து வதற்கான பேச்சானது முக்கியமான வளரும் பொருளாதார நாடுகளை உலக நிதிமுறையுடன் ஒருங்கிணைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த வழியின் நோக்கம் என்னவெனில் இந்த முக்கியமான வளரும் நாடுகள் (பிரேசில், இந்தியா போன்றவை) நிதிமுறையிலிருந்து துண்டித்துக்கொள்ளவும் அதிலிருந்து வெளியேறவும் வேண்டிய சமயத்தில் உலக நிதிமுறையை சரிப்படுத்துவதற்கு இந்நாடுகளின் பங்கை அளிக்கச் செய்வதாகும். இதில் நாம் ஒரு விஷயத்தை பார்க்கிறோம்; அது என்னவெனில், 20 நாடுகள் குழுவின் நிதி மூலதனம் குறித்த முடிவுகளுக்கு அப்படியே ஒப்புதல் அளிக்கும் வளரும் நாடுகளின் போலித்தோற்றம் தான்.


20 நாடுகள் குழுவின் நடவடிக்கைகளுக்கு ஏன் சீனா ஒப்புதல் அளித்தது என்பது குறித்துப் பார்ப்போம். சீனாவைப் பொறுத்தவரையில் 20 நாடுகள் குழுவின் கூட்டறிக்கை அதற்கு முக்கியமானதல்ல. ஆனால் அது, மேற்கத்திய நாடுகளுடன் குறிப்பாக அமெரிக்காவுடன் ஒரு அரசியல் மோதலை விரும்பவில்லை. சீனாவானது, உலக பண மற்றும் நிதிமுறையுடன் ஒருங்கிணைக்கப்படவில்லை; இந்நிலைமையில் அந்நாடு அந்த ஒருங்கிணைப்புக்கான நடவடிக்கையை எடுக்கும்;

ஆகவே நவம்பர் 15-ல் நடந்த (20 நாடுகள் குழுவின்) உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் சீனாவிற்கு எந்த விளைவையும் ஏற்படுத்தாது என்பது இயல்பாக நிகழக்கூடியதல்ல. உலக நிதி முறையுடன்இணைய வேண்டுமென சீனா மீது நிர்ப்பந்தம் இருக்கும், ஆனால் அதற்குச் சீனா உடன்படும் என்பது இயல்பானதாக இல்லை. இதைச் சமீப ஆண்டுகளில் சீன அரசாங்க அதிகாரிகள் திரும்பத்திரும்பக் கூறிவிட்டனர்.

ஆனால், ஏனைய வளரும் நாடுகளின் விஷயம் அப்படியல்ல. உதாரணத்திற்கு இந்தியாவை எடுத்துக் கொள்வோம்; இந்த நாடு உலக பண மற்றும் நிதிமுறையுடன் பகுதியளவாக ஒருங்கிணைந்துள்ளது. இது அதனுடன் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டை கடைப்பிடித்து வருகிறது. இந்த நாடு பிரதான தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை கொண்டுள்ளது. வெளிநாட்டு வங்கிகளுடனான செயல்பாடுகளை வரம்புபடுத்தியுள்ளது. உலக நிதிமுறையிலிருந்து வெளியேறுவதற்கு நிதி நெருக்கடியை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்வதற்குப் பதிலாக இந்திய அரசாங்கத்தின் முடிவு இதற்கு எதிர்மாறானதாக இருக்கிறது.

நூலகம்
யாழ்ப்பாணம்

அதாவது அந்த உலக நிதி முறைக்குள் ஆழமாகச் செல்லவும், இந்தியா ஒரு உலக வல்லரசாக உருவாகி வருவதாக மேற்கத்திய நாடுகள் கூறும் வெற்றுப் பாராட்டுக்களை ஏற்றுக் கொள்ளும் வகையிலும் முடிவு எடுத்துள்ளது. இது, அமெரிக்காவுடனான அணுசக்தி ஒத்துழைப்பு, அமெரிக்காவின் ஆதரவுடன் ஆசியாவில் சீனாவுக்கு எதிரான ஒரு சக்தியாகுவதற்கான இந்தியாவின் விருப்பம் போன்ற அரசியல் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டதாகும். இது, இந்திய ஆளும் வர்க்கங்களின் முடிவாக உள்ளது. இந்த முடிவு இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளாலும் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரிவினராலும் கூட தடுக்கப்படுமா? என்பது இனிமேல்தான் பார்க்கப்பட வேண்டும். அப்படியே தடுக்கப்படாவிட்டால் அது ரொம்பவே அபாயகரமானதாகிவிடும்.



20 நாடுகள் குழுவில் உள்ள தென்னாப்பிரிக்கா, தென்கொரியா, பிரேஸில் போன்ற ஏனைய நாடுகளைப் பொறுத்தவரையில் அந்த நாடுகள் உலக நிதிமுறையுடன் முற்றிலுமாக இணைக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கு உள்ள நம்பிக்கையெல்லாம், தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக உலக நிதிமுறை தங்களுக்கு இழப்பு எதையும் ஏற்படுத்தாது என்பதுதான். அதிலிருந்து மலேசியா, 1997-ம் ஆண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடிக்குப் பிறகு பகுதியளவாக வெளியேறியது; இப்போது இந்தியா உலக நிதிமுறையில் என்ன நிலைமையில் உள்ளதோ அதே நிலைமையில் மலேசியாவும் இருக்கிறது.

இந்தப் பொதுவான நிலைமை ஒரு விஷயத்தை சுட்டிக்காட்டுவதாக உள்ளது; அது என்னவெனில் ஏழை மற்றும் வளரும் நாடுகளில் ஆளும் வர்க்கங்கள் தங்களுடைய முறைமை நிலையை (Legitimacy) இழந்துள்ளன என்பதுதான். பிரதமர் மன்மோகன் சிங், தாம் இந்த நெருக்கடியை எதிர்பார்த்ததாகவும் அதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் கூறியுள்ள அறிக்கை தொடர்பாக இன்னுமொரு வார்த்தை கூற வேண்டும். அவரது இந்த அறிக்கை அப்பட்டமான அரசியல் சவடாலாகும். நிதிநெருக்கடி எதிர்பார்க்கப்பட்டது என்று கூறுவது ஒரு பொய்யாகும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்பதைப் பொறுத்தவரையில் கஜனா வருமானத்திற்கான புறத்தூண்டுதல் நடவடிக்கையானது (Stimulus) நிதி மூலதனமும் பெரும் தொழில்களும் என்ன விரும்புகின்றனவோ அதன்படியே மேற்கொள்ளப்பட்டது.

வழக்கமான முதலாளித்துவ பொருளாதார வாதிகளும் (Conventional Economists) அவர்களுடைய அரசாங்கங்களும், இப்படியொரு நெருக்கடியை எதிர்பார்க்கவே இல்லை. இடதுசாரி பொருளாதாரவாதிகளிடையேகூட ஒரு சிலர்தான் இப்படியொரு நெருக்கடி வருவதைப் பார்த்தார்கள். நான் 2003 ஆம் ஆண்டில் Obsolescent Capitalism என்ற நூலில் லாபங்களை மறுவிநியோகம் செய்வதற்கான தொடர்ச்சியான தேடல், நிதிமுறையின் முடக்கத்திற்கு இட்டுச்செல்லும் என்று எழுதியிருந்தேன்; மேலும் அது எப்போது நிகழும் என்று முன்கூட்டி பார்ப்பதற்குத் தொலைநோக்குக் கண்ணாடி எதுவும் என்னிடம் இல்லை என்றும் எழுதியிருந்தேன்.

**கேள்வி:** நிதி நெருக்கடி, தொடங்குவதற்கு முன்பேகூட வர்த்தகத்தை தாராளமயமாக்குவதும் ஒரு சிக்கலான காலக்கட்டத்தை கொண்டிருந்தது. உலக வர்த்தக அமைப்பின் (World Trade Organisation - WTO) டோஹா சுற்றுப்பேச்சு வார்த்தை 8-வது ஆண்டாக தனது வீண்முயற்சிகளை தொடர்கிறது. உலக வர்த்தக அமைப்புடன் இருதரப்பு மற்றும் பிராந்திய சுதந்திர வர்த்தக உடன்பாடுகள் பேசப்பட்டு வருகின்றன; ஆனால் இந்தப் பேச்சு வார்த்தைகள் மிகக்

***வழக்கமான முதலாளித்துவ பொருளாதார வாதிகளும் அவர்களுடைய அரசாங்கங்களும், இப்படியொரு நெருக்கடியை எதிர்பார்க்கவே இல்லை. இடதுசாரி பொருளாதாரவாதிகளிடையேகூட ஒரு சிலர்தான் இப்படியொரு நெருக்கடி வருவதைப் பார்த்தார்கள்.***

குறைந்த வேகத்தில் நடைபெறுகின்றன. இந்நிலைமையில் ஏற்பட்டுள்ள உலக நிதி நெருக்கடியானது வளர்ச்சியடைந்த நாடுகளின் நலன்களை மட்டும் தற்காத்துக் கொள்வதற்கான பெருந்திரளான நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் இயல்பான நிலைமை உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் அந்நாட்டின் ஆட்சி அதிகாரம் கைமாறும் போது ஒரு வர்த்தக எதிர்ப்பான அமெரிக்காவே அவருக்கு கிடைக்கும். இப்படியொரு பின்னணியில் உங்கடாட் எனப்படும் வர்த்தகம் - முன்னேற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் மாநாடு (United Nations Conference on Trade and Development - UNCATAD) தலைமையிலான வர்த்தகத் தேர்வு குறித்த பொதுமுறை, (General System of trade Preference - GSTP)க்கும் அமெரிக்க நாடுகளுக்கான பொலிவாரிய மாற்றுத் திட்டத்துடனான (Bolivarian Alternative for the Americas ALBA) லத்தீன் அமெரிக்காவின் அனுபவ முயற்சிக்கும் வெளியே ஒரு மாற்றுத் திட்டக் கொள்கைக்கான சாத்தியப்பாடுகளாக எவற்றை நீங்கள் கருதுகிறீர்கள்?

**பதில்:** ஒரு கோட்பாட்டளவில் நாம் முதலில் சுதந்திர வர்த்தகம் என்பதிலிருந்து வர்த்தகத்தை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். சுதந்திர வர்த்தகத்திற்கு எதிராக இருப்பது என்பது எந்தவொரு வகையான வர்த்தகத்திற்கும் எதிராக இருப்பது என்பதல்ல. சுதந்திர வர்த்தகம் என்ற வரையறையிலிருந்து துண்டித்துக்கொள்வது என்பது நிலவை நோக்கிச் செல்வது என்பதல்ல. வர்த்தகம் பற்றி பேசுவது என்பது துரதிருஷ்டவசமாக பெரும்பாலான ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கு சுதந்திர வர்த்தகத்தை பற்றி மட்டுமே என்ற ஒரே அர்த்தமாகிவிட்டது. சுதந்திர வர்த்தகம் என்பது பலதரப்பு நாடுகளுடனானவையாகவும் பிராந்திய அளவிலானதாகவும் இருதரப்பானதாகவும் இருக்க முடியும்; இந்த சுதந்திர வர்த்தகமானது இந்த மூன்று நிலைமைகளிலும் ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கு ஏற்கத்தகாதவை. இதில் மூன்றாவது அம்சம் என்னவெனில் பலதரப்பு நாடுகளுடனான வர்த்தகம், இருதரப்பு வர்த்தகம் ஆகிய 2 வகை வர்த்தகங்களில் அமெரிக்கா, சுதந்திர வர்த்தகத்திற்கு ஆதரவாக உள்ளது.

> *சுதந்திர வர்த்தகம் என்பது பலதரப்பு நாடுகளுடனானவையாகவும் பிராந்திய அளவிலானதாகவும் இருதரப்பானதாகவும் இருக்க முடியும்; இந்த சுதந்திர வர்த்தகமானது இந்த மூன்று நிலைமைகளிலும் ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கு ஏற்கத்தகாதவை.*

ஆனால் தற்போதைய அமெரிக்க நாடாளுமன்றமானது அமெரிக்காவிற்கு சுதந்திர வர்த்தக விதிகளை பயன்படுத்துவதற்கு எதிராக உள்ளது. ஆனால் அதே விதிகள் உலகில் உள்ள ஏழை மற்றும் வளரும் நாடுகளின் சந்தைகளில் நுழைய வேண்டுமென அமெரிக்கா விரும்புகிறது. இது ஒரு மேலாதிக்க நடத்தையாக உள்ளது. அதாவது "சர்வதேச விதியுடன் நீங்கள் உடன்பட்டுப் போக வேண்டும். ஆனால் நான் போகமாட்டேன்."


எல்லா விஷயங்களிலுமே சுதந்தரவர்த்தகமானது - பல தரப்பானதானாலும் சரி அல்லது இருதரப்பானதானாலும் சரி - பல ஆண்டுகளாகக் கேள்விக்குரிய தாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு பக்கம் அடைக்கப்பட்ட ஒரு குறுகிய பாதைக்குள் (Bind alley) நுழைந்த டோஹா பேச்சு வார்த்தை ஒரு முன்னுதாரணமாகும். இதில் விவசாய மானியங்கள், ஏற்றுமதிகள், பணிகள் தாராளமயமாக்கல் ஆகியவை குறித்த மோதல்கள் தொடரும். ஆகவே, சுதந்திர வர்த்தகம் என்ற கோட்பாட்டிலிருந்து முறைப்படுத்தப்பட்ட (Regulated) மற்றும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட வர்த்தகமுறைக்குச் செல்வதற்குத் தற்போதைய நிதிநெருக்கடி ஒரு ரொம்ப நல்ல சந்தர்ப்பமாகும். இந்தப் பேச்சு வார்த்தையானது நிச்சயமாக சமச்சீரற்றதாகத்தான் இருக்க முடியும்; ஏனெனில் பணக்கார நாடுகளுக்கும் (North) ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கும் (South) இடையே ஒரு சமச்சீரற்ற நிலைமை நிலவுகிறது; இது, பிரான்சுக்கும் செனகலுக்குமிடையே ஏற்பட்ட மீன்பிடிப்பு உடன்பாட்டைப் பற்றிய வேடிக்கையை எனக்கு நினைவுபடுத்துகிறது. இதில் "பிரான்ஸ் நாட்டுக் கப்பல்கள் செனகல் நாட்டுக் கடலிலும் பிரான்ஸ் நாட்டுக் கடலிலும் மீன்-பிடிக்க அனுமதிக்கப்பட்டன" (பலமாகச் சிரிக்-கிறார்) இந்த வகையான கபடத்தனம் ஒப்புக் கொள்ளக்கூடியதல்ல.

உண்மையில், உங்டாட் எப்போதுமே உலக மற்றும் பிராந்திய வர்த்தகத்திற்கான கொள்கைகளை வலியுறுத்தி வந்திருக்கிறது. ஏழை மற்றும்

வளரும் நாடுகளிடமிருந்து வந்த யோசனைகளில் லத்தீன் அமெரிக்க அனுபவமான அமெரிக்க நாடுகளுக்கான பொலிவாரிய மாற்றுத் திட்டமே (ALBA) தனிப்பட்ட பொறுப்புகளில் மிகச்சிறந்ததும் முற்போக்கானதுமாகும். அந்த மாற்றுத் திட்டமானது தென்னமெரிக்க நாடுகளின் பொருளாதார ஒருங்கிணைப்புக்கான ஓர் செயல்திட்டமல்ல. அது அந்நாடுகளின் அரசாங்கங்களால் திட்டமிடப்பட்டு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு தீர்மானிக்கப்பட்ட முழு நம்பிக்கைகளை உருவாக்குவதற்கான திட்டமாகும். இது, மிக முக்கியமாக ஒரு பொதுவான அரசியல் நிலைப்பாட்டை உள்ளடக்கியதாகவும் உள்ளது. ஆனால் துரதிருஷ்டவசமாக, அத்திட்டம் இன்னும் வலுவானதாகவில்லை. ஏனென்றால் அந்த மாற்றுத்திட்டத்தின் இயல்பான விளைவை பிரேசில் ஏற்கவில்லை. பிரேசில் இல்லாத ஒரு அமெரிக்க நாடுகளுக்கான பொலிவார் மாற்றுத்திட்டம் என்பது கியூபா, வெனிசுலா, ஈகுவாடர் பொலிவியா ஆகியவற்றைக் கொண்டதாகும்; இது, லத்தீன் அமெரிக்காவில் எதிரும் புதிரான சக்திகளின் சமநிலைமையை (Balance of Force) மாற்றுவதற்கு போதுமானதல்ல;

**கேள்வி:** '2வது பாண்டுங் மாநாடு' கூட்டப்பட வேண்டியதன் தேவையைப் பற்றி நீங்கள் அடிக்கடி பேசிக்கொண்டிருந்திருக்கிறீர்கள். முதல் பாண்டுங் மாநாடானது மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் அது, பல்வேறு வகையான சோசலிஸங்களால் ஈர்க்கப்பட்ட தலைவர்களின் பங்கேற்பு காரணமாக அந்த மாநாடு உயர்ந்த கற்பனையான லட்சிய உணர்வைக் கொண்டிருந்தது. மேலும் முதலாளித்துவத்திற்கான ஒரு மாற்றாக ஒரு எழுச்சி மிக்க அரசியல் சக்தியாக இடதுசாரிகள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகளிலும் இப்போது ஒரு சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிப் போக்குகளை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

**பதில்:** முதல் பாண்டுங் மாநாட்டில் லட்சிய உள்ளடக்கம் இருந்தது என்று நீங்கள் சொல்கின்றபோது, அது தேசிய வாதத்தன்மை கொண்டதாக நான் கருத்தளிக்கிறேன். ஒரு நுணுக்கமான தேசிய வாத உணர்வு இருந்தது; ஏனென்றால் பாண்டுங் மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகள், தங்களுடைய தேசிய சுதந்திரத்திற்கான போராட்டத்தில் ஒரு எழுச்சிமிக்க வரலாற்றிலிருந்து வந்து கொண்டிருந்த நாடுகளாகும்; மேலும் அந்நாடுகளின் தேசிய சுதந்திரப் போராட்டங்கள் சீனாவில் நிகழ்ந்த தீவிரச் சீர்திருத்தம், மற்ற சில நாடுகளில் நிகழ்ந்த அரைகுறையான சீர்திருத்தம், ஆகியவற்றுடன் இணைந்தவையாகவும் இருந்தன. நாம் இதனை ஆக்கப்பூர்வமான தேசியவாதம் (Positive Nationalism) என்று அழைக்கலாம். ஆனால் அது பாண்டுங் மாநாட்டிற்கு ஒரு எல்லைக்கோடாகவும் இருந்தது; ஏனெனில் இந்தத் தேசியவாதம் ஆளும் வர்க்கங்களால் இயக்குவிக்கப்பட்டது என்று பொருள் கொண்டிருந்தது.



இன்று பெரும்பாலான மக்கள், தேசிய வாதத்தில் நம்பிக்கை இழந்து விட்டனர். பாரதமா? ஒரு இந்திய குழந்தைக்கு அப்படியென்றால் என்ன அர்த்தம்? ஒரு அர்த்தமும் இல்லை. ஏனைய அடையாளங்களான இந்துமதம், பிராந்திய வாதம் போன்றவை மிகுந்த முக்கியத்துவமாகி விட்டன. இது, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராக இந்திய மக்களை ஒற்றுமையாக்குவதில் ஒரு முக்கிய பங்கு வகித்த நல்ல தேசியவாதம் இப்போது தனது பெருமையை இழந்து கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு நிரூபணமாகும்; ஆனால் அந்த நல்ல தேசியத்தின் இடத்தை பிடித்துக் கொண்டிருப்பது உழைக்கும் மக்களின் சர்வதேசியம் அல்ல, மாறாக அது போலியான தேசியவாதத்தின் தோற்றமாகும். இவற்றை நாம் புதிய தேசியவாதங்கள் என்று அழைத்துக்கொள்ளலாம்.

**முதல் பாண்டுங் மாநாடானது மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் அது, பல்வேறு வகையான சோசலிஸங்களால் ஈர்க்கப்பட்ட தலைவர்களின் பங்கேற்பு காரணமாக அந்த மாநாடு உயர்ந்த கற்பனையான லட்சிய உணர்வைக் கொண்டிருந்தது.**

ஆனால் இது மிக ஆபத்தான போக்காகும். இதை நான் மிதவாத விஷக்கிருமி (Liberal virus) என்று அழைக்கிறேன். இந்த மிதவாத விஷக்கிருமிகளை இடதுசாரி சக்திகள் வெளியேற்ற வேண்டும். இந்த மிதவாத விஷக்கிருமியானது இரண்டு அல்லது மூன்று விஷயங்களில் ஏற்படும் நம்பிக்கையாகும்.

அவைகளில் முதலாவதானது, சந்தைப் பொருளாதார முறை என்று அழைக்கப்படும் ஒரு விஷயம். ஆனால் உண்மை என்னவெனில், ஒரு சந்தைப் பொருளாதாரம் என்று குறிப்பிடக்கூடிய வகையில் எதுவும் இல்லை என்பது தான். சந்தைகள் இருக்கின்றன. ஆனால் முதலாளித்துவச் சந்தைகளும் இருக்கின்றன, சோசலிஸ்ட் சந்தைகளும் இருக்கமுடியும். இந்தியாவிலும் சரி வேறு நாடுகளிலும் சரி முதலாளித்துவத்திற்கு முந்தைய சந்தைகளும் இருந்தன. எந்த ஒரு ஒட்டு மொத்தமான சமுதாயத்திலும் சுயேச்சைத்தன்மையுள்ள சந்தை முறைகள் (Market Subsystems) இருக்கின்றன. இப்போது நாம் முதலாளித்துவ சந்தைகளுடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். சந்தைகளுடன் அல்ல; இது அந்த விஷக்கிருமியின் ஒரு பக்கத் தோற்றம் ஆகும் - அதாவது இது ஆதிக்க சக்திகளின் கருத்தை ஏற்றுக் கொள்வதாகும். ஆதிக்க சக்திகள் என்பது கருத்தளவில் உருவாக்கப்பட்ட இருவகைப் பொருளாதாரமாகும். அதாவது, நிர்வாக ரீதியாக நிர்வகிக்கப்பட்ட பொருளாதாரம், சந்தை ரீதியாக நிர்வகிக்கப்பட்ட பொருளாதாரம் ஆகும். ஆனால் இவை இரண்டிலும் எதுவுமே நடைமுறை ரீதியானதல்ல. இவை, இயல்புப் போக்கு குறித்த இரண்டு தத்துவார்த்த சித்திரிப்புகளாகும். இந்தப் போக்குகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டு சந்தைப் பொருளாதாரம் என்று அழைக்கப்பட்டது எதுவும் உண்மையில் இல்லை என்பதைப் புரிந்துகொள்வோம். உண்மையில் சந்தைகளுடன் கூடிய முதலாளித்துப் பொருளாதாரம் உள்ளது, ஆனால் சந்தைகள் என்பவை மூலதனக் குவிப்பு என்ற நியதிக்கு கட்டுப்பட்டவையாகும். சந்தையானது, தன்னுடைய ஒரு துணைப்பொருளாக மூலதனக் குவிப்பை உற்பத்தி செய்வதில்லை; மாறாக மூலதனக் குவிப்புதான் சந்தைக்கு ஆணையிடவும், அதனை கட்டுப்படுத்தவும் செய்கிறது.

அடுத்த இரண்டாவது நம்பிக்கை என்னவெனில் சமூகப் பிரச்சினைகளிலிருந்து பிரிக்கப்பட்ட ஜனநாயகம் தேர்தல்கள். கிட்டத்தட்ட நியாயமாக நடக்கும் தேர்தல்கள், சில அடிப்படையான அரசியல் உரிமைகள் ஆகியவற்றின் மூலம் வரையறை செய்யப்படுகிறது. ஜனநாயகமானது சமுதாய முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்கிறதா என்பதைப் பற்றியெல்லாம் அவ்வளவாக அக்கறை இல்லை. உண்மையில் நாம் விரும்புவது என்னவெனில் சமுதாய முன்னேற்றத்துடன் இணைந்த ஒரு சமுதாய ஜனநாயகமாக்கல்தான் - நிச்சயமாக சமுதாய முன்னேற்றத்திலிருந்து துண்டிக்கப்பட்டதல்ல - மேலும் உணவுக்கான உரிமை, உறைவிடத்திற்கான உரிமை, வேலை பெறுவதற்கான உரிமை, கல்விக்கான உரிமை, மருத்துவம் மற்றும் சுகாதாரத்திற்கான உரிமை ஆகிய சமுதாய - உரிமைகளுக்கு முழு முக்கியத்துவம் அளிப்பதற்கான பணியுடன் இணைந்த சமுதாய ஜனநாயகமாக்கலையே நாம் விரும்புகிறோம். இதன் அர்த்தம் இந்த உரிமைகளை அரசியல் சாசனத்தில் பொறுத்துவிடுவது என்பது மட்டுமல்ல, அந்த உரிமைகளை செயல்படுத்துவதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்பதாகும்; இதனை, சொத்துரிமை வரம்புபடுத்தும் பொருட்டும் சமுதாய முன்னேற்றத்தைச் சாதிக்கும் பொருட்டும் செய்தாக வேண்டும். சொத்துரிமை அங்கீகரிக்கப்படலாம், ஆனால், சமூக உரிமைகளுக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும்.

இதுதான் ஜனநாயகம் குறித்த கோட்பாட்டில் ஒரு உண்மையான புரட்சியாகும். ஆனால், இன்று இடதுசாரி சக்திகள் கூட நாம் பூர்ஷ்வா ஜனநாயகம் என்று அல்லது பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்று அல்லது ஜனநாயகத்தின் கேலிச்சித்திரம் என்று அல்லது ஜனநாயத்தின் மாறுவேடம் என்று நாம் அழைப்பதனுடைய முன்மாதிரியை ஏற்றுக் கொள்கின்றன. அவை (இடதுசாரி சக்திகள்) மேலும் சொத்துரிமைகள் குறித்த முழுமையான

கிட்டத்தட்ட நியாயமாக நடக்கும் தேர்தல்கள், சில அடிப்படையான அரசியல் உரிமைகள் ஆகியவற்றின் மூலம் வரையறை செய்யப்படுகிறது. ஜனநாயகமானது சமுதாய முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்கிறதா என்பதைப் பற்றியெல்லாம் அவ்வளவாக அக்கறை இல்லை.

அங்கீகரிப்புக்கு சோசலிஸம் கட்டுப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றன. இது முற்றிலும் ஒரு முரண்பாடானதாக இருக்கிறது. சோசலிஸம் என்றாலே சொத்துக்களை சமூகமயமாக்குவதுதான். இது ஒன்றும் சொத்துரிமைகளுக்கு எந்த மரியாதையையும் அளிக்கவில்லை.

மிதவாத விஷக்கிருமிக்கு வேறு பரிமாணங்களும் உள்ளன. அந்தக் கிருமி உலக அளவிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது ஏகாதிபத்தியத்தால் ஆதிகம் செய்யப்படுவதால் உலக நிதிமுறைக்குள் செயல்படுவதைத் தவிர அதற்கு மாற்றுவழி இல்லை, அதனுடன் நாம் ஒரு தரப்பாக இணக்கமாகப் போயாக வேண்டியுள்ளது. அத்தகைய நிலைமை, மிதவாத விஷக்கிருமியினுடைய செயல்பாட்டின் ஒரு பகுதியாகும். இப்படிச் செயல்படுவது, சமுதாய அடித்தளம் குறித்து விட்டுக் கொடுத்தலாகும்; இந்தியாவின் சமுதாயம் சார்ந்த விட்டுக்கொடுத்தலானது இன்று அமெரிக்காவின் மூலதனக் குவிப்புக்கு தேவையானதாகும். ஆனால் இந்தியாவில் வளர்ச்சிக்கான தேவைகளுக்கு அமெரிக்காவின் விட்டுக்கொடுத்தல் இல்லை. இப்போது இதுவும்கூட, இடதுசாரி சக்திகள் விரட்டியடிக்க வேண்டியதொரு விஷயமாகும்.

**கேள்வி:** பல ஆண்டுகளாக நீங்கள் ஒரு விஷயத்தை சொல்லிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்; அது என்னவெனில், முதலாளித்துவம் வீழ்ச்சிப்பாதையில் உள்ளது; இதற்கான அறிகுறிகளாக சொத்துக்குவிப்பு, மக்களுடைய உற்பத்தித்திறன்கள் இழப்பு, சுற்றுப்புறச் சூழல் அழிவு ஆகியவை உள்ளன என்பதுதான். ஆனால் உண்மை நிலவரமோ இப்போதும் முதலாளித்துவம் மேலாதிக்கத்தில் உள்ளது என்பதுதான். ஆகவே, இந்த மேலாதிக்கச் சூழ்நிலைமையிலிருந்து மக்களை மையமாகக் கொண்ட சோசலிஸத்திற்கான உந்துசக்தி வருவதை எப்படி பார்க்கிறீர்கள்?

**பதில்:** நாம் இரண்டாம் பாண்டுங் மாநாடு நடைபெறுவதற்கான சாத்தியப் பாட்டை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன். இதில் நான் நம்பிக்கையுள்ளவனாக இருக்கிறேன். அதாவது, பணக்கார நாடுகளுக்கு எதிராக ஏழை மற்றும் வளரும் நாடுகள் பெரும்பலானவற்றின் ஒரு பொதுவான முன்னணி, ஒரு கூட்டணி, ஒரு நெருக்கம், ஒரு இணைப்புக்கான சாத்தியப்பாடு குறித்து நம்பிக்கை உள்ளவனாக இருக்கிறேன். இத்தகையதொரு கூட்டின் உள்ளடக்கமானது கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.

முதலாவதாக, இது (இந்த உத்தேசக் கூட்டணி) தற்போதைய உலக நிதிமுறையிலிருந்து சாத்தியமான அளவிற்கு வெளியேறவேண்டும். இதைச் செய்வதற்கு முடியக்கூடியவைகளாக சில நாடுகள் இருக்கும். இதற்கு சீனா ஒரு உதாரணமாக உள்ளது. மலேசியாவும் கூட ஒரு உதாரணம் தான். ஒருவேளை இது, மற்ற நாடுகளும் இதே திசை வழியில் செல்வதற்கு அந்நாடுகளுக்கு ஊக்கமளிக்கும்.

இரண்டாவதாக, இந்நாடுகள், வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி என்ற நோக்கிலிருந்து விலகி உள்நாட்டிற்குள் மக்களை மையமாகக் கொண்ட சொந்தச் சந்தைக்கு திரும்புகின்ற வகையில் தங்களுடைய உள்நாட்டு வளர்ச்சிக்கான கொள்கைகளை மாற்றம் காண்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். சீனா, இந்தியா போன்ற பெரும் நாடுகளுக்கு இது எளிதாகும். சீனா, உலகச்சந்தை குறித்த நியதிகளிலிருந்து வெளியேறி ஏற்கெனவே இதைக் (கொள்கை மாற்றத்தை) செய்து கொண்டிருக்கிறது. இதெல்லாம் (கொள்கை மாற்றத்திற்கான) அடையாளங்களாகும். இந்தியாவும் இதைச் செய்ய முடியும். ஆனால், அது, இதற்கு எதிரான நிலைப்பாட்டில் தான் உள்ளது. சீனா 6-க்கும் 10-க்கும் இடைப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்களைக் கொண்டுள்ளது. அவை மிகவும் உரிய முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டவையாக உள்ளன; இந்தியாவோ ஒரு 500 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கு பழுதடைந்த பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலைமையில் அந்த 500 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் முறைப்-

**வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி என்ற நோக்கிலிருந்து விலகி உள்நாட்டிற்குள் மக்களை மையமாகக் கொண்ட சொந்தச் சந்தைக்கு திரும்புகின்ற வகையில் தங்களுடைய உள்நாட்டு வளர்ச்சிக்கான கொள்கைகளை மாற்றம் காண்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.**



படுத்தப்பட்டதாதாகவும் சர்வதேசக் கம்பெனிகளுக்கு திறந்துவிடப்பட்டவையாகவும் இருக்கும். மற்ற நாடுகளோ இந்த 2 நாடுகளைப் போல் பெரிய நாடுகளல்ல. அந்த நாடுகள் பணக்கார நாடுகளின் சந்தை மீது முழுக்கவனம் செலுத்துவதற்குப் பதிலாகப் பிராந்திய ஒத்துழைப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். தெற்கு ஆசியாவில் பிராந்திய ஒத்துழைப்பு அவ்வளவு எளிதானதல்ல. ஏனென்றால் உங்களுடைய இந்தியா மிகப் பெரியநாடு; மற்ற நாடுகளெல்லாம் சின்ன நாடுகள்தான். எனவே, தெற்கு ஆசியப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு துணை ஏகாதிபத்திய நாடு என்ற அச்சம் அச்சின்ன நாடுகளுக்கு ஏற்படுவது நியாயமானதுதான். ஆனால், சீனா, இந்தியா, தெற்காசியா, தென்கிழக்காசியா ஆகியவற்றுடனான ஆசியாவை எடுத்துக்கொண்டால் கூடுதலான முறையில் சமப்படுத்தப்பட்ட நிலைமையுடன் கூடிய ஒரு சித்திரம் கிடைக்கும்; இதில் நியாயமான வர்த்தக, பொருளாதார ஒத்துழைப்புக்கான வாய்ப்பு கிடைக்கும். ஆப்பிரிக்கா, தென்னமெரிக்காவைச் சேர்ந்த முக்கியமான நாடுகளிலிருந்து வரும் இத்தகைய நடவடிக்கையைத்தான் 'இரண்டாம் பாண்டுங்' என்று அழைக்க நான் விரும்பு-கிறேன்.

*சீனா, இந்தியா, பிரேசில் ஆகியவை தாங்களாகவே தங்களுக்கான தொழில் நுட்பங்களை வளர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமையில் உள்ளன. இது, 1955-ஆம் ஆண்டின் முதல் பாண்டுங் மாநாட்டின்போது இருந்த நிலைமையிலிருந்து பெரும் வித்தியாசமானதாகும்.*

எனினும் இது, 1955-ல் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைக் கொண்டு நடத்தப்பட்ட முதல் பாண்டுங் மாநாட்டிலிருந்து வேறுபட்டதாவே இருக்கும். இப்போது கவனமெல்லாம் தொழில் நுட்பம் போன்ற பிரச்சினைகள் மீது இருக்-கலாம். இந்த நாடுகள் குறிப்பாக சீனா, இந்தியா, பிரேசில் ஆகியவை தாங்களாகவே தங்களுக்கான தொழில் நுட்பங்களை வளர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமையில் உள்ளன. இது, 1955-ஆம் ஆண்டின் முதல் பாண்டுங் மாநாட்டின்போது இருந்த நிலைமையிலிருந்து பெரும் வித்தியாசமானதாகும்.

ஏனெனில், இந்த நாடுகள் அப்போது எந்தப் பெரிய தொழில்களையும் கொண்டிருக்கவில்லை. இவற்றின் தொழில் நுட்ப மற்றும் விஞ்ஞான அறிவின் மட்டம் மிகத் தாழ்வாக இருந்தது. ஆகவே, அந்த மாநாட்டின் லட்சியங்கள் மிக உயர்வாக இருந்தபோதிலும் இந்த நாடுகள், தங்களுக்கான தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. இதன் பொருட்டு மேற்கத்திய நாடுகளின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படவும் வேண்டியிருந்தது. இந்நாடுகள் தொழில் நுட்பங்களைக் கிரகித்துப் புரிந்துகொள்வதற்கான முன் முயற்சிகளை 'உங்டாட்' எடுத்தது, இதில் சில நாடுகள் ஆதாயமுமடைந்தன.

ஆனால் இப்போது நிலைமையோ வித்தியாசமானதாக உள்ளது. ஏனெனில் பணக்கார நாடுகளின் தொழில் நுட்ப ஏகபோகம் இப்போது ஏழை மற்றும் வளரும் நாடுகளால் எதிர்கொள்ளப்பட முடிகிறது. எனவே, உலக வர்த்தக அமைப்பானது (World Trade Organisation - WTO) அறிவுச் சொத்து உரிமைகள் குறித்த வர்த்தக உடன்பாடு (Agreement on Trade Related Aspects of Intellutual Property Right - TRIPS) மூலம் பணக்கார நாடுகளால் அவைகளின் ஏகபோகத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டு-வருகிறது; இது ஆச்சரியம் அளிக்கக்கூடியது அல்ல. இந்த ஏகபோகத்தைத் தலைகீழாக மாற்றுவதற்குச் சீனா, தனது நிர்வாக ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நடைமுறையில் சரியான பாதையில் செல்கிறது என்று நான் நினைக்கிறேன். இதனால் தான் அறிவுச் சொத்துரிமையைச் சீனா பாதுகாக்கவில்லை என்று அதற்கு எதிரான (பணக்கார நாடுகளின்) கண்டனக் குரல்களை நீங்கள் கேட்கிறீர்கள். இந்தியாவும் அந்த வழியில் (சீனா வழியில்) செல்ல முடியும்; ஆனால், இது அப்படிச் செய்வதில்லை. பெங்களூரை எடுத்துக் கொள்ளுங்கள். அந்தப் பெருநகரம் வேலைகள் உற்பத்தி

நகரமாகத் (Services Power House) தான் உள்ளது. இதில் வருந்தத்தக்கது என்னவெனில் அந்நகரம் இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவ முடுக்கிவிடப்படவில்லை; ஆனால், சர்வதேச கம்பெனிகளின் மற்றும் பெரும் நிறுவனங்களின் பிரதான லாபத்திற்காகவும் அவற்றின் ஏகபோகக் குத்தகைக்காகவும்தான் முடுக்கிவிடப்பட்டுள்ளது. அதுவும் இது, மிக உயர்ந்த கல்வியைக் கற்ற இந்தியத் தொழில்நுட்ப வல்லுநர்களால் மிகக்குறைந்த ஊதியத்தில் செய்யப்படுகிறது.

எனவே, இரண்டாம் பாண்டுங் மாநாடு என்பது அரசியல் மட்டத்தில் கூட மிக வித்தியாசமானதாகத் திட்டமிடப்பட வேண்டும். முதல் பாண்டுங் மாநாடானது நாடுகள் மற்றும் அவற்றின் மக்களது பிரதிநிதிகளின் கூட்டமாக இருந்தது; ஏனெனில் அதில் கலந்துகொண்ட சீனா அப்போதுதான் புரட்சியை நடத்தி முடித்துவிட்டு வந்திருந்தது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட மற்ற நாடுகளான இந்தியா, இந்தோனேசிஷியா, எகிப்து போன்றவை புதிய சுதந்திர நாடுகளாக இருந்தன. ஆகையினால் பெருமளவிற்கு இந்நாடுகளின் அரசாங்கங்கள், இந்நாடுகளது மக்களின் பார்வையில் நியாயமானவையாக இருந்தன. மேலும் அந்த அரசாங்கங்களிடம் ஒரு முற்போக்கான தேசியப் பார்வையும் இருந்தது. ஆனால் இப்போது நாம், இந்நாடுகளில் மிக அதிகமானவற்றில் தரகு முதலாளித்துமாகவும் உலக நிதிமுறையுடன் நெருக்கம் கொண்டதன் மூலம் ஆதாயம் பெறக்கூடியவர்களாகவும் உள்ள ஆளும் வர்க்கங்களையே நாம் எதிர்கொள்கிறோம். எனவே அவை எந்த நியாயமான உரிமையும் கொண்டவையல்ல; 2-வது பாண்டுங் மாநாடு மக்களின் (பாண்டுங்) மாநாடாக இருக்கவேண்டும். மக்களை முற்போக்கான கொள்கைக்காக அணிதிரட்டுவது நிகழுமானால், சில அரசாங்கங்கள் அந்த வழியில் (முற்போக்கானவையாக) மாறும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதனால் இதன் அர்த்தம் இந்த மாநாடு இடது சாரி சக்திகளின் பாண்டுங் மாநாடாக இருக்க வேண்டும் என்பதாகும். இது குறித்து வெளிப்படையாகக் கூறுவதானால் இடதுசாரி சக்திகள், இப்போது செயல்படுவதைப் போல் அதாவது முதலாளித்துவத்திற்கு மாற்று இல்லை என்பது போல் செயல்பட முடியாது. இதில் நான் என்ன சொல்ல முயற்சிக்கிறேன் என்றால் "சோசலிசத்திற்கு மாற்று எதுவும் இல்லை" என்ற செய்தி நீண்டகால நோக்கில் தெளிவாக்கப்பட வேண்டும் என்பதுதான். இங்குதான் சர்வதேசிய வாதத்தின் முக்கியத்துவம் வருகிறது.

ஒரு புதிய சர்வதேசிய வாதம் செயல்முறைக்கு வராவிட்டால், அரசியல் ரீதியான இஸ்லாம், அரசியல் ரீதியான இந்துமதம், அரசியல் ரீதியான இனவாதம் மற்றும் இதுபோன்றவை உதயமாகும்; இதனால் இன்னும் அதிகமான நெருக்கடி நிலைமையை நாம் எதிர்கொள்ள நேரிடும். அப்படியொரு நிலைமை ஏற்பட்டால் அது மிகப்பெரும் அபாயமாக இருக்கும்; ஏனெனில், ஆட்சி அதிகார அடித்தளத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்டால் இத்தகைய பொய்த்தோற்றங்களால் (அரசியல் ரீதியான இஸ்லாம், அரசியல் ரீதியான இந்துத்துவம் போன்றவைகளால்) ஏமாற்றப்படுவார்கள். இத்தகையதொரு நிலைமை அரசியல் ரீதியான இஸ்லாம், அரசியல் ரீதியான இந்துத்துவம் போன்றவை "பயங்கரவாதம்" எனப்படும் நிலைமைக்கு செல்லாத பட்சத்தில் அவை ஏகாதிபத்தியத்திற்கும் முற்றிலும் ஏற்படையதே என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

**கேள்வி:** உலக சமுதாய பொதுமன்றம் (World Social) தனது 9-வது ஆண்டிற்குள் நுழைகிறது. அது பெலமில் கூட்டப்படவிருக்கிறது. நீங்கள் உலக சமுதாய பொதுமன்றம் குறித்து விமர்சன ரீதியான கருத்தை கொண்டுள்ளீர்கள். அதன் மீதும் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் உலக சமுதாய பொதுமன்றம் ஏத்தகைய பங்கை ஆற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்பது குறித்தும் உங்களுடைய கருத்து என்ன?

முதலாளித்துவத்திற்கு எதிர்ப்பு என்பது நிருபிக்கப்பட்ட உண்மையாகும்; இந்த எதிர்ப்பு, உலகம் முழுவதும் ஏன் துண்டு துண்டுப்பகுதிகளில் கூட தனித்-

**ஒரு புதிய சர்வதேசிய வாதம் செயல்முறைக்கு வராவிட்டால், அரசியல் ரீதியான இஸ்லாம், அரசியல் ரீதியான இந்துமதம், அரசியல் ரீதியான இனவாதம் மற்றும் இதுபோன்றவை உதயமாகும்; இதனால் இன்னும் அதிகமான நெருக்கடி நிலைமையை நாம் எதிர்கொள்ள நேரிடும்.**

தனியானதாகவும் அமைப்பு ரீதியாக ஆக்கப்படாமலும் இருந்தாலும்கூட அந்த எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. இதனை கவனத்தில் கொண்டு சமுதாய மாற்றத்திற்கான நடவடிக்கைகளை வலுப்படுத்துவது பற்றி எப்படிப் பார்க்கிறீர்கள்? அதாவது, நிறுவன ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் இந்த நடவடிக்கைகளை ஒரு புதிய சர்வதேசியம் என்ற கண்ணோட்டத்தில் - இவற்றை நீங்கள் ஏதோ ஒரு இடத்தில் 5-வது அகிலம் என்று அழைத்தீர்கள் - எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** இந்தக் கேள்விகூட, உலக சமுதாயப் பொதுமன்றம் குறித்த பிரச்சினை பற்றியதுதான். இருளடைந்த ஆண்டுகள் மிகக் குறுகியதாக இருந்தது என்று நான் நினைக்கிறேன். சுதந்திரமாக இருந்த சோசலிஸத்தில் ஏற்பட்ட முறிவு, முதலாளித்துவப் பாதையில் சீனாவின் பயணம் ஆகியவை 1990ஆம் ஆண்டுகளின் முதல்பாதியில் நிகழ்ந்தன. பிறகு எதிர்ப்பு இயக்கங்களும் கண்டன இயக்கங்களும் மீண்டும் தொடங்கின. பணக்கார நாடுகளிலும் ஏழை நாடுகளிலும் மேற்கத்திய கிழக்கத்திய நாடுகளிலும் உலகின் ஒவ்வொரு நாடுகளிலும் இந்த இயக்கங்கள் நிகழ்ந்தன.

நவீன தாராளம் எனப்பட்டதன் - இது உண்மையில் நவீன தாராளவாதமல்ல, அதிதீவிர பிற்போக்கு - பின்விளைவுகளாக இந்த இயக்கங்கள் நிகழ்ந்தன.

மக்களை ஓட்டாண்டிகளாக்குவது அதிகரித்துக் கொண்டிருந்தாலும் சரி சமத்துவமின்மை பெருகிக் கொண்டிருந்தாலும் சரி வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருந்தாலும் சரி தடுமாற்றமான நிலைமை பெருகிக்கொண்டிருந்தாலும் சரி ஒரு விஷயம் இயல்பானதாகவே இருந்தது; அது என்னவெனில், பொதுமக்கள் தாங்களாகவே அணிதிரட்டிக் கொள்ளவும் எதிர்ப்பு தெரிவிக்கவும் கண்டன இயக்கம் நடத்தவும் தொடங்கினார்கள் என்பதுதான்.

இன்னொரு விஷயம்கூட முற்றிலும் இயல்பானதாக நிகழ்ந்தது. அது என்னவெனில், அவர்களுடைய எதிர்ப்பும் அதனுடைய தொடக்கமும் சிதறுண்டு போனவையாக இருந்தன என்பதுதான்; இதற்குக் காரணம் என்னவெனில் ஒவ்வொரு வரும் அது ஆணானாலும் சரி பெண்ணானாலும் சரி எதிர் கொள்கிற உடனடிப் பிரச்சினை மீது ஒவ்வொருவரும் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். இரண்டாவதாக, அவர்கள் அடிப்படையில் தற்காத்துக் கொள்பவர்களாக இருக்கிறார்கள்; அதாவது அவர்கள் ஏற்கெனவே முன்பு முயற்சித்துப் பெற்றவைகளை பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறார்கள்; அப்படி அவர்கள் பாதுகாத்துக் கொள்ள விரும்புவது பணக்கார நாடுகளில் சமூக ஜனநாயக நல அரசுகளாகும். ஏழை மற்றும் வளரும் நாடுகளில் நிலச்சீர்திருத்-தம் அல்லது கல்விக்கான உரிமை, இலவச பொது மருத்துவம் இலவசக் கல்வி அல்லது தனியார் மயமாக்கலுக்கு எதிர்ப்பு மற்றும் இவை போன்றவைகளாகும்.

இந்நிலைமையில்தான், உலக சமுதாய பொதுமன்றமானது, கண்டன இயக்கம், எதிர்ப்பு இயக்கம் ஆகியவற்றின் விளைவாக இயல்பாகவே ஒட்டுமொத்த இயக்கங்கள் அனைத்திற்குமான ஒரு பொதுமன்றமாக உருவானது. இதுபற்றி நான் எதிர்மறையான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. நான் இந்தப் பொதுமன்றம் குறித்து நான் நேர்மறையான கருத்தையே கொண்டுள்ளேன்; இந்த உலக சமுதாய பொதுமன்றத்திற்கு முன்பு இருந்ததும் இதில் முக்கிய பங்கு வகித்ததுமான மாற்றுத் திட்டத்திற்கான உலகப் பொதுமன்றத்தை (World Forum for Alternatives) சேர்ந்த நாங்கள் தொடர்ந்து அப்படியே செயல்படுவோம் என்கிற அளவிற்கு உலக சமுதாயப் பொதுமன்றம் குறித்து நாங்கள் நேர்மறையான கருத்தே கொண்டுள்ளோம். ஆனால், இது (உலக சமுதாய பொதுமன்றத்தின் செயல்பாடு) போதுமானதல்ல என்றும் நம் முன்புள்ள சவால் சமூக இயக்கங்களில் பலர் கருதுவதைக் காட்டிலும் மிக்க கடுமையாக உள்ளன என்றும் கருதுகிறோம். அந்த இயக்கங்கள் தங்களுடைய தனித்தனியான எதிர்ப்பு மூலம் அவை, எதிரெதிர் சக்திகளின் சமநிலையை மாற்றமுடியும் என்று நம்புகின்றன.

> **இந்நிலைமையில்தான், உலக சமுதாய பொதுமன்றமானது, கண்டன இயக்கம், எதிர்ப்பு இயக்கம் ஆகியவற்றின் விளைவாக இயல்பாகவே ஒட்டுமொத்த இயக்கங்கள் அனைத்திற்குமான ஒரு பொதுமன்றமாக உருவானது.**

யாழ்ப்பாணம்

இது தவறு என்று நான் கருதுகிறேன். தனித்தனியான இயக்கங்கள், சில பொதுவான காரணங்களின் அடிப்படையில் ஒரு பொதுவான செயல்திட்டத்தில் (Common Platform) இணைந்து வலுப்படாவிட்டால், எதிரெதிர் சக்திகளின் சமநிலைமையை மாற்ற முடியாது. மாற்றுத் திட்டத்திற்கான உலகப் பொதுமன்றத்தினராகிய நாங்கள் இதை (தனித்தனி இயக்கங்களின் இணைப்பை) வேற்றுமையில் ஒற்றுமை (Convergence with Diversity) என்று அழைக்கிறோம்.

அதாவது தனித்தனியாக சிதறுண்ட இயக்கங்களிடையே மட்டுமன்றி அவற்றுடன் இயங்கிக் கொண்டிருக்கும் அரசியல் சக்திகளையும் தத்துவார்த்தங்களையும் எதிர்காலத்தைப் பற்றி அந்த அரசியல் சக்திகள் கொண்டிருக்கும் தொலைநோக்குப் பார்வையையும் கூட அங்கீகரிப்பதாகும்; இது (அந்த அணுகுமுறை) ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகவும் மதிப்பளிக்கப்பட வேண்டியதாகவும் இருக்கிறது. ஏனெனில், ஒரு முன்னணிக்கட்சி மட்டுமே சமுதாய மாற்றத்திற்கான தொடர் நிகழ்ச்சிப் போக்குகள் போன்றவற்றை உருவாக்கக்கூடிய நிலைமையில் நாம் இல்லை. வேற்றுமையில் ஒற்றுமையை உருவாக்குவது என்பது கஷ்டமானதாகும்; ஆனால் அது சாதிக்கப்படவில்லை என்றால், எதிரெதிர் சக்திகளின் சமநிலைமையானது ஆளும் வர்க்கங்களுக்கு சாதகமாக மாறிவிடும் என்று நான் நினைக்கிறேன்.

**கேள்வி:** இந்தியாவில் ஒரு விதப் போக்கு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது; அது என்னவெனில் மதமானது, அரசியலில் ஒரு கெடுபிடியான மற்றும் அடாவடித்தனமான பங்கை அதிக அளவிலேயே செய்து கொண்டிருக்கிறது; அடிக்கடி அரசியலின் போக்கை தீர்மானிப்பதாகவும் உள்ளது. ஆகவே, வலது சாரிப்பாதையை நோக்கியும் பெரும் சமூக மோதல்களையும் வன்முறைகளையும் நோக்கியும் சிதறுண்டு போகும் நிலைமையை நோக்கியும் நாடு செல்லும் போக்கு அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான்; இதைத்தான் இப்போது நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மேலும் நாம் இன்னொன்றையும் பார்த்து கொண்டிருக்கிறோம்; அது என்னவெனில் மதரீதியான வலதுசாரி சக்திகளுக்கும் பொருளாதார ரீதியான உலகமயமாக்கல் ஆதரவு சக்தி களுக்குமிடையே அவைகளின் தேவைகளுக்கு ஏற்ப இணக்கம் ஏற்பட்டுள்ளது என்பதுதான் அது. இந்தப் போக்கில் தலையிட்டு ஒரு சில ஆக்கப்பூர்வமான அரசியல் விளைவுகளைக் கொண்டு வருவதற்கான ஜனநாயக அரசியல் சக்திகளுக்கான சாத்தியப்பாடுகளை நீங்கள் எங்கே பார்க்கிறீர்கள்?



**பதில்:** இந்தக் கேள்வி மிகக் கஷ்டமானதாகும் அரசியல் ரீதியான இஸ்லாம், அரசியல் ரீதியான இந்துயிஸம் ஆகியவை பற்றிய எனது முடிவானது அவற்றிற்கு எதிர்மறையானது. இந்த சக்திகள் மிகப் பிற்போக்கானவை. இதற்குக் காரணம் அவை மதங்களாக இருப்பதால் அல்ல; இதற்கு காரணம் அவைகளின் உள்ளடக்கம்தான். இந்தச் சக்திகள், ஆளும் வர்க்கங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

அரசியல் ரீதியான இஸ்லாமும் அரசியல் ரீதியான இந்துயிஸமும் ஆளும் வர்க்கங்களின் இயல்பான உற்பத்தியாக இருக்கின்றன என்று நான் நினைக்கவில்லை. இடதுசாரி சக்திகளைத் தவிர்ப்பதற்கே இந்த சக்திகள் (அரசியல் ரீதியான இஸ்லாம், அரசியல் ரீதியான இந்துயிஸம்) அணி திரட்டப்பட்டு இயக்குவிக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் முற்போக்கான வர்க்கங்களிடம் இடதுசாரி சக்திகள் ஊடுருவுவதைத் தடுக்கின்ற ஒரு கவரை உருவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இது ஒரு போலித்தனமானதாகும்.

**வேற்றுமையில் ஒற்றுமையை உருவாக்குவது என்பது கஷ்டமானதாகும்; ஆனால் அது சாதிக்கப்படவில்லை என்றால், எதிரெதிர் சக்திகளின் சமநிலைமையானது ஆளும் வர்க்கங்களுக்கு சாதகமாக மாறிவிடும் என்று நான் நினைக்கிறேன்.**

இந்தச் சக்திகளின் செயல்திட்டங்களை ஆழ்ந்து பார்த்தால் இந்தச் சக்திகள் சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் பெரும்பாலும் பிற்போக்கானவை என்பது மட்டுமல்ல பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பிற்போக்கானவை. இந்தச் சக்திகள், இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் முதலாளித்துவத்தையும் இருந்து கொண்டிருக்கும் ஏகாதிபத்தியத்தையும் நடைமுறை ரீதியில் ஏற்றுக் கொள்கின்றன; இந்தச் சக்திகள் உள்நாட்டில் ஒரு எதிரியை உருவாக்குவதன் மூலம் அவற்றுக்கு (முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு) அடிபணிவதற்கு ஈடுகட்டிக் கொள்கின்றன. அந்த எதிரி அந்தந்த இடத்திற்கேற்ப முஸ்லிமாக இருக்கலாம் இந்துவாக இருக்கலாம் கிறிஸ்தவர்களாகவும் இருக்கலாம். இது, உண்மையிலேயே அபாயகரமானதாகும்.

இப்போது நாம், இந்த யதார்த்தமான நிலைமையை எப்படி கையாளப் போகிறோம்? இது, இடதுசாரி சக்திகளுக்கு எளிதானதல்ல. இது உண்மையிலேயே ஒரு சவாலாகும். இதில் இடதுசாரி சக்திகள் வெறுமென, தங்களுடைய கொள்கை அளவில் மட்டும் இருந்துவிட முடியாது. (இந்தப் பிற்போக்கு சக்திகளுக்கு) மாற்றுச் சக்தி, மதத்திடமிருந்து தன்னை துண்டித்துக்கொள்ளும் ஒரு மத சார்பற்ற அரசுதான் என்பது போதுமானதல்ல. அந்தப் பிற்போக்குச் சக்திகள் முற்போக்கான வர்க்கங்களிடம் பெற்றுள்ள செல்வாக்கு எப்படி முறியடிக்கப்பட முடியும் என்பதை இடதுசாரி சக்திகள் வெளிக்கொணர வேண்டும்.

இடதுசாரி சக்திகள், மக்களின் உண்மையான பொருளாதார நலன்களையும் சமூக நலன்களையும் வெறும் பேச்சுத்திறமையால் மட்டுமன்றி நடவடிக்கைகளிலும் நடவடிக்கைகள் மூலமாகவும் காக்க வேண்டும்; இதன் பொருட்டு அவை பெருந்திரளான மக்களிடம் செல்வாக்கு பெற வேண்டும் இது ஒன்றுதான், மக்களிடமிருந்து மையவாதிகளையும் (Centrist) பிற்போக்குச் சக்திகளையும் ஓரங்கட்டுவதற்கான ஒரே வழியாகும். முற்போக்கான வர்க்கங்களுக்குள் இடதுசாரி சக்திகள், செயல்படாத வரையிலும் அவர்களுடைய பெரும்பாலான ஆய்வுகளும் வேலைத்திட்டங்களும் காகிதத்திலும் அல்லது அரசியல் சவடால் பேச்சாகவும் இருக்கும் வரையிலும் அவை (இடதுசாரி சக்திகள்) தொடர்ந்து விளிம்போர சக்திகளாகவே (Marginal Forces) இருக்கும் நிலைமை தொடரும். அதற்கு மேல் சொல்வதற்கு எதுவுமே இல்லை.


அமெரிக்கா, ஐரோப்பா போன்ற வெவ்வேறான கூட்டாளிகளை உடனடி உதாரணமாக எடுத்துக் கொண்டால், தொழில் நுட்பப் புரட்சியினுடைய இறுதி விளைவு (குறிப்பாக தொலைத் தொடர்பாடல்கள் சார்ந்தவை) ஒரு புறத்தில் அந்தப் புரட்சியினுடைய விசேடித்த விளைவுகளும் அந்த வெவ்வேறான கூட்டாளிகளினுடைய ஒப்பீட்டளவிலான வெற்றியடைவுகள் மீதான ஏனைய தொழில் நுட்பங்கள் மறுபுறமாக நாங்கள் வேறுபடுத்தி விளங்க வேண்டும்.

(தொழில் நுட்பப் புரட்சியினுடைய விளைவுகள் தொடர்பில், முதலாளியத்தின் ஆழந்த கட்டமைப்புசார் நெருக்கடிகளின் ஒவ்வொரு காலப்பகுதியும் கைத்தொழிற் புரட்சியினுடைய ஒரு காலப்பகுதியாக இருந்து வந்திருக்கிறது. உதாரணமாக 1873 தொடக்கம் 1896 வரைக்குமான காலப்பகுதியில் நிகழ்ந்த கட்டமைப்புசார் நெருக்கடியை எடுத்துக் கொள்ளலாம். இதுவே இரண்டாவது கைத்தொழிற் புரட்சிக் காலமாக இருந்தது. (முதலாவது கைத்தொழிற்புரட்சி பத்தொன்பதாம் நூற்றாண்டினுடைய ஆரம்பப்பகுதியில் இடம் பெற்றது.) இந்த இரண்டாவது கைத்தொழிற் புரட்சியானது மின்சாரம், பெற்றோலியம், தானியங்கி இயந்திரசாதனங்கள் மற்றும் ஆகாய விமானங்கள் ஆகியனவற்றுடன் சம்பந்தமானது. இருபதாம் நூற்றாண்டின் கைத்தொழில் அபிவிருத்திக்கு அடிகோலிய தொழில் நுட்பங்கள்தான் இவை. டொலரின் மிதக்கும் பாங்கு, பிரிட்டன் வூட்ஸ் ஆகியன முடிவுக்கு வருதலுடன் 1971இல் தற்போதைய நெருக்கடி ஆரம்பமானது.

-சமீர் அமின்-

# உலக முதலாளித்துவ அமைப்பின் சமத்துவமற்ற விருத்தி

## சமீர்அமின் கோட்பாடு பற்றிய ஓர் அறிமுகம்



**க. சண்முகலிங்கம்**

சார்புக் கோட்பாடு (Dependency Theory) அந்தரே குந்தர் பிராங்கினால் தொடக்கி வைக்கப்பட்டது. இக்கோட்பாட்டை தனித்துவமான தனது பங்களிப்பின் மூலம் மேலும் வளர்த்துச் சென்றவர்களில் சமீர் அமின் (Samir Amin) முக்கியமானவர். இவர் உலகளாவிய முறையில் மூலதனத்தின் திரட்சி (Accumulation on a World Scale) என்னும் நூலை 1974ம் ஆண்டில் பிரசுரித்தார். இதனைத் தொடர்ந்து 'சமத்துவமற்ற விருத்தி' (Unequal Development) என்னும் நூலை 1976ல் பிரசுரித்தார். அந்தரே குந்தர் பிராங் போன்று இவரும் பல நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார். இவர்கள் இருவரதும் எழுத்துக்களால் சார்புக் கோட்பாடு விவாதம் 1970க்களில் முக்கிய அலையாக வெளிப்படலாயிற்று.

### மையமும், சார்பு மண்டலமும்

மையம் (Centre) சார்பு மண்டலம் (Periphery) என்ற இரண்டு எண்ணக்கருக்களை சார்புக் கோட்பாடு அறிமுகம் செய்தது. இந்த இரண்டின் இணைப்பாக அமையும் உலக முறைமை (World System) ஒன்று உருவாகி இருப்பதாக இக் கோட்பாடு விளக்கம் தந்தது. ஆய்வுக்கான அலகாக தனித்தனி நாடுகளைக் கொள்வதை விடுத்து முழு உலகையும் ஒரு அலகாகக் கொண்டு நோக்கும் உலக முறைமை என்ற கருத்து சார்புக் கோட்பாட்டின் சிறப்பு அம்சமாகும். உலக முறைமைக்குள் இரண்டு மாதிரிகளை (Models) சமீர் அமின் காண்கிறார். அவை:

i) சுயத்துவம் உடைய மையப் பொருளாதாரம் (Auto Centric Economy)

ii) சார்புப் பொருளாதாரம் (Peripheral Economy)

இந்த இரு வேறு போக்குகளின் வெளிப்பாடே உலக மட்டத்தில் நிகழும் சுரண்டலும் மூலதனத் திரட்சியும் (Accumulation) அதன் விளைவான சமத்துமற்ற விருத்தியும் என்பது சமீர் அமின் முடிவு.

### சுயத்துவமுடைய மையப் பொருளாதாரமும் சார்ப்புப் பொருளாதாரமும்

உற்பத்தி சாதனங்களான மூலதனப் பொருட்கள் மக்களின் நுகர்வுக்கான நுகர்வுப் பொருட்கள் என்ற இரண்டையும் உற்பத்தி செய்வன மையப் பொருளாதார நாடுகள். இந்நாடுகளில் இவ்விரு துறைகளும் ஒன்றோடொன்று பிணைப்புற்றும் ஒன்றுக்கு ஒன்று ஆதரவாகவும் செயற்படும். கைத்தொழில், விவசாயம் என்ற இரு துறைகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படுகின்றன. பொருளாதார வளர்ச்சி, மாற்றம், ஏற்ற இறக்கங்கள் என்பன சுயத்துவம் உடைய நாடுகளில் உள்ளிருந்தே எழுகின்றன. வெளிக்காரணிகள் இரண்டாம் நிலையானவை.

சார்பு நாடுகளின் பொருளாதாரம் நேர் எதிரான தன்மை

> **சார்புக் கோட்பாடு அந்தரே குந்தர் பிராங்கினால் தொடக்கி வைக்கப்பட்டது. இக்கோட்பாட்டை தனித்துவமான தனது பங்களிப்பின் மூலம் மேலும் வளர்த்துச் சென்றவர்களில் சமீர் அமின் முக்கியமானவர்.**

கொண்டது. அங்கு சுயத்துவத்திற்கு மாறாக சார்புநிலை காணப்படும். சார்பு நாடுகளின் பிரதான இயல்புகளில் ஒன்று மிகை விருத்தியுடைய ஏற்றுமதித் துறையாகும். கோப்பி, தேயிலை, கொக்கோ. வாழைப்பழம், கரும்பு ஆகிய ஏற்றுமதிப்பயிர் உற்பத்தியும் கனியப் பொருட்களின் ஏற்றுமதி சார் சுரங்கத் தொழிலும் சார் நாடுகளில் விருத்தியாயின. ஆடம்பர நுகர்வு உற்பத்தி துறையும் சார்பு நாடுகளில் விருத்தி பெற்றிருந்தது. இயந்திரங்கள், இடைத்தரப் பொருட்கள் போன்றன மூலதனப் பொருட்களின் உற்பத்தி சார்பு நாடுகளில் வளர்ச்சி பெறவில்லை. நுகர்வுப் பொருட் கைத்தொழில் என்னும் மென்கைத்தொழில் ஓரளவு விருத்தி பெற்ற போதும் கனரக கைத்தொழில்கள் வளரவில்லை. தொழில்துறைகளும், விவசாயமும் பிணைப்பு உடையனவாய் வளரவில்லை. மையநாடுகளின் பொருளாதாரத்திற்கு மாறான போக்கில் சார்பு நாடுகளின் பொருளாதாரம் அமைந்தது. சமீர் அமின் முன்வைக்கும் இந்த மாதிரிகள் உலக முறைமையை விளக்குவதற்கான சிறப்பு மாதிரிகள் ஆகும்.

### உற்பத்தி முறைமைகள் (Modes of Production)

லத்தின் அமெரிக்காவில் நிலமானியம் இருப்பதாக கூறுவது பொய்ப்புனைவு. அங்கு மூலை முடுக்கெல்லாம் காணப்படுவது முதலாளித்துவம் தான் என்று கூறினார் அந்தரே குந்தர் பிராங். சமீர் அமின் இந்தக் கருத்துடன் உடன்பாடு இல்லாதவர். சார்பு நாடுகளின் பொருளாதாரம் ஒரே சமயத்தில் பல உற்பத்தி முறைமைகளை கொண்டிருக்கும் ஒரு கலவை அமைப்பு என்ற கருத்தை சமீர் அமின் கூறுகிறார். பிராங் பரிவர்த்தனை உறவுகளின் (Exchange Relations) அடிப்படையில் முதலாளித்துவத்தை விளக்கினார். அமின் கோட்பாடும் பரிவர்த்தனை உறவுகளின்படி அமைந்த விளக்கமே ஆயினும் உற்பத்தி முறை-மைகளுக்கும் இவர் முதன்மை அளிக்கிறார். மைய நாடுகளின் ஊடுருவலும் ஆதிக்கமும் சார்புப் பொருளாதாரங்களைத் திரிபுபடுத்தியுள்ளன. மிகைவிருத்தியுடைய ஏற்றுமதித் துறை (Over Developed Export Sector) என்ற வடிவில் இந்த திரிபு வெளிப்படுகிறது. வர்த்தக உறவுகள் மூலம் உலக முறைமையில் சார்பு நாடுகள் இணைக்கப்பட்டுள்ளன. சமத்துவமற்ற உறவுகள் உலக முறைமையின் அடிப்படை இயல்பாக உள்ளன.

சார்ப்பு நாடுகளில் நிலவும் உற்பத்தி முறைகளின் பன்மைத்துவம் என்னும் கருத்து அந்நாடுகளின் சமூக உருவாக்கம் பற்றிய ஆய்வுகளுக்கு வழிவகுக்கும் கருத்தாகும். சமூக உறவுகளிலும் நிலவும் பன்மைத்துவத்தையும் இதன் மூலம் இரண்டையும் தனது முதலாளித்துவ முறைக்குள் உயர்விளைதிறன், குறைந்த கூலி என்ற இரண்டையும் தனது முதலாளித்துவ முறைக்குள் இணைக்கிறது. குறைந்த கூலியை வழங்குவதற்கான முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறைகளை வைத்துக் கொள்கிறது. குறைந்த கூலிக்காக விளைதிறன் மட்டத்தையும் குறைநிலையில் வைத்திருக்கவும் கூட முனைகிறது. மாக்ஸிட் ஆய்வாளரான S.B.D.de. சில்வா இலங்கையின் தோட்ட முதலாளித்துவத்தின் இயல்பைப் பற்றி பின்வருமாறு எழுதினார்:

"தோட்டத்துறையின் தொழில்நுட்பப் பின்னடைவு உற்பத்தி விளைதிறனையும் குறைமட்டத்தில் வைத்திருக்கிறது. குறைந்த கூலியை கொடுப்பதுதான் இதன் பின்னணியில் உள்ள விடயம். வெளித்தோற்றத்தில் தெரியும் முதலாளித்துவ வடிவங்களுக்குப் பின்னே தொழில் உறவுகளில் முதலாளித்துவத்திற்கு முந்திய முறைகள் தோட்டங்களில் நடைமுறையில் உள்ளன. அடிமைத் தொழிலாளர் வகுப்பு தோட்டமுறைமையின் முக்கியமான பண்புகளில் ஒன்று 'The Political Economy Of Underdevelopment (1982) என்னும் நூல்.

மலையகம் பற்றி மட்டுமன்றி இலங்கையின் வடக்குக் கிழக்கின் உற்பத்தி முறைமைகள் அப்பகுதிகளின் சமூக உருவாக்கம் (Social Formation) பற்றிய ஆய்வுகளில் பிரயோகிக்கப்படக்கூடிய கருத்து இது என்பதை இவ் விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானது.

சார்ப்பு நாடுகளில் நிலவும் உற்பத்தி முறைகளின் பன்மைத்துவம் என்னும் கருத்து அந்நாடுகளின் சமூக உருவாக்கம் பற்றிய ஆய்வுகளுக்கு வழிவகுக்கும் கருத்தாகும்.

## சுயத்துவமான விருத்தி சாத்தியமில்லை

சார்பு நாடுகளில் சுயத்துவமான விருத்தி சாத்தியமில்லை என்ற முடிவை சமீர் அமின் அழுத்திக் கூறுகிறார். அமின், பிராங் இருவரும் இக்கருத்தில் ஒற்றுமை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஏன் சுயத்துவமான வளர்ச்சி சாத்தியமில்லை என்பதற்கு சமீர் அமின் பின்வரும் காரணங்களை எடுத்துக் கூறுகிறார்.

i) சார்பு நாடுகளின் உள்ளகக் கட்டமைப்பும் உற்பத்தி உறவுகளும் வளர்ச்சிக்குத் தடையானவை

ii) சமனற்ற சிறப்புத் தேர்ச்சி (Un equal Specialisation) சார்புப் பொருளாதாரத்தை திரிபுபடுத்தியுள்ளது.

iii) மித மிஞ்சிய சுரண்டல் (Super exploitation) வளங்களை அபகரிக்கிறது.

iv) மிகை உற்பத்தி வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

## எதிர்வாதங்கள்

ஆசியாவின் புலிகளின் வளர்ச்சியை எப்படிப் புரிந்து கொள்வது என்ற பிரச்சினை 1980க்களிலும் 1990க்களிலும் மார்க்சியர்களிடையே சுவையான விவாதங்களிற்கு இடமளித்தது. பில் வர்ரன் (Bill Warren) என்பவர் எழுதிய "ஏகாபத்தியம்: முதலாளித்துவத்தின் முன்னோடி (Imperialism: Pioneer of Capitalism) என்ற நூல் 1980ல் பிரசுரிக்கப்பட்டது. இளமையிலேயே காலமான பில் வர்ரன் சர்ச்சைக்குரிய சுவையான நூலை விட்டுச் சென்றார். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவம் பற்றி எழுதிய போது மேற்கில் தோன்றிய முதலாளித்துவம் உலகம் முழுவதையும் தன்னுள் இணைத்து முதலாளித்துவ உற்பத்தி முறைக்குள் கொண்டு வருகிறது என்று கூறினார். பில் வர்ரன் அந்தக் கருத்திற்கு புத்துருவம் கொடுத்து ஏகாபத்தியம், முதலாளித்துவத்தின் முன்னோடி என்றார். ஏகாபத்தியம் தான் குறைவிருத்திக்கு காரணம் என்ற விளக்கத்தை தலைகீழாக்கும் சுவாரசியமான வாதம் இது. சமீர் அமின் போன்றோர் ஹொங்கொங் போன்ற நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியை தங்கியிருக்கும் விருத்தி அல்லது சார்பு விருத்தி (Dependent Development) என்று கூறினார். சிலர் உலகமட்டத்தில் புதிய தொழில் பிரிப்பு நிகழ்கிறது (New International Division Of Labour) என்றனர். பீட்டர் வூஸ்லி (Peter Worsly) என்னும் மார்க்ஸிட் ஹொங்கொங் நாட்டின் உதாரணத்தைக்காட்டி சிலசந்தேகங்களை 1990ம் ஆண்டில் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்தார். அவற்றை சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

i) ஹொங்கொங்கில் முதலாளித்துவ வளர்ச்சி மேற்குநாட்டு முதலாளித்துவத்தால் எழுச்சி பெற்றதல்ல. சீனப்புரட்சியின் பின்னர் 1949ல் ஹங்காய் துணிநெசவுத் தொழிலில் முன்னணி பெற்ற இடமாக இருந்தது. ஹொங்கொங் முதலாளிகள் தங்கள் பிள்ளைகளை ஹார்வாட்டிற்கு ஒக்ஸ்போர்டிற்கும் மேற்படிப்புக்காக அனுப்பவில்லை. ஐக்கிய ராச்சியத்தின் லோவல் இன்ஸ்டி டியுட், அமெரிக்காவின் MIT ஆகியவற்றில் தொழில் நுட்பம் படிக்க அனுப்பினார்கள்.

ii) ஹொங்கொங் எல்லாருக்கும் இரண்டாம் நிலைக் கல்வி என்ற நிலையை விரைவில் எட்டியது. அந்த நாட்டின் தொழிலாளர்களை பயிற்சியற்ற உடலுழைப்பாளர் என்று கூற முடியாது.

iii) புரட்சியின் பின் சீனத் தொழிலாளி வர்க்கம் எப்படி அடங்கிப் போகும் பண்பைப் பெற்றதோ அதே போன்றே ஹொங்கொங் தொழிலாளி வர்க்கமும் தீவிர தொழிற்சங்க அரசியலைக் கைவிட்டது.

iv) இதற்கு தகுந்த சமூகக் காரணங்களும் இருக்கவே செய்தன. ஹொங்கொங்கின் பிரித்தானிய காலனித்துவம் அங்கே சமூகநலத் திட்டங்களை முழுமையாக அமுல் செய்தது. இது ஒருவகையான சர்வாதிகார சமூகநலமுறை (Authoritarian Welfarism) ஆகும். இக்காலத்தில் தைவானும், தென்கொரியாவும் ராணுவமயப்படுத்தப்பட்ட சமூகங்களாக இருந்தன.

v) ஹொங்கொங்கின் தொழிலாளர் குடும்பங்களின்

**ஆசியாவின் புலிகளின் வளர்ச்சியை எப்படிப் புரிந்து கொள்வது என்ற பிரச்சினை 1980க்களிலும் 1990க்களிலும் மார்க்சியர்களிடையே சுவையான விவாதங்களிற்கு இடமளித்தது.**

80%த்தினர் தரமான வீட்டு வசதிகளைப் பெற்றனர். உலகிலேயே மிகப் பெரிய பொதுத்துறை வீடமைப்பு திட்டத்தை ஹொங்கொங் நிறைவேற்றியது. வீட்டுத்துறை வருமானத்தின் 50% மானியமாக வழங்கப்பட்டது.

vi) ரொட்ஸ்கியின் 'அரச முதலாளித்துவம்' என்ற கருத்தை NICS தொடர்பில் கூறலாம் என்று நிகல் ஹரிஸ் (Negel Harris) வாதிடுகிறார். அரசின் நெறிப்படுத்தலில் முதலாளித்துவம் இந்நாடுகளில் வளர்கிறது.

பிட்டர் வூஸ்லியின் மேற்கூறிய கருத்துக்கள் சந்தேகங்கள் என்ற வகையில் மார்க்சிஸ்டுகள் பலரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களிற்கு உதாரணங்களாகும்.

### சமத்துவமின்மையின் புதிய வடிவங்கள்

1970க்களில் தென்கிழக்கு ஆசியாவில் ஹொங்கொங், தைவான், தென்கொரியா, சிங்கப்பூர் ஆகிய நான்கு நாடுகள் துரிதமான வர்ச்சியை அடைந்தன. இவை 'ஆசியாவின் புலிகள்' என்ற பெயரைப் பெற்றன. லத்தின் அமெரிக்காவில் பிரேசில், மெக்சிக்கோ என்ற இரு நாடுகளும் கைத்தொழில் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்திருந்தன. 'புதிதாக கைத்தொழில் வளர்ச்சியடையும் நாடுகள் (NICS) என்னும் குழு உருவாக்கம் பெற்றுக் கொண்டிருந்தது. சார்பு மண்டலத்தில் விருத்தி என்பது சாத்தியமில்லை என்று கூறிய சார்புக் கோட்பாட்டளர்கள் இந்த வளர்ச்சியை விளக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஹொங்கொங் போன்ற நாடுகளின் வளர்ச்சியை சமீர் அமின் சமத்துவமின்மையின் புதிய வடிவங்கள் என வர்ணித்தார். இதற்கு அவர் கூறிய காரணங்கள்

i) இந்த வளர்ச்சி சில விசேட சூழமைவுகளின் தற்செயல் சேர்க்கையின் விளைவு ஆகும்.

ii) இந்த வளர்ச்சி ஏனைய சார்பு நாடுகளால் பின்பற்றப்படக் கூடியதல்ல.

iii) NICS நாடுகளின் வளர்ச்சியில் வெளிப்படும் குறைகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

**ஹொங்கொங் அல்லது தைவான் என்று ஆய்வு அலகை தனித்த நாடு என்ற நிலைக்கு சுருக்குவதை சமீர் அமின் ஏற்றுக் கொள்ளவில்லை. இது தவறான முறை என்கிறார். வெறும் தோற்றங்களைக் காட்டி சாரத்தை மறைப்பது தான் இந்த முறை.**

### மார்க்சியத் திரிபு

இந்த நாடுகளின் வளர்ச்சி பற்றி பாராட்டுரை வழங்கிய பொருளியலாளரை அமின் அனுபவாதிகள் (Empricists) என்றும் அவர்களது விளக்கங்களை மார்க்கியத் திரிபு (Un Marxist) என்றும் கூறினார். இந்த ஆய்வுகளை 'புள்ளி விபர விளையாட்டு', 'மேலோட்டமானவை' 'வெறும் தோற்ற அளவிலான நிலையில் விடயங்களை அணுகும் முறை' என்ற அடைமொழிகளைக் கூறி நிராகரித்தார்.

சமீர் அமின் இவ்விதம் நிராகரிப்பது நியாயமற்றது என்றும் தோன்றுகிறது. இருந்த போதும் அவரது முறையியலின் முக்கிய அம்சங்களோடு இணைத்து நோக்கும் பொழுது அவருடைய வாதங்களில் உள் அமைந்துள்ள தர்க்கம் வெளிப்படும்.

**i) ஆய்வுக்கான அலகு (Unit of Analysis)**

ஹொங்கொங் அல்லது தைவான் என்று ஆய்வு அலகை தனித்த நாடு என்ற நிலைக்கு சுருக்குவதை சமீர் அமின் ஏற்றுக் கொள்ளவில்லை. இது தவறான முறை என்கிறார். வெறும் தோற்றங்களைக் காட்டி சாரத்தை (Essence) மறைப்பது தான் இந்த முறை. உலக முறைமையின் பாகமாக அமையும் ஹொங்கொங் அல்லது தைவான் பெறும் வகிபாகம் என்ன என்பதே கேள்வி

**ii) உள்ளக இயக்கு ஆற்றல் (Internal dynamism)**

சார்பு நாடுகளில் உள்ளக இயக்க ஆற்றல் இல்லை என்பது அனுமானம். ஆதலால் அங்கு ஏற்படும் மாற்றங்கள் மையத்தின் செயற்பாடுகள் மூலம் விளக்கப்பட வேண்டியவை.

**iii) அமைப்பியல் இயல்புகள் (Structural Features)**

நபர் ஒருவரிற்கான உற்பத்தி (Production per capita) போன்ற அளவு கோல்கள் விருத்தி ஏற்பட்டதை ஆதாரப்படுத்தலாம். ஆனால் இவை அமைப்பியல் இயல்புகளை மறைக்-

கும் அளவு கோல்கள் ஆகும். சார்புநாடு ஒன்றின் வளர்ச்சியில் திடீர் உலுப்பல் (Sudden Jerk) நிகழலாம். அதனை அடுத்து திடீர் முட்டுக்கட்டைகளும், தேக்கங்களும் உருவாகலாம். இவை அமைப்பியல் மாற்றங்கள் அல்ல. சார்பு நாடுகளின் அமைப்பியல் ரீதியான மாற்றங்களை பின்வரும் முறைகளில் பரிசீலிக்க வேண்டும்.

i) ஏற்றுமதியை ஆதாரமாக கொண்ட உற்பத்தியை நோக்கிய திரிபு (Extra Verson)

ii) பிறழ்வு முறையான பெருவளர்ச்சி (Hypertrophy)

iii) மென்பொருள் கைத்தொழில் சார்ந்த திரிபு ஆகிய அடிப்படையான கட்டமைப்பு இயல்புகள் நீடிக்கின்றனவா? அல்லது நிலைமாற்றத்திற்கு உதவுகின்றனவா? என்பதே பிரச்சினை

**உலக முறைமை**

சார்புக் கோட்பாட்டின் விளக்கங்கள் உலக முறைமை, அதனுள் அமையும் மையம், சார்பு என்ற எதிர் நிலைகள் என்ற அணுகு முறை சார்ந்தவை. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இந்த எதிர்நிலை இயல்புகளை எடுத்துக் காட்டுகிறது.

| இயல்புகள் | மையம் | சார்பு மண்டலம் |
|---|---|---|
| 1 | உள்நாட்டுச் சந்தையின் விரிவாக்கத்தின் மூலம் விருத்தி பெற்றது. | வெளியில் இருந்து வந்த தாக்கத்தினாலும் உலகச் சந்தையின் பாதிப்பினாலும் மாற்றம் பெற்றது. |
| 2 | முன்னைய உற்பத்தி முறைகளை பூரணமாக அழித்து முதலாளித்துவ முறை நாட்டின் சகல துறைகள், பிராந்தியங்கள் எங்கும் வியாபித்தல் | பல்வகை உற்பத்தி முறைகள். ஒருங்கே இருத்தல். ஆனால் முதலாளித்துவ முறை மேலாதிக்கம் பெற்று இருத்தல். |
| 3 | சமூக உறவுகளில் ஓரினத்தன்மை | சமூக உறவுகளில் பன்மைத்துவம் |
| 4. | தொழிலாளி - முதலாளி வர்க்க போராட்டம் மேலோங்குதல். வர்க்க முரண் இரு கூறாக சமூகத்தை பிரித்தல். | இரு கூறான சமூகப் பிளவு இல்லை. |
| 5. | தேசிய முதலாளித்துவம் வளர்ச்சி | அந்நிய முதலாளித்துவத்தின் ஆதிக்கம் பணிந்து போகும் உள்நாட்டு முதலாளித்துவம் |
| 6. | சுயத்துவமான பொருளாதாரம் | தங்கியிருக்கும் சார்புப் பொருளாதாரம் |

**குறைகள்**

சார்புப் பொருளியல் கோட்பாட்டின் பொதுவான குறைகள் பல சமீர் அமின் கோட்பாட்டிலும் வெளிப்படுகின்றன.

1. ஆய்வுக்கான அலகாக தனி நாடுகளை எடுத்துக் கொள்வதை சமீர் அமின் தவிர்ப்பதனால் வர்க்கப் போராட்டம் பற்றிப் பேசும் போதும் உலகு தழுவிய மட்டத்திலான வர்க்கப் போராட்டம் பற்றியே பேச வேண்டி ஏற்படுகிறது. அப்படியானால் உள்நாட்டு மட்டத்தின் அரசியல் கொள்கையை வகுப்பது எவ்வாறு என்பது பிரதான கேள்வியாக உள்ளது. இதற்குப் பொருத்தமான விடை இல்லை.

**சார்புக் கோட்பாட்டின் விளக்கங்கள் உலக முறைமை, அதனுள் அமையும் மையம், சார்பு என்ற எதிர் நிலைகள் என்ற அணுகு முறை சார்ந்தவை.**

2. சார்பு நாடுகள் தப்பிக் கொள்ள முடியாத வலை ஒன்றினுள் அகப்பட்டுள்ளன. குறைவிருத்தி அவற்றின் தலைவிதி. இதற்கான மாற்றுவழி ஏகாதிபத்தியத்துடனான பிணைப்புக்கள் அனைத்தையும் முறித்துக் கொள்வதாகும் என்ற வகையில் சமீர் அமின் கருத்தை விளக்க முடியும். இவ்விளக்கத்தை கம்போடியா வழியில் சென்று பேரழிவுக்கு உள்ளாவது தான் பிணைப்புக்களை அறுக்கும் இந்த வழியா எனச் சிலர் விமர்சித்தனர்.

3. மார்க்சியம் உற்பத்தி முறை பற்றிய பரிசீலனையில் ஆரம்பிக்கும் முறையிலைக் கொண்டது. சமீர் அமின் போன்றவர்கள் சந்தை உறவுகளான வர்த்தகம், பரிவர்த்தனை (Exchange Relation) என்ற உறவுகளின் மட்டத்திற்கு ஆய்வுகளை விஸ்தரித்து மார்க்சியத்தை திரிபுபடுத்தியுள்ளனர் என்று விமர்சிக்கப்பட்டுள்ளது.

சார்ப்புக் கோட்பாட்டாளர்களில் முக்கியமான ஒருவர் சமீர் அமின். லத்தின் அமெரிக்காவை தளமாகக் கொண்டு தோன்றிய இக் கோட்பாட்டை எகிப்தியரான சமீர் அமின் ஆபிரிக்க நாடுகளின் அனுபவத்திற்கு உரியதாக விஸ்தரித்தார். மேற்கு ஆபிரிக்க நாடுகளின் காலனித்துவ காலப் பொருளாதார வரலாறு பற்றிய விரிவான ஆய்வுகளாக இவரது நூல்கள் அமைந்தன.

இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் மார்க்சியப் பொருளியல், நவமார்க்சியம் ஆகிய விடயங்கள் பற்றிய விவாதம் ஒன்றை சமீர் அமின் பெயரைக் குறிப்பிடாமல் நடத்துவது சாத்தியமில்லை. அவரின் எழுத்துக்கள் கவனிபுக்குரியனவாய் இருந்து வருகின்றன.

76 பக்கத் தொடர்ச்சி

புதிய வகையான உலகமயமாதல் வேண்டும் என்று மற்றுமொரு பொருளியல் பத்தி எழுத்தாளர் (News week) Rana Forroohar கூறுகின்றார். G - 8 நாடுகள் பிரேசில், சவுதி அரேபியா, இந்தியா, சீனா போன்ற நாடுகளையும் தற்போதைய மீட்டு எடுப்பு நடவடிக்கைகளுக்கு கைகொடுக்குமாறு வேண்டுகோள்விடப்பட்டதினை வைத்து இவர் இப்படிக் கூறுகின்றார். இவர் உலகின் நாணயவாதத்தில் அமெரிக்காவின் சுப்பர் ஸ்டார் நிலை முடிவடைந்துள்ளது என்கிறார். (End of America as a Financial Super Power) நோபல் பரிசு பெற்ற யோசெப் ஸ்டிக்லிஸ் கூறுகின்றார். நிதிசார் தளர்த்துகையும் ஒழுங்குபடுத்தா வாதமும் நிதிச் சந்தையில் சூதாட்டக் கலாசாரம் ஒன்று தோற்றுவிக்கபட்டு வருகிறது (It Created a Culture of Gambling.) மேலும் George Soros என்னும் உலகின் பிரபல்ய முயற்சியாளர். சந்தைகள் தாமே சமநிலை அடைவதில்லை. அடிப்படை நிலைமைகளையும் அவை பிரதிபலிப்பதில்லை. பண வழங்கலை கட்டுப்படுத்துவதற்கும் அது போதுமானதில்லை. ஆகவே ஒழுங்குபடுத்தல் முறைகள் சந்தைகள் தோல்வியடைவதினையும் பெரிதாவதினையும் தடுக்கும் என்கின்றார். ஆகவே ஒழுங்குபடுத்தல் முறைகள் சந்தைகள் தோல்வியடைவதினையும் பெரிதாவதினையும் தடுக்கும் என்கின்றார்.

மேற்படி நிலைமைகள் நவதாராள வாத பொருளாதாரத்தின் வீழ்ச்சினையே கோடிகாட்டி நிற்கின்றது. முதலாளித்துவ பொருளாதாரம் தனது கருப்பையினுள் அதன் வீழ்ச்சிக்கான சுரண்டல் லாப நோக்கம். லாபங்கள் ஓரிடத்தில் திரட்சியடைத்தல் என்பனவற்றினால் அது நெருக்கடிக்குப் பின் நெருக்கடியை எதிர் நோக்கும். இதன் மறு பக்கம் என்னவெனில் மாற்று பொருளாதார முறைமையொன்று இதனிடத்திற்கு அவசியம். முதலாளித்துவ பொருளாதார முறைக்கு மாற்றான பொருளாதார முறை அவசியம்.

The Other World is Possible.



# புதிய வலதுசாரி அரசியலும் பொருளியல் எதிர்ப் புரட்சியும்


**க. சண்முகலிங்கம்**

1980க்களில் ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரிட்டன், (அன்றைய கால) மேற்கு ஜேர்மனி ஆகியவற்றில் வலதுசாரி அரசாங்கங்கள் பதவிக்கு வந்த போது உலக அரங்கில் பொருளியல் கொள்கையிலும் சிந்தனையிலும் புதிய மாற்றங்கள் தோன்றின. உலக அரங்கில் தோன்றிய இந்தக் கொள்கை மாற்றத்தை நியோகிளாசிக்கல் எதிர்ப் புரட்சி (Neo-Classical Counter Revolution) என்று கூறுவர். இந்தப் பொருளியல் கொள்கை மாற்றத்தினை பிரித்தானியாவின் பிரதமர் மார்கிரட் தட்சரும் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியான றொனாலட் றீகனும் தொடக்கி வைத்தனர். இவர்களின் அரசியல் புதிய வலதுசாரி அரசியல் (New Right) என்னும் அரசியல் கோட்பாடாகவும் அவர்கள் முன்வைக்கப்பட்ட பொருளியல் கொள்கை அக்காலம்வரை செல்வாக்கு பெற்றிருந்த கெயின்சிய பொருளியல் சிந்தனைக்கு மாற்றுக்கருத்தாகவும் தோற்றம் பெற்றது. தென்னாசியாவில் 1980ம் ஆண்டளவிலேயே ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசு இலங்கையில் இக்கொள்கையை புகுத்தியது. 1990க்களில் இந்தியா நேருவிய பொருளியல் முறைமையில் இருந்து விலகி பொருளியல் சீர்திருத்தங்களை மேற்கொண்ட போது புதியவலதுசாரிகளால் முன் வைக்கப்பட்ட கோட்பாடுகளைத் தழுவிக் கொண்டது.

ஒரு நாட்டின் பொருளியல் கொள்கை மாற்றங்கள் அரசியலுடன் மிக நெருங்கிய சம்பந்தமுடையதாய் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. அரசியல் பொருளியல் நோக்குமுறை (Political Economic Approach) பொருளியலை அரசியல் பின்னணியில் வைத்து ஆராயும். நியோகிளாசிக்கல் எதிர்புரட்சி என்ற தொடர் மிக அர்த்தச் செறிவுடையது. புழம்பொருளியலாளர்களின் கோட்பாட்டைப் புத்தமைப்புச் செய்த கோட்பாட்டுப் பிரிவினரை நியோகிளாசிக்கல் பொருளியலாளர் என்று அழைப்பர். தமிழில் அதனை புதிய பழம் பொருளியலாளர் சிந்தனை முறை என்பர். 1970க்களில் லத்தின் அமெரிக்க அமைப்பியலாளர்களும் அவர்கள் வழிவந்த சார்பு பொருளியல் கோட்பாட்டை (Dependency Theory) முன்வைத்தனர். இதனைவிட கெயின்சிய பொருளியல் சிந்தனையும் நவீனமயமாதல் போன்ற அபிவிருத்திக் கோட்பாடுகளும் செல்வாக்குப் பெற்றிருந்தன.

1980க்களில் நியோகிளாசிக்கல் கோட்பாடு உலகமட்டத்தில் பலம் பெற்றமைக்கு பிரதான காரணம் சர்வதேச பொருளியலில் பிரதான வகிபாகத்தை பெறும் இருநிறுவனங்களான உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் (IMF) என்ற இரண்டும் இக்கோட்பாட்டாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தமையாகும். அது மட்டுமல்ல ஐ.நாதாபனத்தின் அங்கங்களான உலகதொழிலாளர் தாபனம் (ILO) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் என்னும் யு.என்.டி.பி (UNDP) ஆகியன முற்போக்கான செயல்திட்டங்களை மூன்றாம்

**ஒரு நாட்டின் பொருளியல் கொள்கை மாற்றங்கள் அரசியலுடன் மிக நெருங்கிய சம்பந்தமுடையதாய் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன.**



உலகநாடுகளில் நடைமுறைப்படுத்தின. அங்ராட் (UNCTAD) என்ற அமைப்பு மூன்றாம் உலகின் ஒருமித்த எதிர்ப்புக் குரலை வெளியிட்டு வந்தது. நியோகிளாசிக்கல் எதிர்ப்புரட்சி ஐ.நா துணை நிறுவனங்களின் செயற்பாடுகளை மழுங்கடிக்கும் கொள்கைத் திட்டத்தை உலக அரங்கில் பரப்பியது. உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம், W.T.O எனப்படும் உலகவர்த்தக அமைப்பு என்ற மூன்று நிறுவனங்களின் அதிகாரம் இன்று சர்வதேச ரீதியில் வலுப்பெற்றுள்ளது.

பொருளியலின் சர்வதேச அரசியல் பின்னணியை மட்டுமல்லாது பொருளியல் சிந்தனையாளர்களின் பெயர்களையும் அறிந்து கொள்ளுதல் எமது புரிதலுக்கு துனண செய்யும். பீட்டர்பவர் (Peter Bauer) டிபாக்லால் (Deepak lal) இயன்லிட்டில் (Ian Little) ஹரியோன்சன் (Harry Joahnson) ஆன்குருகர் (Anne Kruger) ஆகியோர் நியோகிளாசிக்கல் கோட்பாட்டை 1980க்களிலும் 1990க்களிலும் புத்துருவாக்கம் செய்தனர். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி போன்ற நாடுகளில் தோன்றிய புதியவலதுசாரி சிந்தனையை மில்டன் பிரிட்மன் (Milton Freedmon) வெளிப்படுத்தினார். மூன்றாம் உலக அபிவிருத்திப் பொருளியல் என்ற வகையில் இக்கோட்பாட்டின் வடிவமைப்பு மேற்குறித்த பொருளியலாளர்களால் நிறைவேற்றப்பட்டது.

நியோகிளாசிக்கல் என்ற சொல் பற்றிய விளக்கத்தை அறிந்து கொள்ளுதல் அவசியம். அடம்சிமித், றிக்காடோ ஆகியோர் பழம் பொருளியலாளர் என்று அழைக்கப்படுவர். இவர்களுடைய பொருளியல் சிந்தனைக்கு தமது புதிய விளக்கங்களால் வளம் சேர்த்த அல்பிரட்மார்சல் நியோகிளாசிக்கல் பொருளியலாளர் ஆவர். பொதுவாசகர்களுக்கான நூல்கள், கட்டுரைகளில் நியோகிளாசிக்கல் என்றும் கல்வி நிறுவனங்களிற்கான பாட நூல்களில் புதிய பழம் பொருளியலாளர்கள் என்றும் அழைக்கப்படும் இக்கோட்பாட்டினரின் சிந்தனைகள் சுமார் 1930வரை பொருளியல் சிந்தனையில் கோலாச்சின. 1930க்களில் கெயின்ஸ் என்னும் பொருளியல் சிந்தனையாளர் நியோகிளாசிக்கல் சிந்தனையின் அடிப்படைகளைத் தகர்த்தார். இதனை கெயின்சியப் புரட்சி (Keyesian Revolution) என்பர். 1930-1980 வரை கெயின்சிய பொருளியல் அசைக்க முடியாத பலம் பெற்ற கோட்பாடாக விளங்கியது. மூன்றாம் உலக நாடுகளிலும் கெயின்சிய பொருளியல் சிந்தனையின் அணுகுமுறைகளும் பொருளியல் நடைமுறைகளும் செல்வாக்கு பெற்றன. அக்கட்டத்தில் தான் இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிட்டவாறான நியோகிளாசிக்கல் எதிர்ப்புரட்சி தோன்றியது. புதிய சிந்தனையை உலகவங்கியும் ஐ.எம்.எவ் எனப்படும் சர்வதேச நாணய நிதியமும் உலகளாவிய ரீதியில் முன்னெடுத்துச் சென்றன. சந்தை பற்றிய அடிப்படைகளுக்கே திரும்பிச் செல் என்று கூறும் இக்கோட்பாட்டை சந்தை அடிப்படை வாதம் (Market Fundamentalism) என்றும் கூறுவர்.

நியோகிளாசிக்கல் கோட்பாட்டைப் 'நியோலிபரலிசம்' என்ற பெயராலும் அழைப்பர். லிபரலிசம் என்பது தாராண்மை வாதம் எனப்படும். தாராண்மைவாதப் பொருளியல் சிந்தனையுடன் சம்பந்தமுடையது. தாரண்மைப் பொருளியலின் புதிய வடிவமாக அமைந்த கருத்துக்களை நியோலிபரலிசம் என்று அழைப்பதன் காரணம் இதுவே. தாராண்மை அரசியலையும் பொருளியலையும் இணைத்தவர் எவ்.ஏ.ஹெய்க் (F.A.Hayek). இவரை தாராண்மை வாதி என்றால் நியோலிபரலிசத்தை தொடக்கியவர் மில்டன் பிரிட்மன் ஆவர். தனிநபர் சுதந்திரத்தை நிராகரிக்கும் பொரு-

நியோகிளாசிக்கல் கோட்பாட்டைப் 'நியோலிபரலிசம்' என்ற பெயராலும் அழைப்பர். லிபரலிசம் என்பது தாராண்மை வாதம் எனப்படும். தாராண்மைவாதப் பொருளியல் சிந்தனையுடன் சம்பந்தமுடையது.

ளியல் முறைமையை 'அடிமைத்தனத்தின் பாதை' (The Road To Serfdom) என்ற நூல் மூலம் ஹெய்க் கண்டனம் செய்தார். இவரது நூலை விமர்சித்த இன்னொரு நூலாசிரியர் The Road To Reaction - பிற்போக்குத் தனத்தின் பாதை என்றார். நியோகிளாசிக்கல் கோட்பாட்டின் அரசியல் பின்னணியை விளக்குவதற்கே இவை பற்றிக் குறிப்பிட்டோம். நியோகிளாசிக்கல் கோட்பாடும் நியோலிபரலிச கோட்பாடும் இடதுசாரிகளின் வன்மையான கண்டனங்களுக்கு ஆளாகின. வலதுசாரி அரசியல் பொருளியலையும் நியோகிளாசிக்கல் பொருளியல் கோட்பாட்டினையும் தடையற்ற சந்தை (Free Markets) என்னும் கருத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம். மூன்றாம் உலக நாடுகளில் தடையற்ற சந்தையினை உருவாக்குவதற்கு என்ன செய்ய வேண்டும்?

- அரசு உரிமையாகவிருக்கும் கைத்தொழில் வர்த்தக முயற்சிகளை தனியார் மயப்படுத்த வேண்டும். (Privatisation)
- சுதந்திரமான கட்டுப்பாடற்ற ஏற்றுமதி இறக்குமதி கொள்கைகளைச் செயல்படுத்த வேண்டும். இதன் மூலம் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கலாம். ஏற்றமதி வர்த்தகம் பெருக்கமுறும், சந்தை விரிவுறும்.
- முன்னேறிய நாடுகளின் முதலீட்டாளர்களை முதலீடு செய்வதற்கு ஊக்குவித்தல் வேண்டும். இதனால் முதலீடு பெருகும், வெளிநாட்டு மூலதனம் உட்புகும்.
- கட்டுப்பாடுள்ள மூடுண்ட பொருளாதார முறைகளைக் கொண்டிருந்த இலங்கை (1970-77) போன்ற நாடுகளில் அரசாங்க ஒழுங்கு முறைகள், கட்டுப்பாடுகள் (Regulations) அளவுக்கு அதிகமாக இருந்தன. தடையற்ற சந்தையின் விருத்திக்கு இக்கட்டுப்பாடுகளை நீக்குதல் அவசியம்.
- விலைத்திரிபு (Price Distortions) நீக்கப்பட வேண்டும். கேள்வி நிரம்பல் சக்திகளினை சுதந்திரமாகச் செயற்படவிடாதவிடத்து விலைத்திரிபு ஏற்படும்
    - உற்பத்தி பொருள் சந்தை
    - காரணிச் சந்தை
    - நிதிச் சந்தை (Financial Market)

  என்ற மூன்று துறைகளிலும் விலைத்திரிபுகள் நீக்கப்பட வேண்டும்.

மேற்குறித்தவாறான சீர்திருத்த நடவடிக்கைகள் மூலமே தடையற்ற சந்தைப் பொருளாதாரம் உருவாகும். அதனால் வினைத்திறன் அதிகரிக்கும். பொருளியல் விருத்தியும் ஏற்படும்.

நியோகிளாசிக்கல் பொருளியல் கோட்பாடு விருத்திக் குறைவுக்கான பிரதான காரணங்கள் அரசின் தலையீடு, அரசின் வினைத்திறன் குறைவு, அரசுதுறையின் தலையீட்டினால் அதிகரிக்கும் ஊழல் என்று கூறுகிறது. இவ்வகையில் கெயின்சியப் பொருளியல் வாதங்களுக்கு எதிரான கருத்துக்களை நியோகிளாசிக்கல் கோட்பாட்டினர் முன்வைத்தனர். முன்னேறிய நாடுகள் காலனித்துவ ஏகாதிபத்திய ஊடுருவல்கள் மூலம் மூன்றாம் உலகை கொள்ளையடித்த வரலாற்றின் ஊடே அதன் குறை விருத்தியை சார்புக் கோட்பாடு விளக்கியது. நியோகிளாசிக்கல் பொருளியல் பிரச்சினையின் மூல காரணங்கள் நாட்டுக்கு வெளியே உள்ள முறைமை (System) யில் அல்ல, நாட்டுக்கு உள்ளேதான் உள்ளன என்கிறது. அரசின் தலையீடுதான் மூன்றாம் உலக நாடுகளின் விருத்தியைத் தடுக்கிறது.

- உலக பொருளாதார ஒழுங்கமைப்பை மாற்றுதல்
- உள்நாட்டில் அமைப்புச் சீர்திருத்தங்கள் மூலம் இரட்டைத் தன்மையை (Dualism) நீக்குதல்.
- வறுமை ஒழிப்பு, மனித வள அபிவிருத்தி

போன்ற விடயங்களை நியோகிளாசிக்கல் கோட்பாடு ஏற்பதில்லை. 'தடையற்ற சந்தை, தடையற்ற பொருளாதாரம்' "சந்தையின் மந்திர சக்தி" (Magic of the Market Place) 'கட்புலனாகாத கை' (Invisible Hand) ஆகிய தொடர்கள் குறிக்கும் தடையற்ற சந்தைப் பொருளாதாரத்தை நியோகிளாசிக்கல் கோட்பாடு ஆதரிக்கிறது. நியோகிளாசிக்கல் கோட்பாட்டை அதன்

**சுதந்திரமான கட்டுப்பாடற்ற ஏற்றுமதி இறக்குமதி கொள்கைகளைச் செயல்படுத்த வேண்டும். இதன் மூலம் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கலாம். ஏற்றமதி வர்த்தகம் பெருக்கமுறும், சந்தை விரிவுறும்.**



மூன்று அம்சங்கள் மூலம் மேலும் விளக்கலாம் என்று ரொறாடோ (Torado) கூறுகின்றார். அவை:

1. தடையற்ற சந்தை ஆய்வு (Free Market Analysis)
2. பொதுத் தேர்வு (Public Choice Theroy)
3. சந்தை நட்பு அணுகுமுறை (Market Friendly Approach)

**தடையற்ற சந்தை ஆய்வு:**

சந்தைதான் வினைத்திறன் வாய்ந்தது. சந்தையில் தலையீடு செய்தால் அதன் வினைத்திறன் கெடும். முதலீட்டாளர்களுக்கு சரியான சமிக்கைகளை (Signals) கொடுக்க வேண்டும். அந்தச் சமிக்கைகள் உற்பத்திப் பொருள் (Product Market) சந்தையில் இருந்துதானே கிடைக்க முடியும்? முதலீட்டாளர்களின் முதலீடு இந்த சமிக்கைகளைக் கொண்டு செயற்படும் போது தொழில் சந்தை (Labour Market) அதற்கு ஏற்ப இயங்கும்; பதிற்குறிகாட்டும். எதை உற்பத்தி செய்வது? வினைத்திறனுடனும் சிக்கனத்துடனும் உற்பத்தி செய்யும் முறைகள் எவை? என்பன உற்பத்தியாளர்களால் தீர்மானிக்கப்படும். இதன் விளைவாக உற்பத்தி பொருட்களின் விலைகளும் உற்பத்திக் காரணிகளின் விலைகளும் திரிபு இல்லாமல் உண்மை நிலையை வெளிப்படுத்தும். உதாரணமாக பொறியியலாளர்களுக்கும், கணக்காளர்களுக்கும் அருமை (Scarcity) இருப்பின் உழைப்புச் சந்தையில் அவர்களிற்கான விலை (சம்பளம்) உயர்வாக இருக்கும். பொறியியலாளர்கள் கணக்காளர் உட்பட சம்பளங்கள் பற்றிய உச்ச எல்லைகள், தாழ் எல்லைகள் போன்ற கட்டுப்பாடுகளை அரசு விதிக்குமானால் காரணிச் சந்தையின் சுதந்திர செயற்பாடு தடைப்படும் என்பதே சந்தை ஆய்வு எடுத்துக் காட்டுவது. இதுவே சந்தை வினைத்திறன் (Market EFFI-CIENCY) விருத்திக்கான முன் நிபந்தனை.

***அரசு நடவடிக்கைகள் பிரஜைகளின் சுயநல-நோக்கின் வழி நடத்தப்படும். இறக்குமதி உத்தரவுப் பத்திரம், அந்நியச் செலவாணி அனுமதி ஆகியன தொடர்பான கொள்கைகள் நடைமுறைகள் தத்தம் சுயநலத் தேவைகளுக்கு ஏற்றதாக இருப்பதை பிரஜைகள் எதிர்பார்ப்பர்.***

## பொதுத் தெரிவு
## (Public Choice Theory)

அரசு பொருளியலில் தலையிடக்கூடாது என்பது மட்டுமல்ல அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செய்யக்கூடியது ஏதாவது இருக்கிறதா என்ற கேள்வியை இக்கோட்பாடு முன்வைக்கின்றது. அரசாங்கத்தினால் எதையுமே சரியாகச் செய்ய முடியாது Government Can do Nothing Right என்பதே இக்கோட்பாட்டினரின் வாதம். அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள் (Bureaucrats) பிரஜைகள் ஆகிய தரப்பினர்தான் முக்கிய வகிபாகம் பெறுவோர். இவர்களை ஒருபுறமும் அரசை மறுபுறமுமாக வைத்துப் பார்ப்போம். என்ன நடக்கிறது? இந்த நான்கு தரப்புமே சுயநல நோக்கிலேயே (Self Interested Perspective) தம் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும், அப்படித்தான் நடக்கும் என்கின்றனர் இக்கோட்பாட்டாளர்கள்.

**பிரஜைகள்:** இவர்கள் தமது அரசியல் பலத்தை உபயோகித்து எவ்வளவு சலுகையைப் பெறலாம் என்று பார்ப்பார்கள். அரசு நடவடிக்கைகள் பிரஜைகளின் சுயநலநோக்கின் வழி நடத்தப்படும். இறக்குமதி உத்தரவுப் பத்திரம், அந்நியச் செலவாணி அனுமதி ஆகியன தொடர்பான கொள்கைகள் நடைமுறைகள் தத்தம் சுயநலத் தேவைகளுக்கு ஏற்றதாக இருப்பதை பிரஜைகள் எதிர்பார்ப்பர்.

***அரசியல்வாதிகள்:*** இவர்களுக்கு பதவி முக்கியம். பதவியால் கிடைக்கும் அதிகாரம் முக்கியம். இவற்றைக் குறியாகக் கொண்டே இவர்கள் செயற்படுவார்கள். அரசாங்க வளங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதை அவர்கள் தம் சுயநலநோக்கின்படியே செய்வார்கள். அரச அதிகாரிகளும் தமது பதவி, சம்பளம், பதவியுயர்வு அதிகாரம் உள்ள பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ளல் ஆகிய நோக்கங்களோடு லஞ்சம் பெறுதல், சலுகைகள் விரும்பும் நபர்களுக்கு உதவுதல்

மூலம் அரச அதிகாரத்தையும் வளங்களையும் பிரயோகிப்பர். அரசும் தன்பங்கிற்கு வேண்டியளவு எடுத்துக் கொள்கின்றது. தனியார் உடமைகளைத் தன் சொத்தாக மாற்றுகின்றது. வரியை அறவிடுகின்றது. ஆகவே பொருளாதாரத்தை அரசு எப்படி இயக்கும் என்பதை பொதுத் தெரிவு (Public Choice) கோட்பாடு மேற்குறித்தவாறு விளக்குகின்றது. எல்லாத் தரப்பினரும் சுயநலன்களை நோக்கிச் செயற்படுகின்றனர். ஆகையால் பொதுநலனைக் கவனிப்பார் எவரும் இல்லை. இதனை New Political Economy Approach புதிய அரசியல் பொருளாதார அணுகுமுறை என்றும் கூறுவர். பொருளாதார விடயங்களில் அரசின் பங்கு, வகிபாகம் எந்தளவுக்கு குறைவாக இருக்குமோ அதுதான் உத்தமமான கொள்கை. Minimal Government is the Best Government என ஆங்கிலத்தில் கூறப்படும் கூற்றின் பொருளியல் அர்த்தம் இதுவே.

### சந்தை நட்பு அணுகுமுறை

மேலே குறிப்பிட்ட பொதுத்தெரிவு அரசினால் நல்லதைச் சரியானதைச் செய்யமுடியாது என்று வாதிடுவதைக் கண்டோம். சந்தை அணுகுமுறையும் குறைவிருத்தி நாடுகளில் (Imperfections) பின்பற்றப்படுகிறது. ஆகையால் சந்தை நட்புள்ள தலையீடுகள் சந்தைத் திரிபுகளைத் திருத்த உதவும். உதாரணமாக,

- பௌதீக உட்கட்டமைப்புக்கள்
- சமூக உட்கட்டமைப்புக்கள்
- சுகாதாரசேவைகள்
- கல்விநிறுவனங்கள்

ஆகியவற்றில் அரசு முதலீடுகளை நெறிப்படுத்த வேண்டும். அரசு தானே முதலீடுகளைச் செய்யவேண்டும். சந்தையின் தோல்வி (Market Failure) மூன்றாம் உலகநாடுகளில் பரவலாக உள்ளதால் அரசின் தலையீடு சிலவிடயங்களில் தேவைப்படுகின்றது என்பதை சந்தை நட்பு அணுகுமுறை ஏற்றுக்கொள்கின்றது. தகவல்கள் இல்லாமையும், அவற்றைப் பெறமுடியாமையும் முதலீடுகளை ஒழுங்குபடுத்தல் (Investment Coordination), தொழில்திறன்விருத்தி, கல்வி முன்னேற்றம், சூழல் அழிவு போன்ற விளைவுகள் ஆகியன அரசின் தலையீட்டினால் மேம்படுத்த முடியுமெனக் கூறப்படுகின்றது.

மேற்குறித்த மூன்று அமிசங்களும் பற்றிய விளக்கங்கள் நியோகிளாசிக்கல் கோட்பாட்டைப் புரிந்து கொள்ளத் துணைசெய்கின்றன. நியோ கிளாசிக்கல், நியோ லிபரல் கோட்பாடுகள் மூன்றாம் உலகைப் பெறுத்தவரை இருமுகங்களைக் கொண்டவை என்று கூறலாம்.

1. சர்வதேச நாணயநிதியத்தின் ஊடாக வரும் SAP எனும் அமைப்புச் சீராக்கற் கொள்கை (Structural Adjustment Programme) என்ற முகம். இது கடுமையான முறையில் தடையற்ற சந்தை முறைமையை அமுல்செய்யும்படி மூன்றாம் உலக நாடுகளைக் கோருகின்றது.

2. வறுமைத்தணிப்பு, கல்விவிருத்தி, மனிதவளவிருத்தி, உட்கட்டமைப்புக்களில் முதலீடு ஆகிய உலகவங்கியின் திட்டங்கள் மூலம் வெளிப்படும் முகம் இன்னொருவகையானது. வறியோர்சார்பு (Pro_Poor) கொள்கைகளையும் உலகவங்கி முன்வைக்கின்றது.

அரசின் தோல்வி (Failure of State) என்பதில் ஆரம்பிக்கும் நியோகிளாசிக்கல் வலதுசாரிப் பொருளியல் கோட்பாடு சந்தையின் தோல்விகளையும் ஏற்றுக் கொண்டு SAP செயல்திட்டத்திற்கு மாறான வறியோர் சார்புக் கொள்கைகளையும் தழுவிக் கொள்கின்றது என்றே இதனை விளக்குதல் முடியும்.

எவ்விதமிருப்பினும் 1970களில் முன்வைக்கப்பட்ட அடிப்படைத்தேவைகள் (Basic Needs) முதல் இன்றைய வறுமைத் தணிப்புத் திட்டங்கள் வரையானவை பொப்புலிசம் (Populism) எனப்படும் மக்கள் வாதமே அன்றி இடதுசாரிக் கொள்கைகள் அல்ல என்ற விமர்சனம் ஏற்கக்கூடியதே.

# உலகப் பொருளாதார நெருக்கடி பற்றிய மார்க்சியக் கண்ணோட்டம்

ஏ.சி. ஜோர்ச்

மார்க்சிய பொருளியல் அறிஞர்களும், மார்க்சிய வாதிகளும் மூன்றாம் உலகப் பொருளியளார்கள் சிலரும் Economic Downturn or Economic Recession or Financial Crisis எனப் பல சொற்களால் அழைக்கப்படும் இந் நெருக்கடியினை வேறொரு வகையில் பார்க்கின்றதுடன் அதுவே உண்-மையான காரணம் எனவும் விளக்குகின்றனர். இவர்களுள் மிகப் பிரபல்யமான பொருளியளாளர் சமீர் அமின் (Samir Amin) என்பவர் முக்கியமானவர். அவருடைய கருத்துக்களே பெருமளவு மார்க்சிய கண்ணோட்டம் என்பதில் பதிவு செய்யப்படுகின்றது.

தற்போதைய நெருக்கடிக்கு அளிக்கப்பட்ட வியாக்கியானம் துணை முதன்மைச் சேவைகள் என்பதுடன் வால்ஸ்ரீட் நிதி நிறுவனங்களின் Sup Prime வணிக நடவடிக்-கைகளுமே காரணங்களாக கூறி வருகின்றனர்.

சமீர் அமினின் கருத்துப்படி முதலாளித்துவ பொருளாதாரமொன்றின் இயல்பான நெருக்கடியே இது. நெருக்கடியில் பனிப்பர்றையொன்றின் நுனிப்பகுதி மட்டுமே தற்போதைய நிதி நெருக்கடியாகும். Capitalism on tip of the Iceberg இவ் நெருக்கடி-யானது வங்கிகளின் பொறுப்பற்ற தனத்தினாலோ அல்லது கட்டற்ற சந்தையொன்றின் சுதந்திரமான Deregulatory முறையில் இயங்-குவதினாலோ ஏற்படவில்லை.

மாறாக தற்போதைய நெருக்கடியின் உண்மையான தோற்றம் புதிய நவ தாராளவாத உலகமயமாக்கல் (Neo Liberal Globalization) முறையின் தோல்வியாகும். இப்பொருளாதார முறையில் மூலதனமானது பெருமளவில் ஒரு சில நிறுவனங்களின் கைகளில் சேர்ந்துள்ளது. அல்லது மத்தியப்படுத்தப்பட்டுள்ளது. குறைந்தது உலகின் 5000 சிலர் உரிமை நிறுவனங்களிடம் மூலதனம் சிறைப்பட்டுள்ளது. தேசங்களினதும் சர்வ தேசத்தினதும் தலைவிதியினை தீர்மானிக்கும் வல்லமை இந்நிறுவனங்களிடமே காணப்படுகின்றது.

50 வருடங்களுக்கு முன்னர் இந்நிலைமை காணப்படவில்லை. மூலம் பெருமளவு Financilization மூலம் பெருமளவு லாபம் சிலர் உரிமை நிறுவனங்களிடம் போய் சேர்ந்துள்ளன. இதற்கு சந்தையில் Deregulation இவர்களுக்கு உதவியுள்ளது. தொழிலாளர்களும் மத்திய வகுப்பும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.


முதலாளித்துவ பொருளாதாரங்களில் சந்தை தோல்வியானது (Market Failures) பல நூறு வருடங்களாக காலத்திற்கு காலம் இடம் பெற்று வந்துள்ளது Crisis after Crisis அதன் பண்புகளில் ஒன்று. 3.6 மில்லியன் அமெரிக்கர்கள் தமது வீடு வாசல்களை துணை முதன்மைச் சேவைகள் Mortgage நெருக்கடியால் இழந்துள்ளனர். லாபத்தினையும் சுரண்டலையும் நோக்காக கொண்டு பொருளாதாரங்களில் இது தவிர்க முடியாதது. மிகை உற்பத்தியும் சுரண்டலும் கொண்ட பொருளாதாரத்தில் நுகர்வானது மேற்படி கீழத்தரமான வங்கி நடவடிக்கைகளால் தூண்டப்படும் பொருளாதாரமொன்றில் நெருக்கடிகள் மலிந்து காணப்படும்.

நவ தாராளவாத பொருளாதாரம் ஆபத்தின் விளிம்பிற்கு வந்துள்ளது. முதலாளித்துவ பொருளாதாரங்களால் குறிப்பாக G-8 நாடுகளால் சரிவின் விளிம்பிலுள்ள பொருளாதாரத்தினை முண்டு கொடுத்து நிமிர்த்த முடியாது போய் உள்ளமையினால் G-20 நாடுகளின் குழுவை முண்டு கொடுக்கும் அல்லது மீட்டெக்கும் G-8 நாடுகளுடன் இணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்-ளது. முதலாளித்துவ பொருளாதாரங்களினால் தனித்து செயற்பட முடியாத புதியவொரு போக்கும் தோன்றியுள்ளது.

சமீர் அமின் புதிய சர்வதேச தாபனங்களின் தேவை பற்றி விவாதிக்கின்றார். (A new Financial Global Body) இதன் கருத்து IMF, IBRD இரட்டை நிறுவனங்கள் தோல்வி அடைந்துள்ளன. புதிய தேவை Regulatory Body யின் தேவை ஏற்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக செல்வம், சூழல் பாதுகாப்பு என்பன தொடர்பாக புதிய பொருளாதார ஒழுங்கு ஏற்படுத்தப் பட வேண்டும் என்கிறார்.

(இதன் தொடர்ச்சி 70ம் பக்கத்தில்)

# சேமமடு பதிப்பகம்




## வித்தியின் பார்வையும் பதிவும்

முனைவர்.சு.வித்தியானந்தன்

ISBN : 978-955-1857-33-2 விலை : 260/-

இந்நூலில் தமிழ்ப் புலமைப் பாரம்பரியம் பற்றிய தேடுகைக்கான கூறுகள் அடையாளம் காணப்படுகின்றன. எமது புலமையின் வேர்விடுகை, அறாத் தொடர்ச்சி எவ்வாறு மேற்கிளம்பி சமூக புலமைப் பரிமாணம் பெற்று வருகின்றன என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கான சாத்தியப்பாடு-கள் காணப்படுகின்றன. பேராசிரியரது வாழ்வும் பணிகளும் மற்றும் சிந்தனைகளும் ஆய்வு நோக்குகளும் சமகாலப் பொருத்தப்பாட்டுடன் அடையாளம் காணப்பட வேண்டும். இதைச் சாத்தியமாக்கும் நோக்கிலேயே இந்நூல் வெளிவந்துள்ளது.




## வழிகாட்டலும் ஆலோசனையும்

கலாநிதி விமலா கிருஷ்ணபிள்ளை

ISBN : 978-955-1857-35-6 விலை : 500/-

இலங்கையில் திறந்த பொருளாதாரம், பூகோளமயமாக்கம் போன்ற விடயங்கள் சார்பான தெளிவான விளக்கமின்மை இளைஞரிடையே பல்வகைப்பட்ட உளவியல் சீராக்கப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் உருவாக்குகின்றது. இவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய ஆசிரியரும் பெற்றோரும் போதிய விளக்கமின்றித் தத்தளிக்கின்றனர். வழிகாட்டல் ஆலோசனை பற்றிய விளக்கங்களை இவர்கள் எல்லோரும் நிச்சயமாக அறிந்திருத்தல் வேண்டும். இந்த வகையில் இந்நூல் நான்காவது திருத்தப்பட்ட பதிப்பாக வெளிவருகின்றது.




## பின்னவீனத்துவ உரையாடல்

முனைவர் சபா.ஜெயராசா

ISBN : 978-955-1857-34-9 விலை : 260/-

ஈழத்து தமிழ்ச் சூழலில் புதிய சிந்தனைகள் சார்ந்த உரையாடல் பண்பாட்டு உணர்திறன் மிகக்குறைவு எமது மொழியின் உள்ளீடுகளை அதன் அர்த்தங்களை பொருள் கோடலை மேலும் விரிவாக்கம் செய்யவேண்டும். மாற்றங்களை உருவாக்கும் புதிய எண்ணக்கருக்களை சொல்லாடல்களை உருவாக்க வேண்டும். இந்த தொடர்ச்சியே எமது தத்துவ இலக்கிய உரையாடல்களில் புதிமரபுகளை உருவாக்கும். நமது முற்போக்கு இடதுசாரி பார்வைகள் சார்ந்த செயற்பாடுகளை விரிவாக்குவதற்குரிய மாற்றுச் சிந்தனைகள் நோக்கிய கவனஈர்ப்புக்கு இந்நூல் வெளிச்சம் பாய்ச்சுகின்றது.

சேமமடு


## சேமமடு பொத்தகசாலை

## CHEMAMADU BOOK CENTRE

UG.49,50, People's Park, Colombo -11, Sri Lanka

TEL : 011-247 2362, 232 1905 FAX : 011-244 8624

E-Mail : chemamadu@yahoo.com



Design by : mugin